1740

O;892MK54,A
NC2

118960

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

D 229/1904 III

# அல்லியரசாணி

## நாடகம்.

REGISTERED 4-MAR 1904 MADRAS.

இஃது.

மதுரைமாநகரம்

சங்கீத சாஹித்ய வேதாந்த மஹாவித்வான்
ஆறுமுகம்பிள்ளை குமாரராகிய
சுந்தர ஜெய வீர சூர தீரகவிராஜ
**கந்தசாமிபிள்ளையவர்களா**
லியற்றப்பட்டு.

சென்னை-இட்டா
**பார்த்தசாரதிநாயுடு**
அவர்களாற்றமது
ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

—*—

1 9 0 2.

MADRAS.

சென்னை-ஆச்சாரப்பன் தெரு 84-வது-செ.

(Registered Copy Right.)



உ

ஸ்ரீஜெபகணேசகுருவேதுணை.

# அல்லியரசாணி நாடகம்

——(*)*(*)——

இஃது.

சென்னை-வண்ணையம்பதி வித்வானும், சபாப்பிரசங்கியுமாகிய
இயற்றமிழாசிரியர். ம-ா-ள-ஸ்ரீ ச. இ. தோமாஸ்புலவரவர்கள்
மாணாக்கர்களிலொருவரும், இந்நூலாசிரியரின்
பிரியநண்பருமாகிய. திரிசிரபுரம்.
வீ. கந்தசாமிபிள்ளையவர்கள் கூறிய

சிறப்புப் பாயிரம்.

பார்மலி திங்கட் சுடரிரு படரும்
கார்மலிபொதுளிகடனைஞிறும்
தேனவிர்சோலைத்திரண்டபல்கனிகளும்
மாணவிர்வளமலிமதுபாய்பழனம்
சூழ்ந்த மாட கூடங்க ளோங்கும்
தாழ்ந்த சிகரம் தாழ்வீரன் துயர்வோர்
வழுத்த சித்ர வதனியோர் கூற்று
பழுத்த காத்ர காஞ்சால் பவனியில்
முத்து ரத்ன முளரியல் பச்சை
சித்தாழ் தமனியம் சிதறிடும் முன்றில்
முச்சங் கம்பொழி முகட்டலர் சிரன்
சச்சிதா னந்தன் தருமறை வழுவென
சாற்றின புலவர் போற்றிடும் சங்கம்
ஆற்றின பாண்டியர் துரைவா ழ்ரனும்
அடியார் ஞான சம்பந்த ரன்பாய்
படியா சுரத்தைப் பாடிநீக் கியவண்
டினமொய்க் குந்தார் வரையோன் இமையில்
மனமொய்க் கவிர்ந்த சிவவாக் கியனை
மாய்க்க மலர்வாய் மவிர்ந்த மறையோர்
தேய்க்க ஆகமம் செழிக்கு மாணிக்க
வள்ளலால் குதிரை வடிவாய் வளரும்
தெள்ளலம் நரியை படைத்த சிரடியும்
அறுபத்து மூன்று திருவிளை யாட்டமை
ஒருபத்தை மூன்றாய் ஒழித்தஉத்தமர்கள்
மருங்குடன்வாழ்ந்து மதித்தவிடத்து
ஒருங்குடன்சேர்ந்துமருமலர்பொழியும்

தத்வபயோதரம்பொழியத்தளிரும்
மகத்வநான்மாடக்கூடற்கண்
ஜெகத்தினிற்றமிழ்முனிஜெனித்தவர்த்தில்
பகலவனெனநாற்பாப்பண்பாடும்
சங்கீதசாஹித்தியவேதாந்த
புங்கவன்ஆறுமுகப்பிள்ளையின்ற
புத்திரசித்திரம்புகன்றநாற்பெருமை
எத்திறம்வழிநடைஞாடிக்கீர்த்தனம்
மூலப்பிரணவநாமசங்கீர்த்தனம்
பாலகபாலசுவர்கழற்கு
சேடனுஞ்சுமக்காசேணுயர்நூற்கள்
பாடினன்இலக்கியம்இலக்கணம்பயின்று
ஆசுமதுரசித்ரவித்தாரமும்
தேசுபரததாளலயக்கியானமும்
கதலிதிராக்ஷைகன்னலின்பாகமும்
புதலிநாட்டியம்புமிருசுரமும்
சற்குணம்பொறுமைசார்ந்தநன்னோன்
கற்குமாணவர்க்கின்கருணையுடையோன்
முத்தமிழ்த்தன்மைமுழுமனதிருத்தி
சித்துடைபுலவோர்சிரடிமறவான்
சபாப்பிரசங்கசண்டப்பிரசண்டன்
சபாசெனகவிகள்சாற்றிடுஞ்சிங்கம்
அவாந்தபொருளையருந்திடுந்தங்கம்
உவாந்தமதியில் உதித்திடுங்கற்பகம்
சுந்தரஜெபவீரசூர
கந்தசாமிகவிராஜதீரன்
செப்பியசரிதஞ்சோழநாட்டரசன்
கப்பிபகார்பொழியற்றுபாண்டியன்பாச்
துக்கித்தழுங்கிநலங்குஇந்திரனின்
பக்கவிண்ணப்பம்பகாந்தனர்சரதன்
குமுதமுவெனமழைகுழைந்தனபதியில்
தமுஞ்சிறுபுயலதுவழுதியிற்றழைய
வைகைக்கரையதுவானுடைபிழிய
சைகைசைவன்வழியஞ்சமைக்க
கண்டுபாண்டியன்செண்டுபிரம்பால்
கண்டுஅடிக்கநொந்துளம்மீண்டும்
நீன்முகன்கரத்தில்நீடியகோலை
நான்முகம்அறியப்பதித்துவிட்டு



தலமெனத்தாரோன்தழைவனஞ்செல்ல
நவமீனுகூடியின்நல்லருளாலே
அல்லிக்கொடியில்அரசியையெடுத்து
அல்லியரசாணியன்றிடப்பேர்
அளித்துஅமரர்அறிதரப்படாதென
விளித்துபிறையெனவிபுலையில்தோன்றி
தகப்பன்அரசைதரும்போர்புரிந்து
ஜெகத்தோர்மகிழசிறமிகீர்தியாய்
வாழ்ந்திடும்காளிவிஜயனுங்கண்ணனும்
போழ்ந்துதீர்த்தயாத்திரைபுரிந்து
இரவினிலதாலிகட்டியின்பமும்
பரவியாரும்பார்க்காதோடினர்
தெரிவையறிந்துதென்னவர்க்குரைத்து
விரைவில்லோலைகள்விடுத்தனர்மன்னர்
யாவரும்அனுசிக்கொப்பறைநெய்யில்
தாவரும்கையைத்தொட்டார்விமனும்
நெய்க்குடமொருங்காய்எடுத்தக்குடித்து
மொய்க்குழலாளொடுசமர்புரிந்தொழிந்து
சகாதேவனெனசாத்திரவல்லோன்
புகவொருகூண்டுபுரப்பித்ததனுள்
அல்லியின்னாளை அடைத்துச்சென்று
வில்லியாம்அருச்சுனவேள்மணஞ்செய்து
விருப்புகபுனந்திரபிள்ளையைப்பெற்று
தருப்பகம்போலதழைந்தக்காதையை
கற்றவர்நற்றவர்கரத்தினில்யேந்த
சொற்றவரிருக்கினும்சோர்வறகொள்வீர்
பெற்றவர்பிள்ளையைபிழையுறசொல்லார்
மற்றவர்சொல்லின்விழலதாமானும்
மதித்துப்பட்டால்முடினுமணக்கும்
துதித்துமனத்தில்வைக்கினும்செழிக்கும்
பெட்டியிற்புக்கினும்புகழதுவோங்கும்
கட்டமுகிட்டுகாட்டினுங்கமழும்
பட்டஇரும்பினில்பாய்ச்சினும்பழுக்கும்
சிட்டர்களசூழும்சென்னையம்பதியில்
பத்மநாபவிலாசப்பிரஸில்
நித்தியம்துதிக்கயாவரும்மதிக்க
பதித்தனன்நாடகமாக
கதிக்கெனநாடுங்கமலசின்னையனே

இ ஃ ஆ.
சென்னை இராயபுரம்.
சிவக்கியானி
வா. சொக்கலிங்கம்பிள்ளை மாணக்கராகிய
அ. மு. சுப்பராயலுநாயுடு அவர்களால் இயற்றிய

## சாற்றுக்கவி.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீரோங்கும் பக்தரும் முத்தரும் சிவஞான
சித்தர்சூழ் மதுரைதனில்
சிவனடிக் கன்பராய்ச் சங்கீத சாஹித்யம்
செப்புமவே தாந்தவித்வான்
தாரோங்கும் ஆறுமுகப் பிள்ளையின் றனையனுந்
தர்மகுண சம்பன்னனும்
தஞ்சமென வணைந்தவர் பொற்பாத கமலத்தை
தன்சிரசின் மேலணிந்தோன்
பாரோங்கும் ஜெடவீர சூரதீர கவிராஜ
பண்பனுங் கந்தசாமி
பாண்டியர்கள் வரபுத்திரி யல்லியர சாணியின்
பராக்ரமிகு சரிதையதனை
பேரோங்கும் நாடகம தாகவே பாடினர்
பேசுதிரு செந்தமிழினால்
பெருமைமிகு பாவலர் நாவலர்கள் கனிவுற்று
பேரானந்தம் அடையவே.

—— (*) ——

## பாயிரம்.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீரோங்கு மதுரைமா நகராளும் வேந்தர்கள்
சிம்மா சனத்திருந்து
செங்கோன் முறைப்படி யரசாளும் நாளையில்
சோழக ராஜமன்னன்
பாரோககும் மழையின்றி வறுமையின் கொடுமையால்
பாண்டிய னிடத்துரைக்க
புருமனரு ளாலிந்த்ர புரமேவி யங்ஙனம்
பகன்றனர் நடந்தவற்றை
நேரோங்கு தேவர்கோன் வருணனை யழைத்துநீ
நேமியிற் சென்றன்புடன்
நெரெநெரென மழைபொழிந் திடுகதென் மதுரையை
நோக்காமல் வருகவெனலும்




காரோங்குஞ் சப்தமே கங்களுங் கூடியே
கருதரிய சோழகனில்
காய்ந்தபயி ரோங்கியே செழித்திட வுறுவித்து
ககனமார்க் கத்திலே
தாரோங்கு மதுரையி லோர்மேக மோடவும்
தண்ணீரா றுய்ப்பெருகிலே
தாரோர்கள் வைகையணை கட்டவே யரசனும்
சாற்றினா னன்பாகவே. (௧)

அரசனுரை போலவே யம்மதுரை குடிகளும்
அவரவர்கள் பங்குவீத
அணைதனைச் செப்பனிட ஆளின்றி யோர்கிழவி
அழுதுத் தவித்திருக்கையில்
பரமனுங் காமதில் மண்வெட்டி கூடையும்
டக்குமா யெடுத்துவந்து
பாட்டிநீ யென்றனக்கு மஞ்சாதே யுன்னுடைய
பங்கனையை யான்முடிப்பேன்
தரவேணுங் கூலியெனக் கென்றுமே பிட்டெலாந்
தானபுசித் தாலந்தயாய்
சாற்றியதோர் வைகையணை கட்டா திருந்திட
தார்வேந்தன் சினமடைந்து
பிரம்பா லடித்திட பிஞ்ஞகன் மறைந்ததும்
பிழைமோச மானதென்று
பிரபலப் பாண்டியன் சஞ்சல மடைந்துதான்
பிறந்த கொடுமையாலே (௨)

தன்றுயரை யெண்ணியே சிந்தித் திருக்கையில்
சாற்றுமோர் நீர்க்காகமும்
தற்பரன் கிருபையால் தையல்போற் கர்ப்பமாய்
தார்வேந்த னிடமடைந்து
அன்புட னிருக்கநீன் முகனவ தரிக்கவே
அவன்கையில் செங்கோ லீய்ந்து
ஆரண்யந் தனிலேகி யருந்தபஞ் செய்கையில்
அம்பிகையின் கிருபையாலே
பொன்வடி வலங்காரி யல்லியர சாணியும்
பிறந்துநீன் முகனைவென்று
பொன்மதுரை யாள்கையில் விஜயன் மணந்திட
புனக்கிரனை யீன்றினிமையாய்
கன்னிநி யாய்வாழ்ந்த சரிதையை யானுமே
நாடகம்தாய்ச் சொல்வனே. (௩)


—— (*) ——





ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



ஹரிஓம்.   நன்றாக.   குருவாழ்க.   குருவே.   துணை.

# அல்லியராசாணி நாடகம்.

## காப்பு விருத்தம்.

மூலாதாரத்திற்றோன்றி மூஷிகமீதிலேறி
பாலனென்முன்னேவந்து பண்புள்ளகுருவாய்நின்று
நாலுதிஞானமார்க்கம் நுட்பமாயுபதேசித்து
சீலனேயென்னையாளுஞ் சிவகணபதியேபோற்றி.

## முருகர் ஸ்தோத்திரம்.

திருவளர்தெய்வயானை தினைபுனக்காத்தவள்ளி
இருவரோடிந்தவேளை இன்புறமயில்மீதேறி
பெருமைசேர்கையில்வேலும் பெட்புறும்வடிவிலங்க
முருகனேவருவாயென்று முன்னடிபோற்றினேனே.

## பரமசிவன் ஸ்தோத்திரம்.

மதியுடன்கங்கைசூடும் மாமுடிசடையாய்போற்றி
விதியுடன்ஹரியுந்தேடும் விமலனேயுன்றன்போற்றி
கதியென்றேயுனைத்துதித்தேன் கர்த்தனேரிஷபமேறி
எதிரேவந்தென்னைக்காப்பாய் எந்தையேபோற்றிபோற்றி.

## விஷ்ணு ஸ்தோத்திரம்.

ஆதிமூலமென்று அலறியயானைமுன்பு
நீதியோடிருந்தனன்பு நீடூழிகாலமோங்க
ஜோதியாய்வந்துகாத்த சுந்தரமிருக்தாமா
வேதியன்றனையளித்த வேதகாரணனேபோற்றி

## இஷ்டதேவதா ஸ்தோத்திரம்.

திருவளரும் பார்வதியே யுன்றன் போற்றி
திவ்யகுண லட்சுமியுன் பாதம் போற்றி
பெருமைவளர் வாணிசரஸ் வதியே போற்றி
பொன்மதுரை மீனாக்ஷி பாதம்போற்றி
தருமகுண என்னிஷ்ட தேவே போற்றி
தாழ்வுறு வல்லியின் சரித்திரத்தை
அருமையுள நாடகமா யெழுதலுற்றேன்
அன்புடனேவந்தெனக்குத் துணைசெய்வீரே.

## கணேசர் ஸ்தோத்திரம்.

பன்னிருசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட செங்கமல முகமிலங் கிடுமிக
சிங்கார ஜோதியயமே
சிவயநம வெனுமொழி நீடூழிகாலஞ்
சிறந்திலக வெனதுசாவில்
நேர்கொண்ட சங்கீத தாளமோ டிலக்கியம்
நேராக வேயமைத்து
நேர்மையாய்ப் பாடினே னுன்னையென் குருவென்று
நெஞ்சமதில் கொலுவமர்த்தி
பார்கொண்ட வரசர்புக ழல்லியின் நாடகம்
பண்பொரு ளிலக்கவடிவாய்
பாடலுற் றேயுனது பாதார விந்தமதை
பக்தியுட னேபணிந்தேன்
கார்கொண்ட மேனியில் ருத்ராக்ஷ மாலையுங்
கமழ்வெண்ணீ றொளிவீசவே
கருதுபுகழ் மூஷிகம் தேறிவந் தருள்புரி
கணேசகுரு வானவனே.

---

பொது - விருத்தம்.

ஆசையாயெந்நாளும் அடிமலர்மறவா நெஞ்சில்
பூசையேபுரிவோர்க்கன்பு புரிந்திடும்விக்கினேசா
மாசிலா மறையோர்வாழ்த்த மணிமுடிசிரசிற்றாங்கி
நேசமாயாகுவேறி நோயைபோடித்தோவந்தாரே



## கணேசர் வருகிற - தரு.

இராகம்-கல்யாணி-சாப்புதாளம்.

பல்லவி.

கணேசர் வந்தாரே—கஜமுக
கணேசர் வந்தாரே

அநுபல்லவி.

கணேசர்வந்தாரே காசினியோர்புகழ்
குணநிருக்குற்ற குறைதீர்த்துமகிழ் (கணேசர்)

அத்திமுகம்படைத்து—என்னாளும்
அன்பர்துயர் தீர்த்து
சத்திசிவகாமி தனயனுகுமருள்
முத்தியளித்திடும் மூலாதாரப்பொருள் (கணேசர்)

காசினியோர்புகழும்—ஜோதியை
மாசிலாமற் றிகழும்
பூசைபுரிந்தன்பர் போற்றிதுதிக்கவும்
வாசமாய்ருத்ராக்ஷ மாலைதுலங்கவும் (கணேசர்)

தொல்லுலகோர்மகிழ—இலக்கண
கல்வியுள்ளோர் புகழ
அல்லியரசாணி நாடகத்திற்பொருள்
சொல்லியெழுதிட செய்யவரமருள் (கணேசர்)

விருத்தம்.

அந்தரத்தமரர்களும் அரஹராவென்றுபோற்றும்
சந்த்ரசேகரனீன்ற தந்திமாமுகம்படைத்த
சுந்தரகணேசமூர்த்தி சூழ்புவியோர்கள்வாழ்த்த
வந்திதோ ஆசனத்தில் மகிழ்வுடனமர்ந்திட்டாரே.

(வ-ம) நான்மறை புகழும் ஞானரூபமாகிய வேதவிநாயகர் கொலு வமர்ந்திருக்க அடியார்கள் பூசிக்கும்விதங்காண்க.

தேவாரம்.

சத்திபின்பாலாபோற்றி சதாசிவபுத்ராபோற்றி
உத்தமகுணாளாபோற்றி உம்பர்கட்கதிபாபோற்றி
அத்திமாமுகனேபோற்றி அடியவர்க்கருள்வாய்போற்றி
நித்தியமெனதுவாக்கில் நீடூழிவாழ்வாய்போற்றி



இராகம்-சுருட்டி-அடதாளம்.

மங்களம் மங்களம்—கணேசருக்கு
மங்களம் மங்களம்

எங்குமிரக்ஷராமா எல்லோருக்குமுன்னேபோல
தங்கியிருக்கும் கணபதிக்கு
திங்களை ஜடைதனில் தரித்தசிவன்பெற்ற
மங்களநித்யகல்யாண கணபதிக்கு (மங்களம்)

வெண்ணீறுசந்தனம் மேனியிற்றுலங்கவும்
வில்வபத்திரிபுஷ்பா லங்கிர்தஞ்செய்யவும்
எண்ணிலாபக்தஜன பஜனைகொண்டாடவும்
எவ்வுலகத்தோரு மிவராடிபணியவும் (மங்களம்)

மஞ்சள்வெற்றிலைபாக்கு தக்ஷணையுமல்ல
மணதுடனேவைத்து தேங்காயுடைத்துவெள்ளை



குஞ்சரமாமுகன் கணபதிக்குத்தப்ப
கர்ப்பூரசாம்பிராணி தீபாராதனைசெய்ய (மங்களம்)

வாழைப்பழம்சர்க்கரை பயறுட்கடலையும்
வேழமுகவனுக் முன்னேவைத்து
ஏழைக்கிரங்கிடும் விக்கினேஸ்வரருக்கு
கோழையிலைறியன்பர் குட்டிக்கும்பிடவும் (மங்களம்)

அப்பளம்போளியும் அதிரசங்கொழுக்கட்டை
முப்பழம்பால்தயிர் சுண்டல்புளியோரை
செப்பொணுமகிழ்ச்சியால் சந்தோஷமாயுண்டு
எப்புவிதனனிலும் மிலருங்கணபதிக்கு (மங்களம்)

சந்த்ராஜெயவீர குமாரகவிராஜ
கந்தசாமிபிள்ளை சிந்தையில்கொலுவமர்ந்
தெந்தனுளுமவிற் றிருக்குங்கணேசரை
சிந்தித்துபூஜை நிவேதயஞ்செய்வதற்கு (மங்களம்)

பொது-விருத்தம்.

சொக்கலிங்கேசருக்கு சோராதபக்திபூண்டு
மிக்கவேசெல்லமோங்க மேதினிதன்னையாளும்
பக்குவக்கமணிசூழும் பாண்டியராஜன்வாசல்
தக்கதாய்க்காவற்செய்யுங் கட்டியக்காரன்வந்தான்



கட்டியக்காரன் வருகிற - தரு.

இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரன் வந்தான்—கனவுல்லாச
கட்டியக்காரன் வந்தான்

அநுபல்லவி.

மட்டிலாகீர்த்திசேர் மாவிலம்புகழ்ந்திட
அட்டகாசஞ்செய்து அவனியோர்களித்திட (கட்டிய)

சரணங்கள்.

சிங்காரகொற்றியிலே—வெண்ணீறணிந்து
சங்கையிலாஇடையிலே
தங்கச்சரிகைவேஷ்டி தலைப்பிற்பாகையுமின்ன
மங்காதபெருமைசேர் பாண்டியன்புகழ்பன்ன (கட்டிய)

பொன்னுருமால் சிரசில்—அணிந்துவெகு
உன்னதமாய்ச் செவியில்
மின்மினிப்பூச்சென மினுக்குங்கடுக்கன்பூட்டி
வன்மையுடனேகையில் விளங்கும்பிரம்பைபீட்டி (கட்டிய)

வாகுவலயந்தரித்தி—கையிலேந்தி
வையகத்தோரையேத்தி
தாகுஜெஞ்தகஜிக தக்கிடதோமென
ஜேஜுஜெஜந்தரிகிட ஜெணுதக்கிடதோமென (கட்டிய)

கட்டியக்காரன்சொல் விருத்தம்.

இப்புவிதன்னையாளும் இறைவனுஞ்சந்த்ரவம்சன்
மெய்ப்பொருள்ஞானமார்க்க மேவிடுங்குணசீலன்
செப்பருமதுரைவேந்தன் சிங்காரப்பணிகள்பூண்டு
கொப்பெனவமைச்சரோடு கொலுவுக்குவருகின்றாரே.

(வ-ம்) கேளுங்கள் சபையோர்களே லோகமாதாவாகிய மீனாக்ஷியம்மனை ஜெகீசனுகிய சொக்கநாதருக்கு கலியாணஞ்செய்துவைத்த சன்கமுதவித்துவரையிலும் குறையாதசெல்வமும், அழியாதகீர்த்தியும் பெற்று அகமகிழ்ந்து ஆனந்தங்கொண்டு மதுரைமாநகரை யரசாக்ஷி செய்யும் பாண்டியமஹாராஜன் மந்திரிபிரதானிகளுடன் கொலுவுக்கு வருகிற விதங்காண்க.



பாண்டியராஜன் கொலுவுக்குவருகிற-தரு. ௬

இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

தாண்டவராஜனருள்—பூண்டுமதுரைவாழ்
பாண்டியராஜன்வந்தான்

அநுபல்லவி.

ஆண்டவனடிமலர் அனுதினம்பூசித்து
வேண்டும்வரம்பெற்று வேந்தரைநேசித்து (தாண்)

சரணங்கள்.

மங்கையொர்பாகனே மான்மழுதரித்தோனே
மதிமுடியணிந்தோனே—யெனத்துதித்து
செங்கோலரசாக்ஷி செய்துமகிழ்புவி
செழிக்கச்செய்திடுவோனே
கங்காதரனெனக் காத்திடுமன்ன
தங்கமணிமகுடத் தலைமீதுமின்ன
பொங்குமிவர்புகழை புலவோர்பன்ன
எங்குங்கீர்த்தியுற்ற வங்கிஷமொன்ன (தா)

இருபுறமமைச்சருங் கட்டியக்காரரும்
இன்பொடுகுழ்ந்திடவே—வீராதிவீரர்
பொறுமையுடனிவர் பொன்னடியனுதினம்
போற்றிப்பணிந்திடவே
தருமநீதியுடன் தாரணிசெழித்து
வறுமைபிணிகளை வாட்டித்தொலைத்து
சிறுமைதுன்பங்களை செல்லெனக்கழித்து
நறுமலர்க்குழலாள் காட்டியம்பார்த்து (தா)

அதிரதசமரத மகுடவர்த்தனரும்
அன்பாய்இறைசெலுத்த—உல்லாசமாக
க்கிரவணபோலெங்குங் கீர்த்திவிளங்கிட
காசினியோர் வாழ்த்த
எதிர்த்தகோரைஜெயித்திடு பிணையிலாவீரன்
கதித்தகோபாக்கினி காலாந்தகூரன்
மதித்தபெண்களுக்கு மணிமென்னுமாரன்
துதித்திடுகுடிகளின் துயர்தீர்க்குந்தீரன் (தா)



பாண்டியராஜன் கொலு.



9

## பாண்டியராஜன் விருத்தம்.

கங்கையைச்சிரமேற்றுங்குன் கைலாசவாசாபோற்றி
மங்கையைப்பாகம்வைத்து மதிமுடியணிந்தென்றனும்
செங்கையில்மழுமானேந்தும் செல்வமேயென தசெங்கோல்
மங்காதநீத்தியோங்க மயேஸ்வராவருள்செய்வாயே.

## மந்திரி விருத்தம்.

தாண்டவஞ்செய்யுமீசன் தாளடிமறவா தன்பு
பூண்டவா மதுரையாளும் பூபாலகோவேயெங்கள்
ஆண்டவராய்விளங்கி அதிதிகள் துயரைத்தீர்க்கும்
பாண்டியவேந்தேயுந்தன் பதமனுதினமும்போற்றி.


## பாண்டியராஜன் தேசவிசாரணை.
பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாண்டியன் - சீர்கொண்ட மதுரையில் மாதமும் மாரியுஞ்
சோக பொழிகின்றதா
மந்திரி சிவனருளா லிடிமின்னல் சேர்ந்துமழை வெஞ்சனஞ்
சிறாக்க பொழியுதரசே
பாண்டியன் - தார்கொண்ட குடிகளுஞ் சோரர்பய மில்லையெனத்
தழைத்தோங்கி வாழ்கிறாரா
மந்திரி தனபதி குடிகளுங் கள்ளர்பய மின்றியே
தைரியமாய் வாழ்கிறார்கள்
பாண்டியன் - நேர்கொண்ட வெம்மீது பகைவரினி யுண்டோ
நிகழ்த்துவாய் மதிச்சிகரம்
மந்திரி நிகரிலா நிருபனே யுமதுபகை யோரின்
நிலத்திலெங் கேனுமில்லை
பாண்டியன் - பார்கொண்ட சொக்கர்மீ னாக்ஷியின் பூசைகள்
பண்பாய் நடக்குதா
மந்திரி பாரெலா மொருமிக்க வாடோறும் பூசைகள்
பக்ஷமாய் செய்கிறார்கள்.

(பாண்டியனை) மந்திரி ஆனந்தபரவசமானேன் சொக்கலிங்கம் அரு
ளுண்டானால் நமக்கொருகுறையும் வராதல்லவா!

(மந்திரி) அரசே பவபந்தமகற்றிய தவயோகிகளேற்றும் சிவமே துணையென திருந்தால யாதொரு குறையும் வந்தணுகாது அரசே.

(கட்டியன்) கேளுங்கள் சபையோர்களே சோமேக்குச் தெய்வம் அதேக்குப்பானையிலிருந்தால் குறையேது கிறையேது.



சோழராஜன் - விருத்தம்.

ஆதியேசுயம்ப்ரகாச அருளேணுமமுதேசுத்த
ஜோதியேகடரேசித்ய சொருபமேஞானவாழ்வே
கோதிலாமனத்தோரென்றும் கோரியவரமளிக்கும்
நீதியேபெருதுசெங்கோல் நிலைபெறச்செய்வாய்போற்றி.



10

மந்திரி - விருத்தம்.

மன்னர்களெவருமெச்ச மனுமுறை நமிசகிடாது
தன்னிலையாகசோழ நகர்க்கொருப்புமுதருமல்
தன்னிகரிலாதுசெங்கோல் தாங்கியேமகுடம்பூண்டு
இன்னகராளும்வேந்தே இணையடிபோற்றிபோற்றி.

(மந்திரி) நமஸ்கரிக்கின்றேன் அரசே. -

(சோழ) கல்யாண.

(குடிகள்) சேவகா! யாங்கள் ராஜசமுகம் தாணவந்தோமென்று மஹாராஜாவுக்குத் தெரிவிப்பாய்.

(சேவகன்) மஹாப்பரபு நமதுநகரில்வாழ் பயிரிக்குடிகள் ராஜசமுகம் தாணவந்திருக்கின்றனர்.

(மந்திரி) சேவகா அவர்களை யாதொரு தடையுமின்றி வரவழைப்பாய்.

(சேவகன்) குடிகளே உமது இஷ்டம்போல் உத்திரவாய்விட்டது செல்வீர்கள்.

(குடிகள்) அரசே நமஸ்கரிக்கின்றோம்.

(அரசன்) பயிரிடுங்குடிகாள் யாது கார்யார்த்தமாக வந்தீர் உன் மையை வெளியிடுவீர் -

சோழராஜனிடம் குடிகள்முறையிடுதல்- தரு-

இ-ம்-இந்துஸ்தானி-சாபி- அடதாளம்.

என்னவென் றெடுத்துரைப்போமே ராஜே
இன்னகர்தனில் அன்யாயமாக நன்மாரியிலை
இட்டபயிர் இளைத்துவாடுதே. (என்ன)

ஏரிகுளங் களிலும்ஜலமில்லை ராஜே
எங்குதேறுவர் தாங்கவசமோ ஈங்கினியென்னமோ
என் செய்வோமினி இராஜபூபனே (என்ன)

ஏதுசெய்குவோம் மினியாங்கள் ராஜே
ஆதரவெமக் கொருவிருந்தன் பாதமேகதி
ஐயனேயெவ்வாறவனிதுய்வோம் (என்ன)

(வ-ம்) அரசே நமது நாட்டில் பன்னிரண்டுவருஷகாலமாய் மழை பொழியாமல் ஏரிகுளங்களில் ஜலமின்றி பயிர்களெல்லாம் தழை

தோன்றாமல் காயுலர்ந்து பஞ்சமேவிட்டதால் எவ்விதம் பிழைப்போமென்று மனத்திகைத்து யாங்களெல்லோரும்வந்து உமது சரணமடைந்தோம் எங்கள் வறுமையைநீக்கி ஆதரித்தருள்வீர் மஹாராஜனே.

(வ-ம்) குடிகளே இவ்விஷயத்தில் நீங்கள் மனவருத்தங்கொள்ள வேண்டாம் உமதிருப்பிடம் செல்வீர்கள்.

(குடிகள்) அப்படியே மஹாப்ரசாதம் அரசே.

(அரசன்) மந்திரி நாளையதினம் யான் மதுரைக்குச்சென்று எனது நண்பராகிய பாண்டியராஜனிடம் புகன்று மழைவருவிக்கும் மார்க்கத்தைத் தேடுகிறேன்.

(மந்திரி) அரசே இதுதான் தகுந்தயோசனை.

சோழதேசத்தின் வறுமை.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சோழநகர் தன்னிலே மழைபொழியா குறையினால்
சோர்ந்தனரே குடிகளும்
சோகமென் மேலுமாய் அயர்கிறத் தவர்களும்
சொக்கியே கெஞ்சலர்தம்
பாழடைந் தேபயிர்கள் விளையாமல் தலையிலே
பசியால் வருந்தமுற்று
பரமசிவ நாதனே பக்தர்கள் சகாயனே
பன்னவர்க் கருணையனே
வாழவோ சோகவர் செய்தி குமக்கிது
வஞ்சனை யெண்ணமலவோ
வம்பேது மனமாறு மின்னலுட னிடிமழை
வருவிக்க செய்யுமையா
தாழாத செல்வமே யென்றனது போற்றவுந்
தர்மநெறி புனராஜனும்
தன்னுடைய வறுமையை பாண்டியர்க் கோதவே
தென்மதுரை வருகின்றனரே.

சோழராஜன் மதுரைக்கு வருதல்.

(வ-ம்) கேளுங்கள்சபையோர்களே சோழதேசத்தில் பன்னிரண்டு வருஷம் வரையிலும் மழைபொழியாமல் பஞ்சமேவிட்டதால் புவியி



லுள்ள குடிகள் அரசனிடம் முறையிட அன்னவர்கள் அயர்நீக்கும் பொருட்டு மதுராபுரிநகரையாளும் தமது நண்பராகிய பாண்டியராஜனுக்குந் தெரிவிப்போமென்று சோழராஜன் வருகிறவிதங்காண்க.

சோழராஜன் - விருத்தம்.

ஆசாரவாசல்காக்கும் அன்போங்குங்காவற்காரா
நேசமாய்சோழராஜன் நேர்மையோடும்மைக்காண
பாசமாய்வந்தாரென்று பாண்டியராஜன்முன்னே
வாசமாயுரைப்பாயென்னை வரச்சொன்னால்வருகின்றேனே.

(வ-ம்) ஆசாரவாசல்காக்கும்சேவகா யான்வந்தேனென்று உமது மஹாராஜாவுக்குத் தெரிவிப்பாய்.

(சேவகன்) அப்படியே தெரிவிக்கின்றேன் ராஜப்பிரபு.

சேவகன் - கலிவிருத்தம்.

சுந்தரரூபனே சோழதேசாதிபன்
சந்தோஷமாகவே தங்களைக்காணவே
வந்தனர்வாயலில் மதுரையாள்வேந்தனே
சங்கையேயாதும் எதிர்நுரைத்தேனிதோ

(வ-ம்) அரசே தம்மைக் காணும்பொருட்டு நமது அரண்மனை வாயலில் சோழபூபதி வந்திருக்கின்றனர்.

(பாண்டியன்) வரச்சொல்வாய்.

சேவகன் சோழராஜனுக்குரைசொல் - பரணி.

மங்களமோங்கிடு மிந்திதவரசே
சங்கையிலாமல் வந்திடுவீரே.

(வ-ம்) வருவீர் அரசே

(சோழராஜன்) வந்தனம் பாண்டியபூபதி.

(பாண்டியன்) சோழபூபதி என்ன முகவாட்டத்தோடு வந்திருக்கின்றீர்! உமது மனக்கவலையாது? தெரிவிப்பீர்.

சோழராஜன் பாண்டியராஜனிடம் முறையிடுதல் - தரு
இராகம்-முகாரி-ஆதிதாளம்.

அன்புநிறைந்தோங்கு மாசேமதுரையாழ் பாண்டியனே-என்ன
அரியாமையோமழை பொழியாமலிருந்ததே பாண்டியனே

காவிமுலர்ந்தாக் கழனியுங்காய்ந்ததே — பாண்டியரே-துர்க்
காலமோதெரியிலேன் காத்தன்செயல்தானோ — பாண்டியரே
பயிர்களினைத்துப் பறவையுமகாடாமல் — பாண்டியரே-எந்தன்
பாரெங்கும்பஞ்சத்தால் பாழாகிவிட்டதே — பாண்டியரே
புல்லுமுளையாமல் பூமியுலர்ந்ததே — பாண்டியரே-அந்த
புரந்தரன்செய்கையோ திறைக்கப்புக்கேறாக்கும் — பாண்டியரே
பனிரண்டாண்டாக பாரில்மழையற்று — பாண்டியரே-ஐயோ
பசிபால்வதற்குத் அடித்தினைத்தேராமையா — பாண்டியரே
சொக்கநாதனால் குழப்புவியாண்டிடும் — பாண்டியரே-உடல்
சோருதேயென்செய்வேன் பாரிட்டசாபமோ — பாண்டியரே
உன்னையன்றியெனக் குற்றதுணையாரையா — பாண்டியரே-எந்தன்
வாழ்வினை நீக்காரு மென்னுமினைக்கமிடுவேன் — பாண்டியரே
என்னிடதேசத்தி லேதொன்றுமில்லை — பாண்டியரே-யாசி
கைலாச் பூசையிலே ஒருகுறைசெய்தேன் — பாண்டியரே
ஏழையாளுக்கவும் பார்க்கவுமிதியோ — பாண்டியரே-இந்த
எளியேன் துயர்தீர்த்தா லெப்போதும்மறவேனே — பாண்டியரே
எனதுதேசஞ்செழிக்க ஏழையெண்குறைதீர — பாண்டியரே-நீர்
எவ்விதமாகிலுந் துணைசெய்திராமாறுவ — பாண்டியரே
உலகுள்ளளவரைக்கும் உம்மைமறவேனே — பாண்டியரே-ஒரு
உறுதிசொல்லுவிர்க்கண உடனுக்குபிரான — பாண்டியரே
கார்த்தனும்சிவனை சேர்க்காறுப கீர்த்தினை — பாண்டியரே-எந்தன்
கஷ்டமொழித்தென்னைக் காப்பாற்றுவீரையா — பாண்டியரே

(வ-ம்) ராஜராஜேஸ்வரா எனது தேசத்தில் பன்னிரண்டுவருடம் மழையின்றி பயிர்களினைத்து பஞ்சத்தால்வாடுகின்றோம் இச்சமயம் என் வறுமையையகற்றி என்னைக் காத்தருளவேண்டும்.

பாண்டியராஜன் பரிதாபப்படுவது.

(வ-ம்) ஆ! சோழபூபதி அன்னைவுடன்சந்திலுமுள்ளதையா! மந்திரி பார்த்தையா மழைபெய்யாமல் கொடுமையால் சோழதேசம் பாழாகி புறங்க, பயிர்களெல்லாம் வாடிவதங்க, குடிகளெல்லாம் கொடுங் கலங்கி [illegible]னது கண்பண்டிதங்க, யாருமுமதியமங்க யா அதாரணமோ அறிகிலேன் சிவ சிவா.



பாண்டியராஜன் சோழராஜனுக்கு தைரியஞ்சொல்லுதல். 12

கொச்சகம்.

தமதுதேசங்களிலே தாழ்வுபஞ்சமாய்ச்செனை
உமதுள்ளந்தான்கலங்கி உருகுவதாலென்னபலன்
நமதுதென்னாம்போல்வருமோ காதனருளல்லாது
சமர்முனையிலஞ்சாத சாமார்த்தியமன்னவனே

(வ-ம்) சோழபூபதி அஞ்சாதீர் இச்சமயமே நாம் சொக்கராலயஞ்சென்று அவரனுக்கிரகம்பெற்று வருவோம்.

(சோழராஜன்) அப்படியேசெல்வோம் பாண்டியபூபதி.

பாண்டியராஜனும் சோழராஜனும் சொக்கரை துதித்தல்.

கங்கையைச்சிரமேற்கொண்ட கைலாசவாசாபோற்றி
செங்கையில்மழுமானேந்தும் செஞ்சடையோனேபோற்றி
மங்கையைப்பாகம்வைத்த மதிமுடியனேதாய்போற்றி
எங்களையாட்கொண்டாளும் எந்தையேபோற்றிபோற்றி.

(வ-ம்) பக்தரக்ஷக பரமதயாளா அடியார்கள்மீது கிருபையுறுந்து செய்தருளவேண்டும் ஜெகதீசா.

சொக்கலிங்கேசுவர் புன்சிரிப்போடு சொல்.

கலி விருத்தம்.

நீதியோடிம் மதுரையாள்பாண்டியா
கோதிலாத சோழனுடன்வந்ததேன்
சேதியென்னத் தெரிகிலேனின்றுமே
ஆதியோடந்த மாயுரைசெய்வையே.

(வ-ம்) அன்பர்களே யாது காரியத்தமாக வந்தீர்கள்?

பாண்டியன் - விருத்தம்.

அன்னைலேசோழநாட்டில் அரும்பஞ்சமானதாலே
குன்னியே பயிர்களெல்லாம் குறைகியேகாய்ந்ததையா
பண்ணவர் துதிக்குமீசா பதமேதுணையென்று
எண்ணியேவந்தேமிங்கே எங்களைக்காருமையா

(வ-ம்) ஜெகதீசா சோழதேசத்தில் மழைபொழியும்படி [illegible]ரியவேண்டும்சுவாமி.

சொக்கநாதர் - விருத்தம்.

அரசரேசொல்லக்கேளீர் அவரவரதிகாரத்தை
நிரந்தரமாகச்செய்ய நிர்ணயஞ்செய்திட்டோமே
புரந்தரனருளினாலே பூமியில்வருணராஜன்
பரக்கிகழ்மழைபொழிந்து பயிர்களைவிளைவிப்பானே.

(வ-ம்) அன்பர்கள்! சகலஜீவராசிகளையுஞ்சிருஷ்டிக்க பிரமாவும், ஆதரிக்க விஷ்ணுவும், சகல பயிர்களுமவிளையும்பொருட்டு வருணன் வருஷிக்கவும் ஆதியில் ஏற்படுத்தியிருக்கின்றோம் ஆதலின் தேவராஜனிடம்புகன்று மழைபொழியும் வகைதேடுவீர்கள்.

(பா-சோ-) அப்படியே இந்திரலோகம் போய்வருகிறோம் பரமசிவமே.

பொது விருத்தம்.

இவ்விதமாய்சொக்கலிங்க மெடுத்துரைக்க
இருவருமாயமரர்புரம் வந்துதிக்க
செவ்விதமராஜசிங்கார நடனமாதர்
சேர்ந்தசபைதனிலுலாயிந் திரனுங்கண்டு
ஒவ்வியேயாமனிதர் வந்ததேது
ஒஹோஹோபரமசிவன் செயலென்றெண்ணி
ஒளிவியமாயுள்ளத்திற் கபடவைத்து
அரசர்களேவருவீரென நகைத்திட்டானே.

சோழராஜன் இந்திரனை ஸ்துதித்தல்.

தேவாரம்.


அந்தரத்தமரர்கோனே அண்ணலேபோற்றிபோற்றி
சுந்தரவடிவிலங்குஞ் சொரூபனேபோற்றிபோற்றி
எந்தையேபோற்றிபோற்றி என்குலதேவேபோற்றி
இந்திரபதியேயுந்தன் இருமலர்ப்பாதம்போற்றி.

(சோழராஜன்) போற்றி போற்றி தேவர்கட்கரசே.

(இந்திரன்) சோழபூபதி ஏழாவதுபடியின்கீழிருக்கும் ஆசனத்திலமருவாய்.

(சோழராஜன்) அப்படியே மஹாபாக்கியமையா தேவர்கட்கரசே.





பாண்டியராஜன் - அந்தரத்தோர்புகழிந்திரபதியே
உந்தனைச்சார்ந்தோ ரெல்லாருஞ்சுகமா?

(இந்திரன்) ஐயா பாண்டியபூபதி இருக்கும் ஸ்தானத்திலிருந்தால் எல்லோருஞ்சுகமே வாழ்வர் நீர்பூலோக இந்திரனானபடியால் என்னோடு சரியாய் உட்கார்ந்து வார்த்தையாடலானீர்.

(பாண்டியன்) சிவானுக்கிரகம்.

(இந்திரன்) தேவர்களே பார்த்தீர்களா இவர்தான் பூலோகத்திலுள்ள அரசர்களில் மேன்மையுற்றவர் இவருக்கு தேவர்கள்யாவருங்கூடியாதரவாய் முகஸ்துதிசெய்து இவர்க்கு நற்றிலணிவீர்.

(தேவர்கள்) அரசே அப்படியே செய்கிறோம்.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோரே தேவேந்திரன் புகன்றதை யுணர்ந்த தேவர்களெல்லோருங்கூடி பாண்டியனுடையசமர்த்தையறிவோமென்று பளுவான ஓர் பெரியமுத்துமாலையை தூக்கிக்கொண்டுவந்து பாண்டியராஜன் கழுத்திலணிய சொக்கநாதருடைய கிருபையால் இலேசாக தாங்கிக்கொண்டதை யறிந்த தேவர்கள் ஆச்சரியமடைந்து சோழராஜனுக்கும் மோகனமாலை யொன்று பரிசளித்தனர் அப்பால் இந்திரன் இவ்விருவரையும்நோக்கி யாதுகாரணத்தால என்னை நாடிவந்தீரென்றவினவ பாண்டியன் மறுமொழி புரைக்கும் விதங்காண்க.

பாண்டியராஜன் - தரு.
இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

எந்தன் காரியமொன்று—மில்லையிந்திரபதி
எடுத்துரைப்பேன்கேளும்

அநுபல்லவி.

இந்திரனென்றிலகு மிசைபணிவன்னு
அந்தரத்தோர்புக மாயிரங்கண்ணு (எந்த)

சரணம்.

இந்தசோழாதிப னுரும்பதியில்
இதுவரையிலுங்கூட—மழையில்லாமல்
தொந்தரைசெய்திட வொந்துபயிர்கள்
தொல்லுலகோர்வாட
இந்தவிசயத்தை இவர்தெரிவிக்க
சந்தோஷமாயான் காண்டவர்க்குரைக்க
இந்திரர்பாலுரை யென்றவருரைக்க
வந்தேனையாசோ முன்துயர்தீர்க்க (எந்தன்)

பாண்டியன் - விருத்தம்.

சோழநாட்டேனுபாழாய் சோர்ந்துகால்குடிகள்வாடி
தாழவேமனந்தளாமல் தங்களைநாடிவந்தேன்
வாழவேமழையுங்காற்றும் வருவிக்கச்செய்தீரானல்
ஏழைபாங்குடிகளுக்கு ஏகிடேதுயரந்தானே.

(வ-ம்) கேளுமையாதேவர்கட்கரசே சோழதேசத்தில் பன்னிரண்டுவருஷமாய் மழைபொழியா குறையினல் பயிர்களெல்லா மிளைத்து, குடிகளெல்லாங் களைத்து, இவ்வரசனுங் கிளைத்து சஞ்சலப்படுகிறார்



கள் ஆதலின் இவ்வேழைகள் துயர்தனிய காற்றுமழையும் வருவிக்கச்செய்வீர் இந்திரபதியே.

(இந்திரன்) நல்லது உங்களிஷ்டப்பிரகாரமே சோழதேசஞ்செழிக்கும்படி மழைபொழியச்செய்கிறேன் பாண்டியமஹாராஜனே.

(சோழ - பாண்டியர்) தேவர்கோனே யெங்களுக்கு சிலவருள்வீர்.

(இந்திரன்) போய்வாருங்கள் சோழ பாண்டியரே.

(இந்திரன் மேகங்களுக்கும், வருணராஜனுக்கும் சொல் - விருத்தம்.)

இடிமழைவருணனேகேளாய் இனியந்தமதுரைதன்னில்
அடிவைத்திரானுமுமை ஆக்கினைசெய்வேனிங்கள்
முடிமன்னன்சோழநாட்டில் மும்மாரியாகப்பெய்து
செடிபயிர்பூண்டுபுல்லுஞ் செழித்திடச்செயகுவீரே.

(வ-ம்) கேளுங்கள் சப்தமேகங்களே வருணராஜனே இன்றுமுதலென்னுளிலும் பாண்டியன் அரசபுரியும் மதுரையிற்போய் வருவித்தீராயில் உங்களைக் கொடிய தண்டனைக்குள்ளாக்குவே னென்றறிவீர்கள் ஆனல் இப்பொழுதே சென்று சோழதேசஞ்செழிக்க கனமாகவருவித்து ஆறுகுளம் ஏரிகிணறு தடாகமெல்லாம் நிரம்பும்படியாக வருவித்து வருவீர்கள்.

(மேக - வருண) தங்களாக்ஞைப்படியே செய்கிறோம் ஆண்டே.

பொது-விருத்தம்.

தையிர்யமாய்மேகத்தோடு தானுமேவருணராஜன்
வயிறுறஅமுதருந்தி வந்தனன்சோழதேசம்
பயிரெலாஞ்செழிக்கவிந்த பார்தனில்வாழுகின்ற
உயிரெலாமழைக்கவேண்டி உறுதியாய்பொழிகின்றுவே.

இ-புந்நாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

ஆனந்தமழைபொழிந்தாரே-இடிபொருமின்னலும
அன்பாய்வருவித்தாரே

சரணங்கள்.

வானவரோடும் வையகம்புகழ
வருந்தமிழ்மேவ வெள்குடிநிகழ

தானவரிஷிதனுக் தருமெனையகிழ
சரித்திரமினியனு காதெனதிகழ (ஆனந்த)
புல்லொடுசெடிமரம் பூண்டுகளியாவும்
பூரித்தேமனம் பொங்கிவளரவும்
நெல்லொடுவரகு நேமிசில்வினையவும்
நெரெநெரவெனமழை நேர்மையாய்பொழியவும் (ஆனந்த)
வாழுமுலகினில் வளர்குடிதன்னை
வறுமையொழித்திடு மார்க்கமுந்தன்னை
சோழன்துயரை தொலைத்தேனென்ன
செல்லும்வரையிலும் சேமமேயென்ன (ஆனந்த)

பொது - விருத்தம்.

சட்டமாயிந்திரன்றான் சாற்றியவாறுபோல
அட்டகாசங்கள்செய்ய ஆமேரிகுளங்களெல்லாம்
மட்டிலாதண்ணீரோங்க மழைபொழிந்தேதரும்போது
குட்டியாமேகமொன்று குடுகுடென்றோடிற்றங்கே.

(வ-ம்) தேவேந்திரனுரைத்தமொழியை சிரமேற்கொண்ட வருணராஜன் தன்னுடைய சேனை சைன்யங்களாகிய இடி, மின்னல், குமுறல், காற்று முதலாகிய சப்தமேகங்களையும் அழைத்துக் கொண்டு சோழதேசத்திற்போய் வருஷித்து குடிகளெல்லாம் பஞ்சம் விலகிய தென மகிழும்படி செய்து திரும்பி வரும்போது ஒரு குட்டிமேகம் மதுரைமாநகரமாகிய பாண்டியதேசத்தின்மீது மறந்தாற்போலோடியது. அப்போது பாண்டியநாட்டில் மழைபொழியாமல் வைகையாற்றில் ஜலம்வற்றியிருந்தமையால் பாண்டியன் இதுதான் தருணமென்று வைகையாற்றில் அணைகட்டச்சொல்லும் விதங்காண்க.

பாண்டியன் தரு:—இ-ம்-மோகனம்-மிசுரதாளம்.

பல்லவி.

இத்தனைநாள்செல்ல வாச்சா—மழை
இல்லையென்றுசொல்ன பேச்சா

அநுபல்லவி.

சத்தியநெறிமுறை தவறிநடந்தோமே
சங்கரன்பூசையை சற்றுமறந்தோமே (இத்தனை)

சரணங்கள்.

மழைவருஞ்சிங்காரம் பாரீர்—இந்த
மகத்துவம்பார்க்கலாம் வாரீர்



15

செழித்துதழைத்திட சோலையாய்பொழிந்தது
சொல்லிவாய்மூடுமுன் மேகங்களேந்தது (இத்தனை)
மந்திரியென்சொல்லைக் கேளீர்—நீரை
மடக்கிக்கட்டவேணும் பாரீர்
வந்தெதல்லோருங்கூடி வைகையாற்றிலணை
சந்தோஷமாய்கட்ட சாற்றுவாய்சீக்கிரம். (இத்தனை)
வீட்டுக்கோராள்வர வேணுமே—என்று
விரைவாயெல்லோரையுந் தூண்டும்
கூட்டமாயாண்பெண் குடிகளெல்லாங்கூடி
நாட்டமாயணைகட்ட நவிலுவாயிப்போதே (இத்தனை)

(வ-ம்) மந்திரி வைகையாற்றின் ஜலத்தை வெளியேபோகவொட்டாமல் வீட்டுக்கோராளாக சேர்ந்து அணைகட்டச் சொல்லுவாய் அப்படி வாராதவர்களை சிரசாக்கினை செய்திடுவேனென்றுரைப்பாய்.

(மந்திரி) அப்படியே செய்விக்கின்றேன் வேந்தே.

மந்திரி வைகையாற்றை அணைகட்ட காவலாளிக்கு ஆக்ஞாபித்தல்.

விருத்தம்.

பாரடாஇருக்குமிந்த பட்டணவீட்டுக்கோராள்
சேரடாகூட்டியொன்றாய் சேர்ந்தபின்வைகைக்கே
[illegible] சீரடாதனையைக்கட்டி சீக்கிரமுடிக்கவென்று
[illegible] டாதமுரக்கடித்து குவலயமறியச்சாற்று

([illegible]) அடா காவலாளி நீ அதிசீக்கிரமாகச்சென்று இந்தமதுரை [illegible] முள்ள வீடுகள்தோறும் வீட்டுக்கொவ்வொரு ஆளாகவந்து வைகையாற்றின் அணையைகட்டச்சொல்லுவாய் அப்படி அணைகட்ட வாராதவர்களுக்கு சிரசாக்கினைநேரிடுமென்று தெரிவிப்பாய்.

(காவலாளி) அப்படியேதெரிவிக்கின்றேன் மஹாப்பு.

காவலாளி - நகரத்தோர்கள்முன்

விளம்பரப்பத்திரிகை வாசித்தல் - விருத்தம்.

ஆண்டவனூர்சொக்கேசர் வாழ்தர்டென்னும்
அன்பானமாமதுரை [illegible] நீவாழும்
நீண்டபுகழோங்கிவளர் குடிகளேயான்
நிகழ்த்துகின்றதிருபத்தை நன்றாய்க்கேளும்
வேண்டியதாஆளொன்று வீட்டொன்றுக்கு
வைகைநதியணைகட்ட வருவீரென்று

பாண்டியனூருங்களுக்குச் சொல்லாயென்று
புகன்றதையா னுலகோர்க்குத் தெரிவித்தேனே

(வ-ம்) கேளுங்களையா கனவான்களே! நமது பாண்டியநாட்டில் அனேகநாளாய் மழைபொழியா திருந்தமையால் வைகையாற்றில் ஜலம்வற்றி பஞ்சமேலிட்டுவரும சமயத்தில் பக்தரட்சகனாகிய பரம சிவத்தின் கிருபையினாலும, நமது வயிறும் வாயும்செய்த அதிர்ஷ்டானுகூலத்தினாலும் மழைபொழிந்து வைகைநதி பெருக்கெடுத்து ஓடுகிற ஜலத்தை மடக்கி அணைகட்ட வேண்டியதால் நமது தேசத்திலுள்ளகுடிகளில் வீட்டுக்கு ஒவ்வொருவராக அவரவர் பங்குக்குரிய அணையைகட்டவேண்டுமாம் இதற்குடன்படாதவருக்கு சிரசாக்கினையுண்டாகுமென்று அரசன் கட்டளைவிதித்தாரையா நகரவாசிகளே.

பொது - விருத்தம்,

அப்படிபுரைசகமாந்த ரவரவர்பாகந்தன்னை
ஒப்புடன்முடித்துவைகைக் கொழுங்குடனணையிட்டார்கள்
தப்பிதமாச்சேயென்று தள்ளாதகிழவியொருத்தி
எப்படியெனக்காளில்லை என்செய்வேன்சிவமேயென்றாள்.

(வ-ம்) கேளுங்களையா சபையோரே பாண்டியனால்விதிக்கப்பட்ட சட்டப்பிரகாரம் யாவருக்கும் பங்குவீதமாக வகுத்துக்கொடுத்த தங்கள் தங்கள் பாகமாகிய அணையை கட்டிக்கொண்டிருந்தார்கள் அவர்களில் ஒரு கிழவிமாத்திரம் தனக்குஆளிக்கில்லாமையால் நமக்கும் ஒரு பாகந்தந்தார்களே என்செய்வேனென்று பரமசிவனை நினைத்து ஸ்தோத்திரம்செய்யும் விதங்காண்க.

கிழவிசொல் - தேவாரம்.

நசாயில்லணையைக்கட்டுடென் றியம்பினரெந்தன்கையில்
காசேதுமில்லையெந்தன் கடனுக்குமாடந்தனில்லை
மாசனுநாதுநாளும் மகிமைசேர்சொக்கலிங்கா
நேசமாயுனது பாதம் நெஞ்சதிலிருத்தினேனே

(வ-ம்) சிவசிவா! ஹரஹரா! ந... வாசா! உமாமகேசப்ரகாச ஜோதியே ஆதியே நீதியே யானொ... வன் இந்த பாண்டியராஜன் என்னையும் வைகையாற்றிற்கு அணைகட்டவேணுமென்று ஆக்ஞாபித்து பங்கிட்டுக்கொடுத்தாரே எனக்கோ ஆளிக்கில்லையே இவ்விதிக்கு யானென்னசெய்வேன் பொழுதுபோகுமுன் என் பங்குவீத



மாகிய அணையைக்கட்டாமற்போனால் அரசன் தண்டிப்பாரே மதுரைமாநகரில் மீனாக்ஷியம்மனுடன் கொலுவமர்ந்து அடியாரை ஆதரிக்கும் சொக்கலிங்கேஸ்வரா.

பொது - விருத்தம்.

விட்டுலகாசைசோர்ந்து வீழ்ந்தனள்கிழவிமண்மேல்
எட்டுலகெங்கும்போற்றும் எந்தையாஞ்சொக்கலிங்கம்
தட்டுடன்கட்டப்பாரை தன்கையிலெடுத்துக்கொண்டு
பிட்டுக்குமண்சுமக்கப் பிரியமாய்வருகின்றாரே.

(வ-ம்) இவ்விதமாக வாணியக்கிழவி அணைகட்டபயந்து என்னசெய்வேன்சிவமேயென்று தரையில்விழவே சொக்கலிங்கேசர் மனந்தாளாமல் ஒட்டனைப்போலாக வேடந்தரித்து நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் பட்டைபட்டையாய் திருநாமமணிந்துக்கொண்டு மண்வெட்டி, கட்டப்பாரை, மட்டப்பலகை, மண்சுமக்குந்தட்டுக்கூடைமுதலானவைகளையெடுத்துக்கொண்டு கிழவிமுன்வருகிறவிதங்காண்க.

சொக்கலிங்கேசர் ஒட்டனைப்போல் வருகிற - தரு.

இ-ம்-கலியாணி-அடதாளசாப்பு.

ஈசன்வந்தாரே—சொக்கலிங்
கேசன்வந்தாரே

அநுபல்லவி.

ராசனுகாதகை லாஸத்தமர்ந்த
நேசகுணேசர் வேஷமுமந்த (ஈசன்)

சரணங்கள்.

ஒட்டருபந்தரித்து—நெற்றியில்
ஒழுங்காய்நாமந்தரித்து
மட்டப்பலகையும் மண்வெட்டியுங்கொண்டு
கட்டப்பாரையையுங் கையில்தூக்கிக்கொண்டு (ஈசன்)

அரியனலோசித்து—தேடியும்
அகப்படாதவஸ்து
பிரியமுடனந்த பிட்டுவாணிச்சிமுன்
அரியவொட்டனாக அட்டகாசத்துடன் (ஈசன்)

வருத்தமெல்லாமோட—கிழவிமுன்
வைகையணை போட
பெருத்தவேலைக்காரப் பிள்ளையாவென்ன
திருப்தியாகப்பிட்டைத் தின்றிடுவோமென்ன (சுவன்)

சொக்காண்டி ஒட்டன் பிட்டுவாணிச்சிக்கு தைரியம்சொல்லுகிற

விருத்தம்.

ஆரம்மாகிழவிவைகை அணைகட்டுமெந்தன்வேலை
பாரம்மாயுனக்காளாக பட்சமாயோடிவந்தேன்
சீரம்மா துயரையெல்லாம் திகைத்துநீமயக்கவேண்டாம்
சீரம்மாகொடுக்குங்கூலி சீக்கிரந்தெரிவிப்பாயே

(வ-ம்) பாட்டியம்மா ஏன் வருத்தப்படுகிறாய் ? பயப்படாதே உன் பங்குவிதமாகிய வைகையணையை யானே கட்டவந்திருக்கின்றேன் எழுந்திருப்பாயம்மா.

(கிழவி) சிவசிவா ; கைலாசவாஸா ! இவனாரோதெரியவில்லை விசாரிப்போம்:—நீ ஆரப்பா.

(சொக்கர்) யான் ஒட்டனம்மா.

(கிழவி) உன்பேரென்ன.

(சொக்கர்) அம்மணி என்பெயர் சொக்காண்டி.

(கிழவி) அப்பாசொக்காண்டி என்பிள்ளையும்நீதான் என்பேரனும் நீதானென்றெண்ணியிருக்கிறேன் வைகையணையை கட்டிமுடிப்பாயப்பா.

(சொக்கர்) கூலியென்ன தருவாயம்மணி.

(கிழவி) அப்பா யானோ பிட்டுசுட்டுவிற்று உதிர்ந்த பிட்டுகளை சிவார்ப்பணமென்று சொக்கநாதருக்கு ஆராதனைசெய்து சாப்பிடுகிற வழக்கமிது இதுநாள்வரையுடைய சீர்வாகம் இதையோசித்து உனக்கு யான்கொடுக்கும் கூலியைதெரிவிப்பாயப்பா.

(சொக்கர்) அம்மணி எனக்கு காசுவேண்டாம் உதிர்ந்துபோகிற பிட்டுகளை கொடுப்பாயா.

(கிழவி) அப்படியே தருகிறேனடா எனது அருமைக்கண்மணியாகிய சொக்காண்டி.



(சொக்கர்) அப்படியானால் இதோ அரைநொடியிற்போய் வைகை நதியில் அணைகட்டிவருகிறேன் இப்போது எனக்கு சொன்னகூலி மாத்திரம் மறவாதேயம்மா.

(கிழவி) ஒருபோதும் மறவேன் உதிர்ந்த பிட்டெல்லாம் உனக்கே வேண் போய்வருவாயப்பா.

சொக்காண்டி ஒட்டன் வைகையாற்றிலணைகட்டவருகிற - தரு இ-ம்-காதகாமக்கிரியை ஆதிதாளம்.

பல்லவி.

அணைகட்டவந்தாரையா—சொக்காண்டியும்
அணைகட்டவந்தாரையா

அநுபல்லவி

அணைகட்டவந்தாரே அன்புடன்கிழவிக்கு
துணையாகவேவந்து துயரம்போக்கிடுதற்கு (அணை)

சரணங்கள்.

மேநிள்ளபூமியிலே—கட்டப்பாரை
மெல்லெனக்குத்தையிலே
நாடும்புகழ்மண்ணை வாரிக்கிளப்பையில்
கூடும்மண்வெட்டியால் வாரிக்கூடையிலேந்தி (அணை)

ஒருகூடைமண்போட்டு—கிழவிமுன்
ஓடிவந்தேப்படிட்டு
அருமையாயுதிர்ந்திட்ட அன்பானபிட்டெல்லாம்
கருவாயென்றுவாங்கி தனதாக்கிச்சாப்பிட்டு (அணை)

தத்திமிதோமென்று—தகதிக
தாதாகிடவென்று
பித்தனைப்போலாக பிதற்றியாடிக்கொண்டு
உத்தமிபிட்டெல்லாம் உடனேவாரித்தின்று (அணை)

பொது-விருத்தம்.

சொக்கலிங்கம்வாணிச்சி பிட்டையெல்லாம்
சேதமாகாதபடி தின்றுவிட்டு
அக்கரையாய்வைகையணை கட்டாமற்றான்
ஆடாதகூத்தெல்லாம் ஆடிநின்றார்

தக்கபடிஊரார்பங் காச்சபின்னல்
தள்ளாக்கிழவிபங்கோ தீரவில்லை
மிக்கவேபாண்டியனுந் கின்ங்கொண்டந்த
மீதியணையர்பங்கென் றிபம்பலானன்.

(வ-ம்) இவ்விதமாக பாட்டிநாற்கிற நாலுக்கும் பேராண்டி அரை காணிகபிறக்கும் சரியாச்சுதென்றும் மொழிபோல வாணிச்சிகட்டி பிட்டுக்கும் சொக்காண்டிஆடியகூத்துக்கும் பார்த்தால் "பொழுதுக்கும் பாட்டுக்கும்சரியாய்விட்டது" அவ்வூரார்கள் அவரவர்பாகத்துக் குறிய அணையைக்கட்டிமுடித்தார்கள். சொக்கிலிங்கம் ஒருகூடை மண்ணைவாரிபோடுகிறதும் உடனே வாணிச்சிபிட்டுக்கு வழிபார்த்து ஓடிவருகிறதும் அதற்கேற்றாப்போல சுடுகிறபிட்டெல்லாம் உதிர்ந்து போகிறதுமா யிருந்தமையால் வாரிவாரி வாயில் போட்டுக்கொண்டு மறுபடியும் ஓடிவந்து தின்றதெல்லாம் ஜீரணமாகும்படியாக கூத்தாடிக்கொண்டிருந்தபடியே பொழுதுபோகுமுன்னே பாதியணையைக் கட்டிமுடித்தார் மற்றபாதி மீதியாயிருக்க இதற்குள் பாண்டியமஹா ராஜா மந்திரி பிரதானிகளோடுவந்து வைகையாற்றைக்கண்டு எல் லோருடையபங்கும் தீர்ந்துவிட்டதே இது யார்பங்கென்று கோபத் தோடுகேட்கிற விதங்காண்க.

பாண்டியன்சொல் - விருத்தம்.

திடமுள்ளவமைச்சர்களோய் தீரமாயெல்லோருந்தான்
அடைவுடனணையைக்கட்டி ஆச்சுதேடந்தமூலை
கடைசியிலெவனோயின்னங் கட்டவேயில்லையந்த
மடையனைப்பிடித்துக்கொண்டு வருகுவீர்கொடியிற்றனே.

(வ-ம்) ஆஹா! பார்த்தீரையா! மந்திரி எல்லோருக்கும் சமமாக பங்கிட்டுக்கொடுத்த அணையைக்கட்டி முடித்தார்களே அந்தகடைசி மூலையாருடையதோ இன்னமும் ஆகவில்லையே யாதுகாரணம் விசாரணைசெய்வாய்.

(மந்திரி) அரசே அப்படியே விசாரணைசெய்கிறேன்:—நகரவாசிகளே! அந்தபாகம் யாருடையது ஏனின்னமும் ஆகவில்லை.

(நகரவாசிகள்) பிரபு அதுதான் பிட்டுவாணியக் கிழவியின்பாகம்.

(மந்திரி) அவளை இங்கு வரவழைப்பீர்.



(நகரத்தோர்) அப்படியே அழைத்துவருகிறோமையா:—வாணிக்கிழவி உன்னை பாண்டியமஹாராஜா அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார் துரிதமாய்வருவாய். 18

(கிழவி) ஐயோயென்ன சங்கதியோதெரியவில்லையே போய்விசாரிப்போம்.

(நகரத்தோர்) அரசே இதோவந்தனள். இவள்தான் அந்த பாகத்துக்குரியவள்.

(பாண்டியன்) சபாஷ்! கிழவி நீ மெத்தவுங்கெட்டிக்காரி எல்லோரும் அவரவர் பாகத்தை கட்டிமுடித்தனரே. நீயேன் உன்பங்குவீதமாகிய அணையை இதுவரையிலும் கட்டவில்லை.

(கிழவி) ஐயா! எனக்கு ஆண்திக்கில்லாமையால் கூலியாளை வைத்து வேலைசெய்யச் சொன்னேனையா.

(பாண்டியன்) அவனெங்கே இருக்கின்றான்.

(நகரவாசிகள்) சுவாமி இந்தக்கிழவியின் கூலியாளுக்கு உதிர்ந்தபிட்டு சம்பளமாம் அவனும் அதற்கேற்றாப்போல ஒரு கூடைமண்ணை வாரிப்போடுகிறதும் உடனே ஓடிப்போய் உதிர்ந்தபிட்டைவாரி வாயில் போட்டுக்கொண்டுவந்து பயித்தியம் பிடித்தவனைப்போலாக கூத்தாடுகிறதுமாயிருந்து பொழுதுபோக்கினானையா மஹாராஜனே

(பாண்டியன்) நகரவாசிகளே கிழவியை ஏமாற்றி அடிக்கடிசென்று அவள் சுடுகிறபிட்டுகளையுந்தின்றுவிட்டு எனது கட்டளையையும் மீறிநடந்தவனை இப்போதே தண்டிக்கிறேன் இழுத்துவாருங்கள்.

(நகரத்தோர்) அப்படியே யழைத்துவருகிறோமையா.

பொது - வசனம்.

சபைகளுங்கள்சபையோரே பாண்டியராஜனுக்கிரவுபிரகாரம் நகரவாசிகள் சொக்காண்டியை அழைக்க அவருக்கு ஆனந்தமேலிட்டுநடனஞ் செய்துக்கொண்டிருப்பதைப்பார்த்து அவரை பலவந்தமாயிழுத்துக் கொண்டுவந்து இராஜசமுகத்தில்விடுத்தனர். அப்போது பாண்டியனுக்குக்கோபம்பிறந்து சொக்காண்டியைநோக்கி கிழவியை ஏமாற்றி அவளுடையபிட்டுகளையெல்லாம் தின்றுவிட்டு வைகையணையை கட்டாதிருந்தனையே யாதுகாரணமென்றுரைக்க சொக்காண்டி ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமேபூண்டு சிவமயமாய்விளங்க பாண்டியராஜனுக்கு ஊழ்வினைப்படியே கிரகசாரபலனும் சரிபாய்வந்துவொத்துக்கொள்ள

பரமசிவமென்றுணராமல் ஒட்டனென்றே மதித்து தன் கையிலிருந்தபிரம்பை ஓங்கி எங்கேள்விக்குபதிலுரையா திருக்கின்றனையோ வென்று முதுகிலோரடியடிக்கவே சொக்கரடிக்குத் இப்பிரமையுண்டாகி அப்பப்பா யானின்னமிட்டுக்கும் பாண்டியனடித்தபிரம்படிக்கும் போதும்போதும். துஷ்டசுதவாசம் பிராணசங்கடமென்பதுபோல இவனுக்குநாஞ்செய்த உபகாரத்தையெல்லாம் மறந்து இன்றையதினம் நமக்கு அபகாரம் செய்தானல்லவா வென்று தன்னால் அடைக்கப்பட்டு மீதியாயிருந்த மற்றப்பாதியணையையும் அடைத்துவிட்டு மாயமாய்மறைந்துவிட்டார். அப்பால் பாண்டியனடித்த அடியானது தனக்கும் மந்திரி பிரதானி சேனைகளுக்கும், பிர்மா விஷ்ணு, தேவர்கள் ரிஷி முனி சித்தர் கருடகாந்தர்வர்களுக்கும், அகிலபுவன சராசரமுதலிய சகல ஜீவராசிகளுக்கும்பட்டவுடனே எல்லோருஞ் சந்தேகப்பட்டு திரும்பித்திரும்பிப்பார்த்து இதென்னவிந்தை யென்று மயங்கியிருக்க பாண்டியராஜனுக்கு ஞானமுதயமாகி ஆஹா! மோசம்போனேனே சொக்கலிங்கேஸ்வரரை ஒட்டனென்றல்லவோ தெரியாமல் அடித்துவிட்டேன் இப்பழிபாவத்திற்கு யானென்செய்வேனம்மணியென்று மதுரை மீனாக்ஷியைநினைத்து துயரப்படுகிற விதங் காண்க.

பாண்டியன் சொல் - கலிவிருத்தம்.

சொக்கரையடித்தபழிதீரவே
எக்காலஞ்செல்லுமோவறியேன்வினை
சிக்கியிப்படிசெய்ததாலென்மீது
மிக்ககோபஞ்செய்யாதேமீனாக்ஷியே.

(வ-ம). ஆ! மதுரைமீனாக்ஷி சொக்கநாதர் ஒட்டனைப்போல் மாறுவேடம்பூண்டு வந்தமையால் அடியேன் அவருடைய திருவிளையாடலை யுணராமல் பிரம்பாலடித்துவிட்டேன் இந்த எளியேன்செய்த குற்றத்தை ஒரு பொருட்டாக நினையாமல் மன்னிக்கவேண்டுமம்மணி ஜெகதீஸ்வரி.

பொது - வசனம்.

சொக்கலிங்கேஸ்வரர் பிட்டுக்கு ஆசைப்பட்டு வைகையணையைக் கட்டுகிறேனென்றுவந்து கிழவியையேமாற்றி உதிர்ந்தபிட்டுகளை எல்லாந்தின்றுவிட்டு வைகையாற்றில் பாதியணையை கட்டுமுன்னமே பாண்டியனால்பிரம்படிபட்டு ஓடிவந்து ஆலயத்தில் புகுந்துகொள்ள இதையுணர்ந்தமீனாக்ஷியம்மன் சுவாமியைக்கேட்கும் விதங்காண்க.



மீனாக்ஷியம்மன்சொல் - விருத்தம்

பன்னுமிவ்வுலகோர்க்கெல்லாம் படியளந்திலகுஞ்சோதி
மின்னல்போலிலகுமுந்தன் மேனியிலடித்தழும்பு
பின்னமொன் றிருப்பதென்ன பிழைமோசமாயிற்றோதான்
உன்னையமாயெனக்கு நவிலுவீர்பிராணநாதா.

(வ-ம) ஆ! என் பிராணநாதா எவ்வுயிர்க்கும் படியளந்து எல்லா ஜீவராசிகளையுங் காப்பாற்றி இரக்ஷித்தருளிய தேவரீரது திவ்ய பிரகாசமான திருமேனியில் பிரம்படி தழும்புவந்த காரணமியாதோ அடியாளுக்குத் தெரியப்படுத்துவீர். சுவாமி.

சொக்கலிங்கேஸ்வரர்சொல் - தரு.

இ-ம் ஜம்பை-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

மங்கையேயானென்னசொல்வேன் மழைபொழியவைகைநதி
மதிபாய்ப்பெருக்கெடுத்து வாட்டமுடனோட
பங்கமில்லாததைத்தடுத்துப் பகைமுடனணைபோட
பாரோர்க்குப்பாண்டியனும் பங்களந்துக்கொடுத்தான்
அந்தப்பொழுதாருமுன்னே அவரவர்கள்பங்கணையை
அடைத்திடாதவர்களுக்கு ஆக்கினையுண்டென்று
என்றரசனியம்புமொழிக் கெல்லாருஞ்சம்மதிக்க
ஏழையொருகிழவிதனக் கெவருந்துணையுமின்றி
என்னசெய்வன்சொக்கலிங்கா என்துயரைதீருமென்று
எனையழைத்தாளாகையினா லென்மனந்தளராமல்
ஒட்டனைப்போலுருமாறி ஒருகொடியில்யானோடி
உதிர்தமிபோவனவைகையணை சித்திரம்போலிணைத்தேன்
பாதிவேலைதிருமுன்னே பாண்டியனும்ஓடிவந்து
பலமுடனேகைப்பிரம்பால் பதறியெனையடித்தான்
அந்தடியான்பட்டவுடன் அங்கமெல்லாந்துடித்திடவே
அகிலசராசரபுவன அண்டமெலாங்கலங்கி
ஹரியுடனேபிர்மனுக்கும் அமரர்சித்தர்யோகிகட்கும்
அந்திமுதலெறும்புகட்கும் அசுரர்முதலோர்க்கும்
கர்ப்பசிசுபக்ஷிகட்கும் காட்டுமிருகங்களுக்கும்
கனத்தபிரம்படிபட்டவே கண்டுக்கொள்மீனாக்ஷி.

(வ-ம்) ஆ! என து பிராணநாயகி இவர்க்கு சகாயமாக வைகை யாற்றி லணைகட்டப்போய் பாண்டியன் கைப்பிரம்பால் அடிபட்டு என்திரேகமெல்லாங் களைத்து நொந்திருக்குது, இன்னமும் அண்ட சராசரபுவனமெல்லாங்களுக்கு, அரியயனமரர்முதலியாவருக்கும் எறும்பு முதலெண்பதுநான்குலக்ஷம் ஜீவராசிகளுக்கும் சர்ப்பகிரகமுதலானவைகளுக்கும் அந்தப் பிரம்படிபட்டுச் சோர்ந்ததுகள். இந்த பாண்டியனுக்கு நான்செய்த உபகாரத்திற்கு பதிலாக அபகாரஞ்செய்தான் பார்த்தாயா.

(மீனாட்சி) சுவாமி நீர் சுயரூபந்தோன்றி செல்லாமலுருமாறி ஒட்டனைப்போல் சென்றதால் அடித்தானே யல்லாமல் அவன் உமது சுவாமி என்றறிந்திருந்தால் உம்மைப்பூசித்துமேலேந்து துதிசெய்வான் ஆகையால் அவன்செய்த பிழையை குற்றமாக நினையாமல் மன்னித்தருளவேண்டும் பிராணேஸ்வரா.


பொது-விருத்தம்,

சொக்கேசர்சொன்னதை மீனாட்சிகேட்டு
சுவாமியேநீர்வொட்டனைப்போற் சென்றதாலே
அக்கரையாயறியாம லரசனும்மை
அடித்தபிழைமன்னித்துக் கொள்வீரென்றாள்
பக்குவஞ்சேர்பாண்டியனசெய் தோஷத்தாலே
பஞ்சத்தோடனல்மதுரை யெங்கும்வீச
மிக்கபுகழமரர்தொழும் சொக்கலிங்கம்
மீனாட்சியுடனடவிக் கேகினாரே.

(வ-ம்) கேளுங்களையா சபையோரே பாண்டியன்செய்த குற்றத்தை மன்னித்தருளவேண்டுமென்று மீனாட்சியம்மன் வேண்டிக்கொள்ள அப்பால் பாண்டியனுடைய கர்மவசத்தினாலே மதுரைமாநகரில் மழை பொழியாமல் வைகையாற்றிலும் ஜலமில்லாமல் அக்கினிகாற்றுவீச சூரியபகவானருள்புரியவே மதுரைவாசிகள் தத்தளிக்கவும் விருக்ஷங்களெல்லாம் காய்ந்துலரவும், சொக்கநாயகத்தில் அனல் வீசவும் சுவாமியார் வெப்பத்தினால் கவரண்டு இனியவரிட்சணமேனும் இவ்விடமிருக்கலாகாதென மீனாட்சியம்மனை யழைத்துக்கொண்டு காட்டுக்குப்போகும் விதங்காண்க.



70



சொக்கலிங்கேஸ்வரர் மீனாட்சியம்மனை யழைத்துக்கொண்டு
காட்டிற்குப்போகும் வழிநடைப்பதம்

இ-ம்-காம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

மதுரையெங்குமனல் வீசுதேமீனாட்சி
மங்கையேகானகம் வாராய்—இந்த
புதுமையுற்றவித மென்னென்றேதுவாயோ
புண்யவதிசற் றுப் டாராய்

அநுபல்லவி.

அதிரவேயெங்கும் அனலாகவீசுதே
சதிசெய்தவராரோ சாற்றுவாயிப்போதே
மதிமோசமோவென்ன மழையும்பொழியாதே
எதிரிருக்குநதி எரியுங்காய்ந்ததே
இதுவென்னத் - தலைவிதியோ - நதிநீரும் - பாழாகி
அதிவேகக் - கனல்வீசுதே - சதிமோசந் - தவறாலோ (மதுரை)

சரணம்.

மாடமாளிகை கூடப்பரிகை சூழும்
மதுரையெங்கும் வெய்யல் வீச—அதோ
கூடகோபுர மெத்தைவீதிகளுங்
குமுங்குதனலென்று பேச
நாடாதோகாவுஞ்சொல் மீனாட்சியேயினி
நடைபோங்காணகம்ப்ர காச—ஒளி
வாடாதபூங்குழலாளே வரைத்தாண்டி
வந்துவிட்டோங்காட்டில் வாச
மல்லிகைமுல்லை மலருமுலர்ந்தது
அல்லவொடுசெடி அனலாலெரிந்தது
வல்லமிருகங்க ளெல்லாமழிந்தது
சொல்லமுடியாத தோற்றப்விந்தையிது
ஐயையோ - இதுபாண்டியன் - செய்திவினை - யாலல்லோ
வெய்யல்காய்ங் - கிடுகோரம் - வையங்கொதித் - திடவீசுது (மது)

சொக்கலிங்கேஸ்வரர்சொல் - விருத்தம்.

அன்புசேர்பெண்ணேமதய அடவியில்குளிர்ந்தகாற்று
இன்பமாய்வீசுதென்ன இப்பொழுதேசோதித்து
வன்மையாயவிடந்தங்கி வரவேண்டுஞ்சோகந்தீர்ந்து
துன்பத்தைநீக்கியென்பின் துரிதமாய்வருவாய்மாதே.

(வ-ம்) பெண்ணே இந்தக்காட்டில் குளிர்ந்தகாற்றும் நிறைந்த இலையுமுள்ள மிகவும் விசாலமாகிய வில்வமரத்தைப் பார்த்தனையா நாமதின் நிழலில் கொஞ்சநேரம் உட்கார்ந்து இளைப்பாறுவோம் வருவாய் நாயகி,

(மீனாட்சி) அப்படியே செல்வோம் சுவாமி.



(சொக்கர்) பெண்ணே இந்தமரத்தின்மீது பார்த்தனையா ஓர் நீர்க்காக்கை கடல்ஜலத்தை தனது இறகுகளில் நனைத்துக்கொண்டுவந்து இளைப்பாறிருக்கும் நம்மீது மழைபோல் வருஷிக்கின்றதைவே ஆகையின் நாமதின் கருத்தைவினவி அதுகேட்கும் வரத்தை தருவோம்.

(மீனாட்சி) சுவாமி அப்படியே திருவருள்புரிவீர் நாதா.

சொக்கலிங்கேஸ்வரர்சொல் - விருத்தம்.

சோகமாயுமையாளோடு சோர்ந்துயான்வந்தேனென்று
வேகமாய்ஜலத்தையெங்கள் மேனியில்வருஷித்தாய்நீர்க்
காக்மேயுனக்குவேண்டுங் காரணவரத்தையென்முன்
பாகவேவந்துகேட்டால் பட்சமாயருள்செய்வேனே.

(வ-ம்) நீர்க்காகமே வெய்யலின் வெப்பத்தினால் களைத்து யானும் என்து பிராணநாயகியும் விடாய்தீர காற்றுவாடைக்காக கானகம் வந்து இந்தவில்வமரத்தின் நிழலில் தங்குவோமெனனுங்கருத்தினால் கடல்நீரை யுனது அழகிய சிறகுகளிற்கொண்டுவந்து எங்கள்மீது மழைபோற்பொழிந்தனையே ஆகலின் நீ செய்த உபகாரத்திற்கு பதிலாக உனக்குவேண்டிய வரத்தைக்கேள் தருகிறோம்.

நீர்க்காக்கை வரங்கேட்பது - கலிவிருத்தம்.

சொக்கலிங்காயான் சுந்தரகன்னியாய்
பக்குவமாயேகப் பாண்டியனெந்தனை
ஆக்கரையோடணைந் தன்பாயென்பிள்ளைக்கு
தக்கராஜமுடி தந்திடச்செய்குவீர்.

(வ-ம்) சொக்கலிங்கேஸ்வரா யான் அதிகமோகனலங்கிர்த சுந்தரமிகுந்த ஸ்திரீரூபத்தோடு பாண்டியராஜனிடஞ்சென்று அவருடன் சிலகாலம் வாழ்ந்திருந்து என் வயிற்றிற்பிறக்கும்பிள்ளை இந்த மதுரையாநகரத்தை அரசாக்ஷிசெய்யும்படியாக எனக்கு வரந்தரவேண்டும் பக்தரட்சகராகிய பரமசிவமே.

சொக்கலிங்கேஸ்வரர் நீர்க்காக்கைக்குவரங்கொடுப்பது.

கொச்சகம்.

நீர்தனிலேவாழ்ந்திலகும் நீர்க்காகமேயுனக்கு
சீர்மையுடன்காப்பது சித்திரம்போல்மூன்றுதிங்கள்
நேர்மையுடனுண்டாச்சு நேராகவேந்தனிடம்
பார்புகழப்போய்ச்சேர்ந்து பட்சமுடன்வாழ்வாயே.

(வ-ம்) கேளாய் நீர்க்காகமே பாண்டியன்செய்த அக்கிரமத்தால் அவனுக்குப் புத்திரசந்தானமில்லையாது ஆதலின் நீ கோரியவண்ணமாக உன்னை அதிரூபலாவண்ணியமுள்ள கன்னிகையாகும்படியருள் புரிந்து உனக்கு மூன்றுமாத கர்ப்பமுண்டாகும்படியாகவும் வரந்தந்தோம் உன்னிஷ்டப்படியே பாண்டியனிடத்திற்சென்று புத்திர பாக்கியத்தோடு வாழ்வாய்.

(நீர்கங்கை) அப்படியே மகாபாக்கியமையா ஜெகதீஸ்வரா

நீர்கங்கை பாண்டியராஜன் அரண்மனைக்குவருகிற - தரு.

இ-ம்-இந்துஸ்தான்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

நீர்கங்கை புகழ்மங்கை போலவே வந்தாளே (நீர்)

அநுபல்லவி.

பாரத்திப ஞருமந்த பாண்டியன் வீடு தேடி
கார்க் கூந்த லொளி மின்னும் ப்ரகாச மோங்கவே (நீர்)

சரணங்கள்.

சம்பங்கி வாசனை எவ்வாதும் வீசவே
அம் புலி மகிழ்த் தோங்கு மணிமது ரைக் கேக
சம்போ சிவ லோக நாதனே காரெண (நீர்)

கையில் வளையலின் காந்திப்ர காசமும்
மெய்யழ கொய் யாரி மேலான பணிபூண்டு
தூய்ய மல் லைய மிலா கொய்த ளித்து மே (நீர்)

கன்னியைப் போலவே கனிவா யால் பேசியே
மின்ன லைப்போற் காந்தி மிகுந்த வடிவாக
உன்ன தமா யன்னம் போ லாகத் தோன்றியே (நீர்)

(வ-ம்) இவ்விதமாக நீர்க்காக்கை சொக்கநாதரிடம் வரம்பெற்று சுந்தரமிகுந்த பெண்வடிவாகத்தோன்றிபாண்டியராஜன் அரண்மனையில்வந்துநிற்பதை அரசன்கண்டு விசாரணைசெய்யும் விதங்காண்க.

பாண்டியன் சொல்லுதல்.

(வ-ம்) ஆ! ஆ! என்னசுந்தரம் இம்மாது யாதுகாரியார்த்தமா இங்குவந்தனளோ அருகிற்சென்று விசாரிப்போம் :—ஓ மாதே நீ யார் யாதுகாரியார்த்தமாக இங்குவந்தனை தெரிவிப்பாய்



(நீர்கங்கை) ஐயா யானோ மிகுந்த ஏழை எனக்கு யாருந் துணையுமில்லை ஆதலின் உம்மை நாடிவந்தேன் அடியாளை ஆதரிப்பீர் மகாராஜாவே.

(பாண்டியன்) மாதே நீ அந்தப்புரஞ்சென்று எனது மனையாளிடத்தில் தோழியாயிருப்பாய்.

(நீர்கங்கை) அப்படியே மகாபாக்கியமையா.

பொது - விருத்தம்.

சேடியர்நடனமாட செந்தமிழ்க்கவிஞர்பாட
நாடியேசிவபுராணம் நான்மறையுணர்ந்தோரோத
கூடியசபையிலுள்ள குருக்களாசிர்வதிக்க
நீடியபுகழ்பெற்றோங்கும் கிருபனும்வருகின்றானே.

(வ-ம்) நடனமாதராடவும், வித்துவான்கள்பாடவும், பிராமணர்கள் சிவபுராணம்வாசிக்க காதுக்கினிமையாகக்கேட்டு ஆனந்திக்கும் பாண்டியமகாராஜாவானவர் அந்திநேரமானபிறகு போஜனசாலைக்குப்போய் அமுதருந்தி தாம்பூலந்தரித்துக்கொண்டு சயனிக்கும்படியாக தனது பஞ்சணையை நோக்கி வரும்போது தனது மனையாளின் தோழியாகிய நீர்கங்கையானவள் தனிமையாக உலாவிக்கொண்டிருப்பதைக் கண்டமாத்திரத்தில் ஊழ்வினைப்பிரகாரம் மோகானந்தத்தில் மூழ்கினவனாய் இம்மாதுசிரோன்மணி யாரோவென்று யோசிக்கும் விதங்காண்க.

பாண்டியன்சொல் - தரு

இ-ம்-ஜம்பை-திரிபுடைதாளம்.

ஜோதிமயசிங்கார சுந்தரவடிவுடனே
நீதியுடன்நின்றிலகும் நங்கையிவளாரோ.

கைவளையல்கலகலென கானமயிலழகினைப்போல்
மெய்நிறைந்தவழகிலகும் மெல்லியிவளாரோ

பல்வரிசைமுல்லைமலர் பவளவிதழோவயிர்த
சொல்மொழியேயென்மனது சோருதென்னசெய்வேன்

அன்னம்போலென்முன்நடந்து அழகிலகுஞ்சுந்தரமே
மின்னல்முகக்காந்தியென்னை மிரட்டுதென்னசெய்வேன்

இவ்வேளையென்கருத்துக் கிசைக்துநீகேட்டதெல்லாம்
ஒளிவியமில்லாதளிப்பேன் அமிர்தமொழியாளே.

(வ-ம்) என்! அன்புக்கிசைந்த அமிர்தமொழியே நீ எனது கருத்துக்கிசைவாயாகில், உனக்கு யாதுவிருப்பமோ அவையாவுந்தருவேன் எனது அரசுரிமையைக்கேட்டாலுந் தருவேன் மாதரசே.

நீர்நங்கைசொல் - விருத்தம்,

மட்டிலாக்கீர்த்திபெற்ற மன்னரேநமக்கிப்போது
சட்டமாயுதித்தமைந்தன் தரணியையாள்வதற்கு
இஷ்டமாய்மனக்குளிர்ந்து இணையிலாமதுரைப்பட்டங்
கட்டிவீராலுந்தன் கருத்தினிற்கிணங்குவேனே

(வ-ம்) கேளும் மஹாராஜாவே! உமது வார்த்தையை அடியாள் மறுக்கவசமோ ஆதலின் என்னுடைய மனதில் ஒரு எண்ணமிருக்கின்றது அதை நிறைவேற்றுவேனென்று உறுதி மொழியுரைப்பீராகில் உமது கருத்திற்கிணங்குவேன் பிராணநாதா.

(பாண்டியன்) மாதரசே! அப்படியே நிறைவேற்றுகிறேன்.

(நீர்நங்கை) நாயகா அதாவது என்னவெனில் அடியாள்வயிற்றில் பிறக்கும்பிள்ளை இந்த மதுரைமாநகரத்தை அரசுபுரியும்படி மகுடாபிஷேகஞ்செய்துவைப்பேனென்று நம்பிக்கையோடு உறுதிமொழியுரைப்பீர்நாதா.

பாண்டியன்சொல் - விருத்தம்

தங்கம்போலிலகுமிந்த தரணியோர்மதிக்கப்பெற்ற
மங்கையேயுரைத்தவாய்மை மறுத்திடேனுண்மையாக
நங்கையேயுனதுமைந்தன் நகர்தனையாளவேண்டி
பங்கமில்லாமற்பட்டம் பட்சமாய்கட்டுவேனே.

(வ-ம்) பெண்ணே! உன்னிஷ்டப்படியே உன்வயிற்றிற் பிறக்கும் மைந்தனுக்கு இந்த மதுரைமாநகரத்தை பட்டாபிஷேகஞ்செய்து வைப்பேன் இது உண்மையென்றறிவாய் நாயகி.

(நீர்நங்கை) சந்தோஷமானேன் பிராணநாயகா.

பொது - வசனம்.

கேளுங்கனவான்களே! சொக்கநாதரால் வரம்பெற்ற நீர்நங்கை பாண்டியராஜனிடத்தில் வாழ்ந்திருந்து சிலகாலஞ்சென்று



தனக்கு ஒரு ஆண் குழந்தைபிறக்க அதற்கு நீன்முகனென்று பெயரிட்டு அன்பாக வளர்த்துவரும்போது சிலநாட்கழிந்தபின்னர் சித்திராங்கதபாண்டியன் தன் சகோதரர்களிடத்தில் ஆலோசனைசெய்யும் விதங்காண்க.

சித்திராங்கதபாண்டியன்சொல் - விருத்தம்.

சுந்தரமதுரையெங்கும் சூழ்ந்திடும்பஞ்சத்தாலே
நொந்தனர்குடிகளென்று நோக்கிடிலவையுமன்றி
சந்ததியில்லாமற்றான் சகலரும்மலடானோர்கள்
விந்தையோவிதியின்வாறோ விபரீதமறிகிலேனே.

(வ-ம்) சகோதரரே நமது மதுரைமாநகரத்தில் மழைபொழியாமலும் யாவருக்கும் புத்திரசந்தானமில்லாமல் மலடாயிருக்கவும், யாது காரணமோ தெரியவில்லையே,

பாண்டியர்கள் சித்திராங்கதபாண்டியனுக்கு தைரியஞ்சொல்லுகிற

கட்டளைக்கலித்துறை.

மதியே யணிந்திடுஞ் சொக்கேசர் வாழும் மதுரைநகர்
பதியாண் டிருந்தும் பேர்சொலவே யொரு பாலகனை
விதியோ டரிஹரப் பிரமாதி தேவர் விழியருளால்
சதியேது மின்றியே பெற்றிடவே தபம் புரிகுவமே.

(வ-ம்) அண்ணா! இதுவரையிலும் சொக்கலிங்கேஸ்வரர் கிருபையினால் யாதொருகுறையுமின்றி மதுரைமாநகரத்தை பரிபாலனஞ்செய்துவந்தோம் ஆகிலும் தற்சமயம் யாதுகாரணத்தாலோ பஞ்சமேவிட்டு வறுமையடைந்தோமென்றும், சந்ததிபெருக மைந்தனில்லையேயென்றும் துயரப்படலாமா. ஆவதும், அழிவதும் கடவுள்செயலன்றி மனச்செயலாகுமோ. ஆதலின் நாமனைவரும் வனத்திற்சென்று தபம்புரிவோமாகில் கடவுளருளால்பஞ்சமும்விலகிப்போகும் புத்திரபாக்கியமும்பெறுவோம்.

(சித்திராங்கதபாண்டியன்) அப்படியே செய்வோம் தம்பிமாரே.

விருத்தம்-

அப்பனேமகனேவாடா அழகுநீன்முகனேவாடா
செப்பரும்மதுரையாளச் செங்கோலுமுன்கைதந்தோம்.
தப்பிதமில்லாமற்றான் தரணியையாண்டுகொண்டு
எப்போதுஞ்சொக்கர்பாதம் ஏற்றியேதுதிசெய்வாயே.

(வ-ம்) எங்கள் புத்திரசிகாமணியாகிய நீன்முகா! யாங்கள் தபஞ்செய்ய வனத்திற்குச்செல்கின்றோம் ஆகலின் நீ இந்த செங்கோலைத் தாங்கி இராஜநீதி வழுவாமல அரசுபுரிந்து சொக்கராலயத்திலனுதினமும் பூஜை செய்துக்கொண்டும் சந்தோஷமாய் வாழ்ந்துக்கொண்டிருப்பாய் பாலா.

(நீன்முகன்) தந்தையே தமதாக்ஞைப் பிரகாரமே நடந்துக் கொள்ளுவேன்.

பாண்டியராஜாக்கள் தபஞ்செய்ய வனத்திற்குப்போகிற - தரு,

இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வனத்திற்சென்று தபஞ் — செய்வோமனைவரும்
வாருந்தம்பிமாரே

அநுபல்லவி.

சினத்தாற்சொக்கலிங்கரை யடித்தபாபம்போக
மனத்துள்ளோங்கிடுந்துன்ப மகன்றுவறுமையேக (வனத்)

சரணங்கள்.

ஆதியில்நாம்வாழ்ந்த — வாழ்வைநினைத்தாக்குன்றி
அங்கம்பதறினாலாகுமோ
வேதியனன்றனில் விதித்ததுதவறுமோ
ஜோதிமயப்ரகாசன் சோதனைபொய்யாமோ (வனத்)

மிருகண்டேயருக்கன்று — பரனார்குழந்தைவரம்
மிகவுஞ்சந்தோஷமாயளித்தாரே
பெருமைவிளங்குஞ்சொக்கர் பிரியமுடனமக்கு
தருவார்புத்ரசந்தானம் பெறுவோஞ்சுகமினிமேல் (வனத்)

கானகம்வந்தடைந்தோம் — கடவுள்கிருபையினால்
கார்த்திடுவார்துயர்தீர்ப்போமே
ஏனங்கடம்பைபுலி எதுவந்தாலுஞ்சரி
யானையிடம்விட்டு மகலோம்சிவமேயென்று (வனத்)

(வ-ம்) கேளுங்கள் தம்பிமார்களே நாம் கானகத்தில் வந்துவிட்டோம் இனி அவாளவாளுக்குத் தகுதியான இடத்திலுட்கார்ந்து தபஞ்செய்வோம்.



(பாண்டியர்கள்) அண்ணா அப்படியே செய்குவோம்.

சிவத்தியானம்செய்தல் - தேவாரம்.

அந்தரத்தமரர்போற்றும் ஆதியேசொக்கலிங்கா
சந்ததியில்லாமற்றான் தளர்ந்துயாமிங்குவந்து
உந்தனைத்துதித்தென்றனும் உறுதியாய்தபம்புரிந்தோம்
வந்தெங்கள்துயரைத்தீரும் வள்ளலேசிவப்ரகாசா

(வ-ம்) சிவாசிவா ஹராஹரா கைலாசவாசா எமக்குப் பிறகு இந்த மதுரைமாநகரத்தை பரிபாலனஞ்செய்ய மைந்தனில்லாக்குறையால் கானகத்தில்வந்து உமது திருவடியை நோக்கித் தபஞ்செய்கிறோம். இவ்வேளை எங்கள்மீது கருணைபுரிந்து புத்ரசந்தானந் தந்தருள்வீர் ஜெகதீஸ்தரா.

(மீனாட்சி) சுவாமி பாண்டியர்களுக்கு மைந்தனில்லையென்று வெகுநாளாய் தபஞ்செய்கிறார்கள். அவர்களுடன் பட்டத்து யானையும் மனவுறுதியாக தபம்புரிகின்றது. ஆ ஹா பிராணநாதா இவர்களுடைய பக்திவைராக்கியத்திற்கு மனமிரங்கி இவர்களுக்கு புத்திரசந்தானவரமருள்வீர் நாதா.

சொக்கலிங்கம்சொல் - கொச்சகம்.

மங்கையரேபிட்டுக்கு மண்சுமந்தவெனையடித்தோர்
பங்கதனைவஞ்சித்தோர் பசித்தோர்க்கமுதளியார்
அங்காடிகூடைகளை அதிரவில்லையிட்டோர்கள்
இங்கிவர்க்குமைந்தன்வரம் ஈவேனென்றெண்ணாதே


(வ-ம்) நாயகி இந்த பாண்டியர்கள்செய்த அக்கிரமத்தினால் அவர்களுக்கு புத்திரசந்தானவரமளிக்கேன். ஒரு ஏழைக்கிழவிக்காக வைகையணைகட்டப்போயிருந்த என்னை கைப்பிரம்பாலடித்த பாவிகளாச்சுதே. அந்தக்கொடியவர்களுக்கும், அங்காடிகூடையை அதிரவிலே கேட்டு கொள்ளையடித்தவர்களுக்கும், பந்தியில் வஞ்சனைசெய்தவர்களுக்கும், ஏழைகளின்பொருளையபகரித்ததுரோகிகளுக்கும், பசித்துவந்தோர்க்கு அன்னமிடா பாவிகளுக்கும் ஒருபோதும் புத்திரசந்தானமளிக்கோம்.

பொது - விருத்தம்.

சொல்லிவிட்டாரிவ்வண்ணம் சொக்கலிங்கம்
சுந்தரிமீனாட்சிமனந் தானாயற்றான்
மெல்லெனவேதோன்சதையில் கொஞ்சங்கிள்ளி

மேன்மையுடன்விட்டெறிந்தா ளட்வி தன்னில்
அல்லிக்கொடிமேல்விழுந்து பெண்குழந்தை
அழகிலகுஞ்சிங்கார மாய்விளங்க
நல்லவரந்தந்த மதுரையாளும்
நாயகியென்றேமகிழ்ந்தா ணந்தித்தார்ளே.

(வ-ம்) கேளுங்களோ பாசபையோர்களே பாண்டியர்கள் மைந்தன்வரம் வேண்டுமென்று தபஞ்செய்ய அவர்கள்செய்த அக்கிரமத்தால் புத்திர சந்தானங்கொடுக்கமாட்டோமென்று சொக்கநாதருரைத்தவார்த்தை யை மீனாட்சியம்மன்கேட்டு மனந்தாளாமல் தனது தோள் சதையில் கொஞ்சங்கிள்ளி வனத்தில்விட்டெறியவே அந்தசதையானது அல்லி கொடியின்மேலேவிழுந்து அழகிலகுஞ்சௌந்தர்யமுள்ளபெண்குழந் தையாயிற்று. மீனாக்ஷியம்மன் சந்தோஷித்து ஏழுவயதில் இளவரசு பட்டங்கட்டிக்கொண்டு பன்னிரண்டாம்வயதில்பார்த்தனுடைய அருச் சுனனை கலியாணஞ்செய்துக்கொண்டு வாழ்வாயென்று வரங்கொடுத் துத் தன் கழுத்திலணிந்திருந்தபதக்கமும் குழந்தைகழுத்திலணிந்து அல்லியரசாணியென்று பெயரிட்டழைத்து பாண்டியர்கள் முன்வந்து சொல்லும் விதங்காண்க.



மீனாக்ஷியம்மன் பாண்டியருக்குச்சொல் - விருத்தம்.

அன்போங்கு மதுரைவாழும் அருமைசேரசேயுங்கள்
கன்மத்தால்மைந்தனில்லாக் காரணமுற்றதாலே
வன்மைசேர்குழந்தைதன்னை வளர்த்தெடுத்துமக்குநேர்ந்த
அவலத்தைநீக்கியிந்த தொல்லுலகாளுவீரே.



(வ-ம்) பாண்டியர்களே நீங்கள்செய்த அக்கிரமத்தால் உங்களுக்கு புத்திரசந்தானமில்லையென்று சொக்கலிங்கம் திருவாய்மலர்ந்தருளிய தால் உங்களுக்குசந்ததியில்லாமற்போய்விடுமென்று என்மனதிரங்கி எனது தோள் சதையைக்கிள்ளி வனத்தில் விட்டெறியவே அது ஓர் அல்லிக்கொடியின்மீது விழுந்து பெண்குழந்தையாக இருக்கின்றது அதனை எடுத்துவளர்த்துக்கொண்டு உங்கள் புத்திரகலியைதீர்த்துக் கொள்ளுங்கள்.

பாண்டியர்கள் மீனாட்சியம்மனை தோத்திரஞ்செய்தல்
தேவாரம்.

அம்பிகைகௌரிநீலி ஆக்ஷியேயுமையவாமி
உம்பர்கள் துதிக்குமாயி உன்னடிதுணையுண்டென்று
நம்பியேயுனதுபூசை நாடோறுஞ்செய்துகொண்டு
அம்புவியோர்கள்மெச்ச அரசாட்சிபுரிவோமம்மா

(வ-ம்) அம்மா ஜெகஜ்ஜோதி பரமேஸ்வரி மதுரைமீனாட்சி நீரி யென்றனும் உனதுபாதமே துணையென்று நம்பியாசாளும் இந்த ஏழைகள் துயர்தணிய புத்திரசந்தானவரந்தந்தருளிய புவனேஸ்வரி உமது இடையினாலுதித்த குழந்தையை யெடுத்துக்கொண்டுபோய் யாங்கள் வளர்த்துக்கொண்டு உமது பாதாரவிந்தத்தை மறவாமல் அனுதினமும் பூஜித்துக்கொண்டு இராஜ்ஜியமிழவாமல் அரசாட்சி செய்துவருகிறோம் ஜெகரட்சகி.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே பாண்டியர்கள் புத்திரசந்தானவரம் பெறவேண்டி அனேக நாள்வரையிலும் தபம்புரிந்துமீனாட்சியம்மன் திருவையினால் அல்லிக்கொடியில் அவதரித்த குழந்தையை எடுத்துக் கொண்டு மதுரைக்கு வரும்போது நீன்முகராஜனிடம் தங்கள் வரு கையைத்தெரிவிக்க தூதர்களையனுப்பியபிறகு நடக்கும் விதங்காண்க.

தூதர்கள் நீன்முகனுக்குச்சொல் - விருத்தம்.

ஆண்டவாபெமதுகோவே அழகுள்ளமதுரைசெங்கோல்
பூண்டவாகௌரிதன்னால் புத்ரசந்தானமின்னும்
வேண்டியவரங்கள்பெற்றும் வையகந்தன்னையாள
பாண்டியர்வாரார்ஐயா பட்சமாயறிவித்தேனே

(வ-ம்) எம்மை யாதரித்திரட்சிக்கும் மகானுபாவரே! நிகரொரு வருமில்லாமலிந்த மதுரையில் அரசுபுரியும் நீன்முகராஜாவே பாண்டி

யர்கள் மீனாட்சியம்மனால் புத்திரசந்தான வரம்பெற்று சொக்கலிங்கம் அரசன் பின்னுக்கு வருகிறானென்று உமக்குத் தெரிவிக்கச்சொன்னார்களையா மகாராஜாவே.

நீன்முகன் தூதருக்குச்சொல் - விருத்தம்

சட்டங்கள் தெரியாதாலே சாற்றினார் வருவோமென்று
பட்டமே தலைக்குவெய்க பார்வேந்தன் யாவிருக்க
பெட்டென மதுரையாளை போகவிடுவீரேயென்று
திட்டமாய் நீன்முகன்றான் தெரிவித்தாரெனச்சொல்வீரே.

(வ-ம்) கேளுங்கள் தூதர்களே இந்த மதுரைமாநகரத்தை அரசுபுரியும்படியாக எனக்குப்பட்டாபிஷேகஞ்செய்துவிட்டு காட்டை கதியாய்ப் போய்விட்ட பாண்டியர்கள் மதுரைமாநகரை அரசுபுரியும் போராசையை யொழித்துவிட்டு நகர்புரத்தில் பயிர்செய்குடிகளிடத்திற்சென்று உழவுசெய்து ஜீவித்துக்கொண்டு வருஷத்திற்கொருதடவை எனக்கு ஆயிரம்பாற்குடங்கள்பகுதியாக அனுப்பவேண்டும் இல்லாவிட்டால் எனது செங்கோல்முறைப்படியவர்களை தண்டிப்பேனென்று தெரியப்படுத்துவீர்கள்.

(தூதர்கள்) அப்படியே தெரிவிக்கின்றோமையா.

தூதர்கள் பாண்டியருக்குச்சொல் - விருத்தம்.

மன்னவரே நீங்களுக்கான மதுரைக்குவரக்கூடாதாம்
அன்னியர்போலே நீங்கள் அவனியில் உழுதுகொண்டு
பன்னியபாற்குடங்கள் பகுதியுங்கொடுப்பீரென்று
நன்னயநீன்முகன்றான் நவின்றனனறிகுவீரே.

(வ-ம்) கேளுங்களையா பாண்டியர்களே நீங்கள் அதிகாரில் மதுரைமாநகரத்தை நீன்முகராஜனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்துவிட்டு காட்டை கதியாய்ப்போன உங்களுக்கு இனிமேல் யாதொரு சுவாதீனமில்லையென்றும் நீங்கள் இந்த நகர்புரத்தில் பயிரிட்டு உழவுசெய்துக் கொண்டு வருஷத்திற்கு ஆயிரம் பாற்குடங்களை பகுதியாக அனுப்ப வேண்டியது இல்லாவிட்டால் உங்களுக்கு செங்கோல்முறைப்படி ராஜதண்டனை கிடைக்குமென்று தெரிவிக்கச்சொன்னாரையா பாண்டியமகாராஜர்களே.

(பாண்டியர்கள்) ஆ தூதர்களே அப்படியா தெரிவித்தான்.
(தூதர்கள்) ஆம் அவ்வண்ணமே தெரிவித்தார்.



(பாண்டியர்கள்) ஆ சொக்கநாதா ஐயோ இனி யாதுசெய்வோம் திக்கில்லா ஏழைகளானோமே.

பாண்டியர்களுக்குநேர்ந்த அபாயத்தை சகிக்கமுடியாமல்
சொக்கநாதனை நினைத்து ப்ரலாபிப்பது - தரு.
இ-ர-காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| விந்தையிதென்ன விபரீதகாலமோ | சொக்கநாதா-எங்கள் |
| விதிவசத்தாலே அரசையிழந்தோமே | சொக்கநாதா |
| அறியாச்சிறுவனென்று அரசையளித்தோமே | சொக்கநாதா-எம்மை |
| அதட்டித்துரத்தி அநியாயஞ்செய்தானே | சொக்கநாதா |
| கன்மவிதிபோகட்டுமென்றெண்ணியே | சொக்கநாதா-மெத்த |
| கலங்கித்துடித்து தவிக்கின்றோமென்செய்வோம் | சொக்கநாதா |
| நரிகளைப்போல மதுரையையாண்டதும் | சொக்கநாதா-இந்த |
| நன்பத்தைநோக்க துடிக்குதேதங்கள்மனம் | சொக்கநாதா |
| காசினியாளைகையில் தரணியையொப்பித்து | சொக்கநாதா-இப்போ |
| மயங்கிமயங்கித் துடித்தழுகின்றோமே | சொக்கநாதா |
| இன்றைக்குநாளைக்கு வேணுமென்றெண்ணாமல் | சொக்கநாதா-யாவும் |
| இப்பாவிகைதனிலொப்பித்துச்சென்றோமோ | சொக்கநாதா |
| துரோகஞ்செய்யானென்று செங்கோலைத்தந்தோமே | ,, ,, -இப்போ |
| துடர்வழக்காடத் துணிந்துகட்டிக்கொண்டானே | சொக்கநாதா |
| ஆரிட்டசாபமோ அறியோமிந்நாளும் | சொக்கநாதா-இந்த |
| அவனியில்நின்று அழுதிடலாச்சுதே | சொக்கநாதா |
| எங்கள்குலதெய்வமென்றெவரும்புகழ் | சொக்கநாதா-இந்த |
| ஏழைகளுக்குமேங்கிப்புழுகின்றார் | சொக்கநாதா |
| யானைசேனைபரிவாவுங்கலங்குதே | சொக்கநாதா-இது |
| யாங்கள்செய்பாபமோ யாரிடத்தோதுவோம் | சொக்கநாதா |
| என்றுக்குமென்னைபோலெங்கும்ப்ரகாசிக்கும் | சொக்கநாதா-இனி |
| எங்கள்துயரையொழித்திடுவீரையா | சொக்கநாதா |

(வ-ம்) ஐயோ இதென்ன விந்தை தரணியைத்தன்கையில் தரணியைக்கொடுத்துவிட்டு மோசம்போனோமே. ஆ! சொக்கநாதா மதுரை மீனாட்சி யாங்களெல்லாந்திகைத்துப்போம் இனி எங்களைக்காப்பாற்றி இரட்சிக்கமாட்டீர்.

பாண்டியர்கள் ஒருவர்க்கொருவர் தைரியஞ்செய்துகொள்ளுதல்

விருத்தம்.

இந்திரன்போலேயாமும் இணையிலாசெங்கோலேந்தி
சுந்தரமதுரைதேசந் சுகமுடனாண்டோமென்று
அந்தகாளிருந்தவாழ்வை அகந்தனிலெண்ணிடாமல்
வந்திடும்உழவுசெய்து வையத்தில்ஜீவிப்போமே.

(வ-ம்) சகோதரர்களே நாமேசெய்துகொண்ட காரியத்திற்கென்னசெய்வது எவரைநோவது இதனைக்குறித்து விசனப்படலாகாது ஆகலின் ஆதியில் நாம் பூலோக இந்திரனைப்போலிருந்து தற்சமயம் ஏழைகளானோமென்று சஞ்சலப்படாமல் நகர்புரத்திலிருக்கும் பயிரிடுங் குடிகளிடஞ்சென்று அவர்களைப்போலநாமும் பயிரிட்டு ஜீவனஞ்செய்துகொண்டு வருஷாவருஷம் நீன்முகனுக்கு ஆயிரம்பாற்குடங்கள் பகுதிகட்டிக்கொண்டு வந்தோமானால் மீனாட்சியம்மன் சகாயத்தால்கல்லகாலம்பிறந்துசுகப்படுவோம் பயப்படாதீர்கள் சகோதரரே

பொது-விருத்தம்.

தொல்லுலகாசைபாண்டு துலங்கும்பாண்டியர்களெல்லாம்
எல்லைக்கப்பாலோர்பக்கம் ஏரோட்டியுழவுசெய்து
செல்லைத்விளைத்தன்பாக சேமியில்பிழைக்கும்போது
அல்லியுங்கல்விகற்று அன்புடன்வளர்கின்றாளே.

(வ-ம்) பாண்டியராஜாக்கள் நீன்முகனிடத்தில் மதியீனத்தால் மதுரைமாநகரைகொடுத்துவிட்டோமேயென்றுமனந்தளர்ந்து குடிகளைப்போல் தாங்களும் பயிரிட்டு ஜீவனம் செய்துகொண்டு வருஷாவருஷம் நீன்முகராஜனுக்குஆயிரம்பாற்குடம்பகுதியாகஅனுப்பிக்கொண்டிருக்கும்போது மீனாட்சியம்மன் வரப்பிரசாதத்தால் அல்லிக்கொடியில் திருவவதாரஞ்செய்தஅல்லியரசாணியென்னுங் குழந்தை நாளுக்குநாளதிகமேன்மையோடுவளர்ந்து கல்விமுதலாகிய யானையேற்றம் குதிரையேற்றம் அஸ்திரசஸ்திரவித்தைகள்யாவுங் கற்றுக்கொண்டு வருகிறவிதங்காண்க.

அல்லியரசாணிவருகிற - தரு.

இ ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

அல்லியும்வந்தாளே—கல்விகள்கற்று
அகமிகமகிழ்ந்தாளே



அநுபல்லவி.

தொல்லுலகாண்டதோர் வல்லமைப்பாண்டியர்
அல்லலைப்போக்கிடுஞ் செல்வநவணிபோல் (அல்லி)

சரணங்கள்.

அரிச்சுவடிமுதலில்—கற்றனபின்பு
ஆத்திசூடியுங்கனிதம்
விரித்துரையகராதி விளங்குமிலக்கணம்
தரித்தநிகண்டுகுறள் தமிழெலாங்கற்றுணர்ந்து (அல்லி)

ஆனைகுதிரையேற்றம்—யாவையுங்கற்று
அணிதிரன்பந்தாட்டம்
சேனைசூழ்வையகம் செழித்துத்தழைத்திட
வானவர்முதலானோர் வாழ்த்திமகிழ்ந்திட (அல்லி)

வில்பிடித்திடுமார்க்கம்—கணைகளை
விசையாய்த்தொடுக்குந்திர்க்கம்
எல்லாமுணர்ந்தயாவ ரெவர்க்குமஞ்சேனென்ன
வல்லமைபேசியே வையங்கீர்த்திபெற்றிடவே (அல்லி)

பொது - விருத்தம்.

அன்பாயநீன்முகர்க்கு அனுப்பவேபாற்குடத்தில்
பின்னியமஞ்சள்சேலை விரைவுடனணியும்போது
என்னிடத்தைமாரே ஏனிதுவென்றுகேட்க
பன்னினர்பாற்குடத்தை பகிரெனஉதைத்திட்டாளே.

(வ-ம்) இவ்விதமாய்பாண்டியர்கள் வருஷாவருஷக்கோறும்தப்பாமல் நீன்முகராஜனுக்கு பகுதியனுப்பும் வழக்கம்போல ஆயிரம் குடங்களிலும் பால்வார்த்து மேலேமஞ்சள் சீலையணிந்துக்கொண்டிருக்கும்போது அல்லியரசாணி வித்தியாசாலையிலிருந்து மிகவும் பசியோடு அமுதருந்த வீட்டுக்குவந்தசமயத்தில் ஆயிரம் பாற்குடங்களையும், அதையெடுத்துக்கொண்டுபோக வந்திருக்கும் தூதர்களையும்பார்த்து இவர்கள்யார் யாதுகாரணமாக இவ்வளவுபாற்குடங்களை சித்தப்படுத்துகிறீர்களென்றுகேட்க பாண்டியர்கள் நடந்தசங்கதிகளையெல்லாம் ஆதியோடந்தமாகசொன்னார்கள். இவைகள்யாவுங்கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த அல்லியரசாணிக்குக் கோபம் பொறுக்கமுடி-

யாமல் பார்குடங்களையெல்லாங் காலாலிடறிவிட்டு பாண்டியருடைய மதியினத்திற்கும் நீன்முகன்செய்த மோசத்திற்கும் சரியாயிருக்கிறதென்று பல்லை நெறநெறவெனக்கடித்து கண்களிரண்டும் சிவந்துகோபாவேசங்கொள்ளும் விதங்காண்க.



அல்லியரசாணிசொல் - விருத்தம்.

மாநிலாவல்லியாளுன் மகளாகவந்துதித்தும்
வேசியின்மைந்தனுக்கு விந்தையாய்ப்பகுதிகட்ட
யோசனைசெய்யவேண்டா மொருகொடிகணிலேசென்று
தூசிபோற்பறக்கடிப்பேன் துஷ்டநீன்முகனையானே.

(வ-ம்) ஆஹா ! சபாஷ் ! கொசுவுக்குபயந்துகோட்டையைவிட்டோடியதுபோலவும், எலிக்குபயந்து வீட்டைவிட்டோடியதுபோலவும், அந்தவேசிமைந்தனுக்குப் பயந்து உம்முடைய அரசாங்கத்தை இழந்ததுமல்லாமல் அவனுக்குப்பகுதியும் அனுப்புகிறதா வேண்டிநில்லையானேசென்று அந்த நீன்முகனைசம்மாரஞ்செய்வேன் தந்தையே.

(பாண்டியர்கள்) நல்லதம்மணி.

(அல்லியரசாணி) அடாகாவற்காரா.

(காவற்காரன்) அம்மணி.



(அல்லியரசாணி) அதிசீக்கிரத்திற்சென்று பாம்பு பிடாரர்களைவரவழைப்பாய்.

(காவற்காரன்) அப்படியே அழைத்துவருகிறேனம்மணி.

பொது - விருத்தம்.

சிரத்தினிற்பாகைபூண்டு சீறிடும்பாம்பையெல்லாம்
கரத்தினிலேந்திக்கொண்டு காசினியோர்களஞ்ச
வரத்தினுற்பிறந்தவல்லி வரச்சொன்னதெனப்பிடாரர்
தரித்திரம்விலகிற்றென்று தைரியமாய்வருகின்றாரே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணியின் ஆக்ஞைப்பிரகாரம் காவற்காரன் கானகத்திலிருக்கும் பாம்புபிடாரர்களை அழைத்தவுடனே அவர்கள்மிகவுங் களிப்படைந்து கருநாகம் செந்நாகம், கட்டுவிரியன, மண்ணுளி, பயங்கரவு முதலாகிய சர்ப்பங்களை எல்லாம் எடுத்து கழுத்தில்சுற்றிக்கொண்டு பாம்புபெட்டியை கையிலெடுத்துக்கொண்டு வெகுவேடிக்கையாக ஆட்டகாசஞ்செய்துக்கொண்டு வருகிற விதங்காண்க.

பாம்புபிடாரர்கள் வருகை - தரு.

இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

அஞ்சாவீரர்யாமே—இந்தஅதலவிதலபாதாளத்துப்பாம்பை
ஆட்டும்பிடாரர்யாமே

அநுபல்லவி.

வஞ்சகநெஞ்சர்களின் வல்லுயிரொழித்திடும்
நஞ்சுள்ளபாம்பையெல்லாம் அஞ்சாமலாட்டிடும் (அஞ்)

சரணங்கள்.

கருநாகஞ்செந்நாகம்—கட்டுவிரியன்
விதரிலாநற்பாம்பு
பார்தனிலாடிடும் படமுளளப்பாம்பும்
கர்விதப்பாம்புங் கையாலாட்டிடும் (அஞ்)

மண்ணுளிகந்திரியும்—பயங்கரவும்
பலநாகந்தாசிரியும்

விண்ணுலகம்புவியும் விந்தையிதென்னவும்
எண்ணெணுப்பாம்புபய மெடுத்தாடப்பண்ணவும் (அந்)

அல்லியரசாணி—எயக்குப்பொருள்
அளிப்பாள் துரைராணி

தொல்லுலகத்தனி யில்லைநமைமினி
வல்லமையோராகி வெல்லோஞ்சிறுமையினி (அந்)

பாமபுபிடாரர்கள் அல்லியரசாணிக்குச்சொல் - விருத்தம்,

அம்மணியல்லியெம்மை அன்புடன்வரவழைத்த
செம்மைசேரிலகுத்தாயே சேதியைச்சொல்வீராகில்
உம்மனம்போலேயாங்கள் உண்மையாய்நடத்திக்கொள்வோம்
எம்மனோர்வறுமைநீங்க சகுவாய்வெகுமானந்தான்

(வ-ம்) அம்மா எங்கள் பாண்டியராஜருடைய வரத்தினலுதித்த அல்லியரசாணித்தாயே எங்களை வரவழைத்த சேதியைத் தெரியப்படுத்துவீராகில் உமது இஷ்டம்போல் நடத்திக்கொள்ளுவோம். ஆ... யாங்களனேகம்பேர் வந்திருக்கிறோம் வெகுமானம் அதிகமாய்க் கொடுக்கவேண்டுமம்மணி.

(அல்லியரசாணி) அப் பிடாரர்களே உங்களுக்குவேண்டிய திரவியந் தருகிறேன் இந்தக்குடங்களில்பாம்புகளைவிட்டு மேற்புறத்தை மூடிகட்டிவிடுங்களடா.

(பிடாரர்) அப்படியேசெய்துவிட்டோமம்மணி.

(அல்லியரசாணி) இந்த நாறுவராகனையுமெடுத்துக்கொண்டு செல்வீர்கள்.

(பிடாரர்) நல்லதம்மணி

(அல்லியரசாணி) அடா காவற்காரா அம்பட்டனைவரவழைப்பாய்.

(காவற்காரன்) இதோ அழைத்துவந்தேனம்மா.

அம்பட்டர் அல்லியரசாணிக்குச்சொல் - விருத்தம்.

அன்புடனிலகுந்திவ்ய அல்லியாத்தாயேபோற்றி
உன்மனஞ்சந்தோஷிக்க உறுதியாயெம்மையழைத்த
தென்னமோவெமக்கிப்போதே தெரிவித்தீராகுவந்த
வன்மையாமங்காரியத்தை வகையுடன்செய்துவோமே

(வ-ம்) அம்மணி எங்களைவரவழைத்தசேதியைத் தெரியப்படுத்துவீராகில் உமது இஷ்டம்போல் நிறைவேற்றுவோமம்மா.



29

(அல்லியரசாணி) இந்த நாதர்களுக்கு தாடி மீசையாவும் மழுங்க ...ரட்டையடிப்பீர்கள்.

(அம்பட்டர்கள்) உமது ஆக்ஞைப்பிரகாரமே இவர்களெல்லோருக்கும் தாடி மீசையாவையும் சிரைத்துவிட்டோமம்மணி.

(அல்லியரசாணி) இந்த நாறுவராகனையும்வாங்கிக்கொண்டு சந்தோஷமாய்ச் செல்வீர்கள்.

(அம்பட்டர்கள்) அப்படியே மகாபாக்கியமம்மா.

(அல்லியரசாணி) காவலாளிகளே இவர்களுடைய முகமெங்கும் கரும்புள்ளி செம்புள்ளி பொட்டுவீர்கள்.

(காவலாளிகள்) அம்மணி உமது ஆக்ஞைப்பிரகாரமே இவர்கள் முகமெங்கும் பொட்டிட்டோம்.

அல்லியரசாணி பாண்டியருக்குச்சொல் - விருத்தம்.

உத்தமகுணனரான உங்களைமோசஞ்செய்து
சத்தியநெறிதவறிந்த நாணியையபகரித்தோன்
சித்தமுங்கெடுமென்ன சீட்டொன்றுமெழுதியின்மேன்
எத்திசைபுகழுமோலை எழுத்தாணிகொண்டுவாரும்.

(வ-ம்) தந்தையே வஞ்சகநெஞ்சைப்படைத்து உங்களுடைய இராஜ்ஜியத்தையுங் கைக்கொண்டதுமன்றி உம்மை ஏழைகளாகச்செய்து ...ஸ்வருஷம்பிரட்டியுருட்டி பயங்காப்படுத்தி பறுதிவரவிட்ட நீன் ...இடுமிடென்று பயந்துங்கொள்க அவனுக்கு நிருபமெழுதவேண்டும் ...ன் அதிசீக்கிரமாக ஓலையும், எழுத்தாணியுங் கொண்டுவருவீர்.

(பாண்டியர்) இதோ கொண்டுவந்தோமம்மா.

அல்லியரசாணி நீன்முகனுக்கு ஓலையெழுதவது.

பன்னிருசீக்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்ட மாமதுரை யாளவே யலங்கார
சிங்கார மாயுதித்த
செல்வியா மல்லியும் நீன்முகன் காணவே
செவ்வையா யெழுதுநிருபம்
பார்கொண்ட மிப்புவியில் மதுரைமீ னாட்சியும்
பராக்ரமா யெனைப்படைத்து
பாண்டியர் குமாரத்தி யென்றிவர்க் கென்தனை
பக்ஷமுட னேயளிக்க

கேர்கொண்ட வில்வித்தை யாவையு முணர்ந்துயான்
  நிகரிலா கீர்த்தியுற்றேன்
கேமியோர் புகழவுன் றேசெமர் செய்துனது
  கெஞ்சைப் பிளந்துவெட்டி
தார்கொண்ட புவியோர் மகிழ்ந்திடுக யானுமே
  தைரியகுண சம்பன்னனாய்
தகதகெனெ நவரத்ன மகுடமுடி மின்னவும்
  தனியரசு புரிகுவேனே.

இப்படிக்கி,

அல்லியரசாணி.

(அல்லியரசாணி) அடா தூதர்களே! இந்த சர்ப்பக்குடத்தையும் ஓலைச்சுருளையும் எடுத்துக்கொண்டுபோய் உங்களரசனுகிய நீன்முகனிடங்கொடுப்பீர்கள்.


(தூதர்கள்) நல்லதம்மா.

பொது - விருத்தம்.

இவ்விதமாயுரைக்க இவர்களையனுப்பிவிட்டாள்
அவ்விடம்விட்டுத் தூதர் அன்புடன்மதுரைக்கேகி
ஒவ்வியேநீன்முகற்கு ஓலையைத்தந்தபோது
செவ்விழியனல்பறக்க சீறியேகோபித்தானே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே தூதர்கள் அல்லியரசாணியால் மீசைதாடியையிழந்து பாம்புக்குடங்களை எடுத்துக்கொண்டு மதுரைக்குவந்து சனிபென்னை மண்டபத்தில் என்னைதேடித்தாக்கொண்டிருக்கப்பட்ட நீன்முகன்முன்பாக இறக்கிவைத்தார்கள் உடனே அவன் திறந்துபார்க்கவே சர்ப்பங்களெல்லாம் புஷ்பெனச்சீறியதைக்கண்டு இதென்ன விபரீதமென்று ஆச்சரியமடைந்து வெகுகோபத்தோடு தூதர்களைப்பார்த்து எழுந்திருந்தான் அப்போது தூதர்கள் பயந்து ஓலைச்சுருளையும் கொடுத்துவிட்டார்கள். இதென்னவென்று பிரித்துவாசித்துப் பார்த்தவுடனே அளவில்லாத சினங்கொண்டு ஆக்ரமித்து பற்கடித்து என்னைத்தலையுடனே அரண்மனைக்குவந்து சேனுபதியை யழைத்து ஆனைசேனைபரிவாரங்களையெல்லாம் சித்தப்படுத்தி ரணபேரிகைமுழுங்கச்செய்து தானும் ஆயுதபாணியாக கரத்தில்விற்பிடித்துக்கொண்டு முதுகில் அம்புறாத்தூணியை யணிந்து தாருட்டுறுப் புறப்பட்டுவெகுவிறவித்தகாண்க.





ன்முகன் அல்லியரசாணிமீது சண்டைக்குப்புறப்படுகிறை - தரு

இ-ம்-சோசனம்-மிசாதாளம்.

பல்லவி.

சீக்கிரமிப்போமே செல்லுவோம்-பகைவர்
சித்தங்கிடுங்கிட வெல்லுவோம்

அநுபல்லவி.

கோக்குங்குழந்தையென்று கினைத்திதன்னைபரிதாபம்
பார்க்காமலேயிந்த பணத்தாற்கொல்லுவேன் (சீக்கிர)

(வ-ம்) ஆ ஹா ஹா சேனைகளே அந்த அல்லியரசாணியை குழந்தையென்று கொஞ்சமேனும் பரிதாபம்கினையாமல் இந்த பாணத்தி... ராயாகச்செய்கிறேன் பாருங்கள் வீரர்களே.

சரணங்கள்.

வில்லாளிகட்கொரு சிங்கமோ—அவள்
விருதாவார்த்தையென்முன் தங்குமோ
சொல்லுமுன்னஞ்சிட வல்லமையாகவே
புல்லுமழுங்கிட வல்லுயிர்போக்கவே (சீக்கிர)

(வ-ம்) சேனைகளே விற்பிடித்தமன்னர்களெல்லாம் ஒருபூனையென் ... தானே மிருகேந்திரனுகிய சிங்கமொன்றும் மதித்தனரோ என்ன ... சாயம் கல்லதாகட்டும்.

உறவுசெய்வோரந்தப் பாண்டியர்—கையில்
உற்றாயுதமில்லா மொண்டியர்
வழவழென் றபேசி வையகமென்னிடம்
பொழுதோடேவிட்டோடிப் போனாரேயவ்விடம் (சீக்கிர)

(வ-ம்) சேனைகளே சண்டைக்குரிய வில்வாள் கத்திகேடயம் ஈட்டி பாலபரிசை முதலான ஆயுதங்களையுமிழந்து பசிபிணிக்குடிகளைப் போல் சீவனஞ்செய்யும் பாண்டியர்களின் திறத்தையும் அல்லியரசாணியின் வீரத்தையும் பார்க்கலாம் வருவீர்கள்.

பூனைப்புலிகளை வெல்லுமா—அவர்கள்
பூண்டபெண்ணமிங்கே செல்லுமா
ஆனைசேனைபரி யாவும்நமக்குண்டு
ஆயுதமில்லா தவர்க்கென்னசமர்த்துண்டு (சீக்கிர)

(வ-ம்) சேனாதிபதிகளே பூனைக்குட்டி புலிக்கூட்டத்தைவெல்லுமா? இதென்ன ஆச்சரியம்! நம்மிடத்தில் இவ்வளவு சேனைகளி யங்க ளிருக்கின்றனவே நிராயுதபாணியாயிருக்கும் பாண்டியர்கள் எவ்விதமாக நம்மைஎதிர்த்துப்போர்செய்வார்கள் பார்ப்போம்.

முப்பத்துமுக்கோடி தேவரும்—திரி
மூர்த்திஎன்னுமந்த மூவரும்
அப்பப்பாகுறுக்கையென் றவர்கள்தடுத்தாலும்
அல்லியைகொல்லாமல் ஆறுமோதன்கோபம் (சீக்கிர)

(வ-ம்) சேனைத்தலைவரே! பாண்டியர்கள் வாசஞ்செய்யும்படியான இடமிதுதான் இவ்விடத்திலேயே கூடாரம்போடுங்கள். ஒருசமயம் நான்முகப்பிரமாதியர் ரிஷிமுனிசித்தர் கருடகாந்தர்வர்கள்வந்துதடுத்தாலும் அல்லியரசாணியைக்கொல்லாமல் என் கோபந்திராது.

பொது - வசனம்.

சேருங்கள் சபையோர்களே இவ்விதமாக நீன்முகராஜன் யுத்தசாலத்துடனேரதகஜதுரகபதாதிகளுடன் சண்டைக்கு வந்திருக்கும் ஆர்ப்பாட்டத்தைக்கண்டு பயந்து மீனாட்சியம்மன் திருவருளாலுதித்த அல்லியரசாணிமுன்பாக பாண்டியர்கள்வந்து சொல்லும்விதங்காண்க.

பாண்டியர்கள்சொல் - விருத்தம்.


அம்மணியென்னசெய்வோம் அன்யாயநீன்முகன்றான்
செம்மையாய்த்தேரிலேறி சேனையோடிங்குவந்து
நம்மையேகொல்வதற்கு நமன்போலுமிருப்பதாலே
எம்மனோருளங்கலங்கி ஏங்கியேதுடிக்குதம்மா

(வ-ம்) அம்மணி எங்கள்பிள்ளைகளிதிர்க்கப்பிறந்த குலக்கொடியே நமது பகைவனாகிய நீன்முகன் ரதகஜதுரகபதாதி சேனாசமுகங்களுடனே நம்மைக்கொல்லும்படியாக சண்டைக்குவந்திருக்கின்றானே என்னசெய்வோமம்மா.

(அல்லியரசாணி) பயப்படாதீர்கள் ஆலயத்திற்குச்சென்று சொக்கலிங்கேஸ்வரரையும், மீனாக்ஷியம்மனையும் பூஜித்து சேஷமத்தேறும் அழியாத வில்லும் குறையாத அம்புறாத்தூணியும் வாளாயுதமும் வாங்கிக்கொண்டுவந்து நீன்முகனையும் அவனுடையசேனைகளையும் எமபுரத்திற்கனுப்புகிறேன் தந்தைகளே.

(பாண்டியர்கள்) அப்படியே வரம்பெற்றுவருவாயம்மா.

அல்லியரசாணி தான் திருவவதாரஞ்செய்த
அல்லிக்குளத்தில் ஸ்நானஞ்செய்து
சொக்கலிங்கேஸ்வரரையும்
மீனாட்சியம்மனையும்
பூஜித்தல்



சொக்கலிங்கேஸ்வரர்ஸ்தோத்திரம்-தேவாரம்.

அந்தரியுமைவராகி அம்பிகைபாகர்போற்றி
சிந்தித்தோர்க்கருள்மெய்ஞ்ஞான சிவானந்தமயமேபோற்றி
சுந்தரமதுரைவாழும் சொக்கலிங்கேசாபோற்றி
தந்தருள்வரமெனக்கு தயாபராபோற்றிபோற்றி.

மீனாட்சியம்மன் ஸ்தோத்திரம் - தேவாரம்.

திங்கள்போலிலகுந்திவ்ய திகம்பரிபோற்றிபோற்றி
சிங்கவாகனத்திலேறும் சிவகாமித்தாயேபோற்றி
மங்களானந்தியான மதுரைமீனாட்சியம்பா
எங்களையாட்கொண்டாளும் ஈஸ்வரியுன்றாள்போற்றி.

(சொக்கர்) மீனாட்சி இதோ நமது குழந்தையாகிய அல்லியரசாணி வந்திருக்கின்றனள் பார்த்தனையா.

(மீனாட்சி) சுவாமி யாதுகாரியார்த்தமாகவந்தனளோ நாம் அருகிற் சென்று விசாரிப்போம் வருவீர் பிராணநாதா.

பொது - வசனம்.

கேளுங்களையா சபையோர்களே இவ்விதமாக அல்லியரசாணி தன்னுடையபகைவனாகிய நீன்முகனை சம்மாரஞ்செய்யும்பொருட்டு வரப்பிரசாதம்பெற்று வருவோமென்று ஆலயத்திலவந்து சொக்கநாதனை யும் மீனாட்சியம்மனையும் பக்திவைராக்கியத்தோடு பூஜித்துக்கொண்டிருப்பதைக்கண்ட சுவாமியும் அம்மனும்மனமகிழ்ந்து யாதுகாரியார்த்தமாக வந்தாயென்று விசாரிக்கும்விதங்காண்க.

மீனாட்சியம்மன்சொல் - விருத்தம்.

செழுந்தோங்குழுசவிளச செல்வமேயல்லிமண்மேல்
விழுந்தோங்கிது சிக்குழந்தன் விசனத்தையெங்கள்முன்னே
எழுந்தோங்கிலாய்திறந்து எங்கள்காதுக்கின்பாக
குழந்தைநீயுரைத்தாலுந்தன் குறைதீர்த்துவரமீவோமே.

(வ-ம்) குழந்தாய்! உனது பக்திவைராக்கியத்திற்கு மனமகிழ்ந்து மிகவும் ஆனந்தமடைந்தோம் உனக்கு வேண்டும்வரத்தைக் கேட்பாயாகில் திருவருள்புரிகுவோமம்மா.

அல்லியரசாணிசொல் - விருத்தம்.

சொல்லம்மாவென்றுரைத்த சொக்கர்மீனாட்சித்தாயே
வில்லம்புத்தேருஞ்சேனை வீரவாள்புரவியின்னம்
பல்லம்புமெனக்களித்து பாவிநீன்முகனைவாட்டி
கொல்லம்மாவெனும்வரத்தை கொடுத்தருள்புரிகுவீரே.

(வ-ம்) சிவசிவா கைலாசவாசா கருணாநிதியெனுங் கர்த்தவ்யமே சொக்கலிங்கேஸ்வரா மீனாட்சியம்மா உங்கள் வரப்பிரசாதத்தால் அல்லிக்கொடியிற்பிறந்து பாண்டியனுடைய புத்திரியாகிய என்னோடு



யுத்தம்புரிவதற்காக நீன்முகன் படையெடுத்து வந்திருக்கிறான் வீராயுதபாணியாகிய யானென்னசெய்வே னென்று ஏங்கமனந் தத்தளிக்கின்றது ஆகலின் எனது பகைவனை சம்மாரஞ்செய்யும்பொருட்டு எனக்கு க்ஷேமத்தேரும், அழியாத வில்லும், குறையாத அம்புறாத்தூணியும், வாளாயுதமும்கொடுத்து என்னை ஆதரித்திரட்சிக்கவேண்டும் எங்கள் குலதெய்வமே.

(மீனாட்சியம்மன்) குழந்தாய் நீயொன்றுக்கும் அஞ்சவேண்டாம் இந்த ரதத்தின்மீது ஆரோகணித்து இந்த வில்லைக் கையிற்பிடித்துக் கொண்டு அந்தநீன்முகன்மீது இந்த அஸ்திரங்களையேவி அவனைசம்மாரஞ்செய்துவிட்டு இந்த மதுரைமாநகரத்தை பட்டாபிஷேகஞ் செய்துக்கொண்டு அரசுபுரிவாயம்மா.

(அல்லியரசாணி) மகாபாக்கியமம்மா ஜெகரக்ஷி.

(சொக்கலிங்கேஸ்வரர்) குழந்தாய்! உனக்கு படைத்துணையாக இந்த சேனைசின்னங்களையும் அழைத்துச்செல்லுவாய் இந்த அம்புறாத்தூணியில் வருணாஸ்திரம், வாய்வாஸ்திரம், கருடாஸ்திரம், பிரம்மாஸ்திரம், நாகாஸ்திரம், இந்திராஸ்திரம் முதலாகிய அநேக திவ்யாஸ்திரங்களிருக்கின்றன இதையும் எடுத்துக்கொண்டுசென்று உனது பகைவனை சம்மாரஞ்செய்வாயம்மா.

(அல்லியரசாணி) அப்படியே மகாபாக்கியமையா கருணாநிதியே.

பொது - விருத்தம்.

சொக்கர்மீனாட்சிபாதந் தொழுதுகற்றேறிமேலி
மிக்கவேபடைகள்சூழ மிகுந்தஆர்ப்பாட்டத்தோடு
சிக்கெனநீன்முகன்றன் சேனைக்குள்புகுந்துவில்லை
உக்ரமாய்வளைத்தம்பேற்றி யுத்தஞ்செய்கின்றாள்பாரீர்.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணி சொக்கநாதரையும் மீனாட்சியம்மனையும் தியானம்செய்துக்கொண்டு ஆலயத்தைமூன்றுதரம்சுற்றிவந்து நமஸ்காரஞ்செய்து தேரிலேறிக்கொண்டு தனக்கு வரப்பிரசாதமாய்க்கிடைத்த சகல சேனைசின்னங்களுடனும் ஆயுதபாணியாகப் புறப்பட்டுவந்து நீன்முகராஜனுடைய சேனைகள் மீது அஸ்திரங்களை மழைபோலவருஷித்து காம்வேறு சிரம்வேறாக கண்டதுண்டம்செய்வதை நீன்முகன்கண்டு ஆச்சரியமடைந்து அல்லியரசாணியுடன் சண்டைசெய்யும் விதங்காண்க.

நீன்முகன் சொல் - தரு.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

கண்ணிகள்.

ஆகாத்யவித்தையின் அதிரப்காலமோ
அல்லியரசாணி அஸ்திரமுல்லமோ
வகோமெய்த்தனசேனை வாடியகேடல்லோ
வல்லமையாகவே வாட்டியஞ்சாலமோ
ஆனையுடன்பரி யானதுவுங்கரி
சேனைகளுஞ்சரி யானவரும்ஹரி
எல்லாமிறந்தாரே—ஆஹாஹா
எமலோகஞ்சேர்ந்தாரே.

(வ-ம்) ஆஹாஹா, சேனைகளே! அல்லியரசாணி வில்லிற்றொடுத்து விடுத்த அஸ்திரங்களால் நமது யானை சேனை குதிரைகளெல்லாம் இறந்ததுமல்லாமல் மீதியாயுள்ள சேனைகளெல்லாம் நிற்கமுடியாமல் ஓடுவதைப் பார்த்தால் வெகு ஆச்சர்யமாயிருக்கின்றது சேனைகளே ஓடாதீர் ஓடாதீர்கள் எல்லோரும் அணியணியாயிருந்து சண்டைசெய்வீர்கள் ஒருகைபார்ப்போம்.

அல்லியரசாணி சொல் - தரு.

ஒருகைபார்ப்போமென் றுளரவேண்டாம்நாயே
ஓர்கணையாலுனை ஓட்டச்செய்வேன்பேயே
கருவத்தாற்சாமர்த்யங் கருதவேண்டாம்வாயை
கையாலேமூடிக்கொண் டோடுவேனென்பாயே
கிட்டாதேகைகையத் தாட்டாதேபொய்யை
பூட்டாதேமெய்யை வாட்டாதேவையை
மெல்லாமதிர்த்திடவே—இந்திரசனை
வில்லிற்றொடுத்தேனிதோ

(வ-ம்) நீன்முகா! துன்னினமா பொறுக்குமா? உனக்கெவ்வளவு செருக்கிருந்தாலும் எவ்வளவு படைத்துணையாக வந்தாலும் என்னை ஜெயிப்பதற்குமுடியாது இதோ பார்த்தனையா யான்விடுத்த இந்திராஸ்திரத்தினால் உன்னுடைய சேனைகளெல்லாம் கைவேறு, கால்வேறு, சிரம்வேறாக கண்டதுண்டமாக மடிந்தது இப்போது நீ ஒருவன்தான் மீதியாயிருக்கின்றாய்.



33

நீன்முகன்சொல் - தரு.

ஆனைபரிகள் யாவுமிறந்தாலும்
அதிரதசமரதர் அடியோடேமடிந்தாலும்
சேனைக்கூட்டமெல்லாஞ் செத்துமடிந்தாலும்
தேர்த்துரகபடை யாவுமிறந்தாலும்
சொல்லிவிட்டுமேறுன் அல்லியரசாணி
பல்லுமுதிர்ந்தென் றல்லோருங்காண்பவன்
வில்லிலேசேர்ந்திரம—விட்டேனுனை
கொல்லுமிர்த்தயிடையை

(வ-ம்) ஆ! ஹா! ஹா! அல்லியரசாணி! என்னுடைய ஆனை, சேனை, பரிவாரங்களியாவும் உயிரிழந்துமடிந்தாலும் யான் பயப்படுவேனென்றெண்ணாதே இதோ பார்த்தனையா இந்தக்கணையினாலுன்னுடைய பல்லக்கெல்லாம் பொடிப்பொடியாய் புதிரும்படிசெய்துவுன்னை எமபுரத்திற்கனுப்புகிறேன்.

அல்லியரசாணிசொல் - தரு.

வஞ்சகனேயுனை வாட்டுமேமோகனாஸ்திரம்
வாய்வாஸ்திரத்துடன் மதிவருணாஸ்திரம்
பஞ்சையேபாராடா பார்வதியாஸ்திரம்
பகரும்வேல்குலமும் பரமனாஸ்திரம்
அளவிலாகணைகளும் அளர்விலாகணைகளும்
உளமகிழ்க்கணைகளும் கிலேபுனகணைகளும்
காகம்போற்சிறியுனை—கொல்லுமடா
நாட்டமாயென்னுவகை

(வ-ம்) ஆ ஹா ஹா! நீன்முகா! நீ விடுத்த அஸ்திரங்களெல்லாம் ஆணைகோத்தில் பொடிப்பொடியாயுதிர்ந்துபோகும்படிசெய்து வஞ்சகனுமிய உன் நெஞ்சைப்பிளந்து எமலோகத்திற்கனுப்ப அநேக தேவாஸ்திரங்களை வில்லிற்றொடுத்துவிட்டேன் பார்த்தனையா.

நீன்முகன்சொல் - தரு.

இதற்கெல்லாமஞ்சியப்பிடி வேனென்றுநினையாதே
இதுமாத்தெதிரேப்பார்த்து இகழ்ச்சியாய்ப்பேசாதே
எதற்குமஞ்சேனென்னுடைய வெற்றுப்புகழ்ந்திடும்
என்னையெதிர்ப்பேனென்று தெரியாதுமுன்னாலே

விண்புகழ்முறை திறும் மான்னசொல்லதிலும்
ஞானமின்னையா திறும் ஆண்பின்னையுயர்வென
மனதில்லினையாபோ—எனைவெல்ல
தனலிலுமாகாதே

(வ-ம்) ஏபாஷ்! அல்லியரசாணி நீ விடுக்கும் அஸ்திரங்களுக்கும், உனக்கும் யான் பயப்படுவேனென்று நினையாதே இதோபார் ஒரு சிவி ஆகோத்திலுன்னையும், அந்த பாண்டியர்களையும் யான் விடுத்த இவ் விபாஸ்திரங்கள் காலனூருக்கு அனுப்புவது உண்மையென்றறிவாய்

அல்லியரசாணிசொல் — தரு.

அண்டினபேர்களை அநியாயஞ்செய்தோனே
மடிந்தோரைகளிக்க அலேயும்சீரழுடனே
மாண்டவர்பொருளை வாங் கவாசலோசித்தோனே
காலனூருக்குன்னைக் கணக்காய்ச்சேர்ப்பேனே
பரிபாவியுன்மே விடிபாணம்விட
கொடியுமறுபட கருமொடிபட
துண்டியாய்நின்றாயே—இன்றேயுன்னை
சண்டனூர்க்கோட்டுவே ன்

(வ-ம்) பாண்டியரை வஞ்சித்தபாவிபாகிய கீன்முகா! இன்றோடு உனக்கு முடிவுகாலமாய்விட்டபடியினால் யான்விடுத்த இதுபாஸ்திர முன்னுடைய ரதத்தையுமொடித்து, கொடியையுமறுத்து, சாரதியை யுங்கொன்று, உன்னையும் நிராயுதபாணியாகச் செய்துவிட்டது பார்த் தனையா இனி என்னசெய்வாய் சொல்லடாபுல்லதீனானே.

பொது - விருத்தம்.

சொல்லடாவென்றுரைத்துத் தாடியடித்து
சேனாபாலவன்றாடி சேட்டைமிடித்து
செல்லுமிலேனுக்கினையென் றப்பரித்து
வெண்ணகைபோற்றிறுளை முகமவியத்து
அல்லியரசாணிகையில் வாளெடுத்து
ஆக்ரமித்துப்பாய்ந்து கந்தபோர்த்து
தில்லையுமினகொல்வே னென்றுரைத்து
கீன்முகனை ரெண்டுதுண்டாய் வெட்டினளே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கீன்முகன் தனது ரதசா ரதிகள் பாழ்வையிழந்து மனகைக்கு இழிவோடு ரெதிசெ



பேறென்று யோசித்து ஒன்றுந்தோற்றாமல் தன்மனதைத் தானே திடப்படுத்திக்கொண்டு அநேகஅஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்தும் அல்லியரசாணி விடுத்த கணைகளால் தன்னுடைய ரதமும், சாரதியும், கையில்பிடித்தவில்லும் கொப்புங் கவிடுவாய்ப் போனதேயென்றுஆக்ரமித்து மடித்து, வீரவேசங்கொண்டு இடதுகையில் கேடயமும், வலதுகையில் வாளாயுதமும் எடுத்துக்கொண்டு சண்டைசெய்ய வரு வதைக்கண்ட அல்லியரசாணி தன் கையிலிருந்த வாளாயுதத்தால் கீன் முகன்சிரசை இரண்டுதுண்டாக வெட்டியெறிந்தனள். அப்போது பாண்டியர்கள் மனமகிழ்ந்து அல்லியரசாணியம்மாளுக்கு மதுரைமா நகரத்தை பட்டாபிஷேகஞ்செய்யும் விதங்காண்க.

விருத்தம்.

பாண்டியசெல்லாக்கூடி பரமனுருகனியாலே
ஆண்டதோர்மதுரைதேசம் அல்லிக்குப்பட்டங்கட்டி
வேண்டியமகிழ்ச்சியோடு மேன்மையசெங்கோலீய்ந்து
பூண்டதோர்நயமெரழித்து பூரித்தானந்தித் தாரே.

அல்லியரசாணிக்குப்பட்டாபிஷேகஞ்செய்தது - தரு.

இ-ம்-அபீர்தகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

பட்டாபிஷேகஞ்செய்தாரே—அன்புடன்மதுரையை
பட்டாபிஷேகஞ்செய்தாரே

அநுபல்லவி.

பட்டாபிஷேகஞ்செய்தார் பாண்டியசெல்லோருங்கூடி
அட்டதிசைகளாக அனைவரும்புகழ்ந்திட (பட்டா

சரணங்கள்.

தேசமெங்குமலங்கரித்து—தெருவிலைவாழைப்பால்
தெருவெங்குமலங்கரித்து
நசனருளிதென்று இன்பமகமலினுருள்
வாசனைமருவுமணம் வீசவேயெங்கிலும்நிகழ் (பட்டா)

ஆதிசித்திரேணவர்க்கு—அலங்காரமாய்
அன்பாகவேபடைத்து
தேசப்பிரசங்கம்சொல்லாம் நீதியனைதாளியே
பூதலம்புகழ்ந்திடவும் வேதத்தின்விதிப்படியே (பட்டா),

சந்திரவம்சத்தியர் தங்கள்—மதுரையெங்கும்
மங்களதேவிகள் முழங்க
பொங்குப் புகழ்லிக்கன்பாய் தங்கமகுடந்தரித்து
செங்கோலைக் கையிலேதந்து சிங்காதனம் இருத்தி (பட்டா)

(பாண்டியர்) அம்மணி இந்த செங்கோலை கைபிடித்துயிந் மதுரை மாநகரத்தை அரசுபுரிவாயம்மா.

(அல்லியரசாணி) அப்படியே மகாபாக்கியம் தந்தையே.

(பாண்டியர்) கேளுங்கள் குடிபடை சேனைகளே இன்றுமுதல் நமது இராஜாத்தியாகிய அல்லியரசாணியம்மாளுடைய கட்டளைப்படியே நடந்துக்கொள்ளவேண்டும்.

(குடிபடைகள்) அப்படியே மஹாப்ரபு.

(அல்லியரசாணி) தந்தையே எனக்கு ரதகஜதுரகபதாதிகள் யாவும் பெண்கூட்டமாகவே யிருக்கவேண்டும்.

(பாண்டியர்) அம்மணி உன்னிஷ்டப்பிரகாரமே பெண்கூட்டமாகிய ரதகஜதுரகபதாதிகளை இதோ அழைத்துக்கொண்டு வந்தோமம்மா.

(அல்லியரசாணி) சந்தோஷம்:—பெண்சேனைகளே.

(பெண்சேனைகள்) அம்மணி.

(அல்லியரசாணி) நமது அரண்மனையில் ஆண்பிள்ளைகளை வரவொட்டாமல் காவல்புரிவீர்கள்.

(பெண்சேனைகள்) நல்லதம்மணி.

———)(*)(*)(*)(———

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட பாஞ்சால னெனுந் தனிஇறை
இங்கரி பாஞ்சாலியை
சித்தங் களித்துப்பார்த் தன்மனந் தன்னைமுன்
சென்றுகனி பொன்றுளதெனப்
போய்கொண்ட பின்னதா லைவரு முன்னினைப்
பேசுமச் கன்னிதனையே
பெட்புறும் பஞ்சவர்ப் பெண்டென மதிக்கவே
பெருமையுறு நாரதமுனி



சீர்கொண்ட வாண்டாண்டு வொவ்வொருவ ரிடமேவி
சேரிலும் இருக்கவெனவே
செழுந்தோ யக்கினியில் முழுகிக் குளித்திவர்
தேசத் திணைவிவாழ்க
சார்கொண்ட அமித்து கன்னரை வதைத்தபார்த்
தன்னில் லெங்கெசென்று
தருமருடன் பாஞ்சாலி யங்குமுறதாலே
தயங்கியே வாடினேனே.

(நா-ர) கேளுங்களையா சபையோர்களே! பாஞ்சாலனென்னும் அரசன் பெற்ற திரௌபதையை அருச்சுனராஜன் விவாகஞ்செய்துக்கொண்டு வீட்டுக்குவந்தபிறகு தனது தாயாராகிய குந்தியம்மாளை நமஸ்காரஞ்செய்து அம்மணி யான் பாஞ்சாலதேசத்திலிருந்து ஒரு கனியைக் கொண்டுவந்தேனென்றுரைக்க அப்போது குந்தியம்மாள் யாதொரு சங்கதியும் விசாரியாமல் கனியென்றும் பழமென்றுமெண்ணி அப்பனே நீ கொண்டுவந்த கனியை என்னுடைய பிள்ளைகளாகிய நீங்களைந்துபேரும் புசிப்பீர்களென்றுரைக்கவே அருச்சுனனும் நல்லதம்மணி எக்காலத்திலும் உமது சொற்றவறாத யாங்கள் உமது திருவாக்கின்படியே நடந்துக்கொள்ளுவோமென்று விளக்க சகோதரர்கள் யாவையும் விபரமாகச்சொல்லியதைக்கேட்டு அதிசயித்து கனியென்பதற்கு கனியென்றுரைத்தாயே இதற்கென்னசெய்வதென்று வருந்தப் படும் தாயைப்பணிந்து அம்மணி நீர் சஞ்சலப்படவேண்டாமென்று தைரியம் புகன்று பாஞ்சாலியை பஞ்சபாண்டவர்கள் ஐந்துபேரும் விவாகம்செய்துக்கொண்டனர் இவையாவையுமுணர்ந்த நாரதர் பஞ்சபாண்டவரைப்பார்த்து உங்களைந்துபேருக்கும் பாஞ்சாலி மனைவியாயிருப்பதால் ஒரு சமயம் உங்களில் ஒருவருக்கொருவர் விரோதமுண்டாகுமென்றுரைத்து சந்திரோபசுந்தர் பென்னுமசுரர் வரலாற்றுடன் சத்தசுந்தரர்களையும்விபரமாயுரைத்து இன்றுமுதல் உங்கள் பிராணனிருக்கும் வரையிலும் பாஞ்சாலி ஒவ்வொரு வருஷத்திற்கு ஒவ்வொருவர் மனைவியாக வாழ்ந்து அடுத்தவருஷம் அக்கினியில்குளித்து பரிசுத்தமேனியாய் விளங்கி மற்றொருவர் வீட்டிலிருக்கவேண்டும் இப்படியே வருஷந்தோறும் ஒவ்வொருவர் வீட்டிலும் முறைமுறையே நடந்துக்கொள்ளவேண்டும் அச்சமயம் ஒருவருடைய தேவியாயிருந்து அவ்வருஷத்தில் தனக்குரியகாயகனுடன் வசித்ததை யாருக்கொண்டிருப்பதை மற்றநால்வரில் யாவரேனுங்கண்டால் அப்

போகேபவர்கள் தீர்த்தயாத்திரைசெய்துவரவேண்டுமென்றுரைத்து விட்டுப்போனார். பிறகு ஓர்ஏழைபிராமணனுடைய பசுக்கூட்டங்களை திருடர் அபகரித்துச்சென்றதையுணர்ந்த அருச்சுனன்தனுசை எடுத்துக்கொண்டுவரும்போது பஞ்சாலி அவ்வருஷத்திற்குயகனாகிய தருமருடன் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தமையால் நாரதமுனி வாக்கின்படியே தீர்த்தயாத்திரைபோவதற்கு தன் தாயாரை உத்திரவு கேட்கும்விதங்காண்க.



அருச்சுனன் குந்தியம்மாளுக்குச்சொல் - விருத்தம்.

அன்னையேதருமர்தேவி யாகும்பாஞ்சாலியோடு
இன்பமாய்வார்த்தையாட இருக்கவெசெய்திட்டகள்ளர்
தன்னையேகொல்வதற்கு தனுசையாயெடுக்கச்சென்று
வின்னமாய்கண்டபாபம் விலகயாத்திரைசெய்வேனே.

(வசம்) அம்மணி யான் திருடர்களைகொல்லும்படியாக அம்புவில்லும் எடுத்துக்கொண்டு வரும்போது தருமரும் பாஞ்சாலியும் வார்த்



தையாடிக்கொண்டிருப்பதை யான் கண்டபடியால் நாரதமுனிவர் வாக்கின்படியே தீர்த்தயாத்திரை செய்துவருகிறேன் செலவுகொடுப்பீரம்மா.

குந்தியம்மாள் சொல் - கொச்சகம்.

அப்பாயென்கண்மகனே அருச்சுனனேயுனக்கு
தப்பாகாதென்றுசினே தனஞ்சயனேகண்மணியே
எப்போதுமைவரிடம் ஏகோபித்தேயிருந்து
இப்போதுனைப்பிரிய என்மனதுதாளவில்லையே.

(வசம்) அருச்சுனா என்னவார்த்தை சொன்னாய் இதுவரையிலும் ஐவரும் பிரியாமலிருந்து இப்போது தனியாக யாத்திரை செய்யப்போகிறே னென்றதால் எனக்கு மெத்தவருத்தமா யிருக்கின்றதே மைந்தா.

பொது - வசனம்.

கேளுங்களையா சபையோர்களே இவையாவையுமுணர்ந்த தருமரானவர் கிருஷ்ணமூர்த்தியை வரவழைக்கும் விதங்காண்க.

தருமர்சொல் - தேவாரம்.

மாயனேயாதிமூலா மறைதொழும்வாசுதேவா
ஆயனேயமரரேற்றும் அண்ணலேவெண்ணெயுண்ட
வாயனேகிருஷ்ணமூர்த்தி வண்ணமேகருடனேறி
காயமேகாக்கவாரும் நாதனேயுன்றன்போற்றி.

(வசம்) பக்தரட்சகா பரமதயாளா அடியார்களை காப்பாற்றவேண்டும்பொருட்டு இச்சமயம் வந்தருளவேணும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்.

சிந்தையிலென்னையன்பாய் சிந்தித்துதுதித்தப்போற்றும்
புந்தியில்மிகுந்தசத்ய புண்யரேயுவகைமுன்னே
வந்தருள்வையெனவென்னை வரவழைத்திட்டசெது
சுந்தரதருமரேநீர் துரிதமாய்ப்புகலுவீரே.

(வசம்) தருமபுத்திரா என்ன யாதுகாரணமாக வரவழைத்தீர்

(தருமர்) சுவாமி அருச்சுனன் தீர்த்தயாத்திரைக்குப் போகிறபடியால் தேவரீரும் துணையாகசெல்லவேண்டும்.

(கிருஷ்ணர்) அப்படியே.

(அருச்சுனன்) நாங்கள்போய்வருகிறோம் உத்திரவளிப்பீர்கள்.

(சகலரும்) சந்தோஷமாய்ப்போய்வருவீர்கள்.

கிருஷ்ணமூர்த்தியும் அருச்சுனனும் தீர்த்தயாத்திரைக்குப்போகிற
வழிநடைப்பதம்.

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

அன்புடனே தீர்த்த யாத்திரைசெய்குவோம்
ஆச்சாஞ்செபண் பின்னே [illegible] வாராய்—வெகு
வண்மையதாகவே தோற்றுமலங்கார
வழியினதிசயம் பாராய்

அநுபல்லவி.

பெருமைபோடெங்கும் புகழுமலங்கார
தருமபுரிமீதோ தோற்றுதிங்கார
அருமைபாம்பிமா பூமதுக்கார
கருநீலம்போலுற்ற காளிதேவாங்கார
புலிமானும் மதயானை வலிசிங்கம் நரியாவும்
சலியாமல் அலைகூடிக் கலியாதே குலவாருவீர (அன்)

சரணங்கள்.

காசிநதியிற் குளித்து விஸ்வேவரை
கண்டுதரிசித்தோம் சீராய்—இதோ
மாமலைக்கோதா வரி நல்கபத்ராவில
மாகூழ்அய்யரிழுறம் [illegible] சோய்
காஞ்சிபஞ்சவடி தீர்த்தஸ்நானஞ்செய்து
கடல்கலாஞ்சேர்ந்தோம் [illegible] வாராய்—காணும்
குளிர்நதிநீர்ப் பதிவேங்கடேசன்
புண்யஸ்தலமிது பாராய்
நாராயணனைத் துதிசெய்தோமன்பாக
நீராடியேயல்லாக் தீர்த்தமுன்பாக
பிராயங்காளஸ்திரி பரமனுக்கின்பாக
சோராய்கொடுத்தவனே சேத்திரமன்பாக
அன்பேடனே கண்ணப்ப நெஞ்சிக்கொரு வடிவன்பா
என்வேலைய மிவர்தானே பொலிப்புகழ் காயன்பா (அன்



திருப்பாலைவனம் வந்தோங்கபாலீசர்
திருவடிபோற்றிசெய் வோமே—அதோ
மருந்தீஸ்வராலயம் கோயிலுக்குட்சென்று
மாகூழிமையாய்த்துதிப் போமே
திருவொற்றியூரிதோ வந்தோம்வடிவாம்பா
தியாகனைசேவிப்போம் யாமே—வாராய்
திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர்
திவ்யபாதந்தொழு தோமே

திருவண்ணாமலை ஈஸ்வரதேபாராய்
அருணகிரியானை அன்புடனேசீராய்
பெருமையுடனேயாம் பூசிப்போமேவாராய்
கருமவினைதீர்த்துக் காருமென் அமோராய்
இதுவேசிதம் பரமாகு மதுவேநடே லால்கோவி
லிதுவேனை பூசித்தாற், பநமீவா ரேயன்பாய் (அன்)

மாயவரங்கும்ப கோணமதற்கப்பால்
மாகூழிமையோங்கும்ஸ்ரீ ரங்கம்—தானே
நேயன்ஸ்ரீரங்கனை பூசித்திசேவந்தோம்
சோராய்ஜலகண்டர் தங்கும்—இந்த்ரன்
செய்வேனடாரிதோ ஜம்புலிங்கேஸ்வரம்
சிந்தித்தாலானந்தம் பொங்கும்—கனி
வாயன்ராமலிங்கம் வாழும்ராமேஸ்வரம்
வந்துதுதிசெய்தோம் எங்கும்
எட்டுத்திசையுந் துதித்துப்பணிந்திடும்
பிட்டுக்குமண்சுமந்து பிரம்படிபடும்
அட்டாளுஞ்சொக்கேசர் அடியைதொழுதிடில்
விட்டோடுந்தீவினை விஜயாமதித்திடு
தவயோகிகள் தினமுந்துதி சிவரூபமே தயர்தீரென
தவமேபுரிந் திடிலூழ்வினை பவநீங்கிடு மதிவாயினி (அன்)

பொது - வசனம்.

கேளுங்களையாசபையோர்களே கிருஷ்ணமூர்த்தியும்அர்ச்சுனனும் மதுரையில்வந்து வைகையாற்றில்ஸ்நானஞ்செய்து சொக்கலிங்கரை யும் மீனாக்ஷியம்மனையும்பூஜித்து மனமகிழ்ந்து ஊழ்வினைபோலாம் இன்றோடொழிந்ததென வரும்போது அல்லியரசாணிக்கு அனுதின

மும்தவராமல் முத்துசரங்கள்கொண்டுவந்துகொடுக்கும் முத்துவாணியனுக்கு அன்றையதினம் ஒருபடிமுத்து குறைந்தபடியால் ஆக்கினை நேரிடுமேயென்று பயந்து துயரப்படும்விதங்காண்க.

முத்துவாணியன் துயரப்படுகிற - தரு.

இ-ம்-கண்டா-சாப்புதாளம்.

கண்ணிகள்.

ஐயோயினியென்செய்வேன் அம்பாமீனாட்சியே
ஆதரித்திரட்சிப்பாய் அம்பா அம்பா
வையத்திலென்துயர் தீர்ப்பாரில்லாமல்யான்
வாடிக்கலங்குறேனே அம்பா அம்பா

படிமுத்துகுறைந்ததே பழியென்னவிளையுமோ
பதைக்குதெந்தன்மனது ஈசா ஈசா
அடியார்க்கருள்சிவமே அஞ்சாதேயென்றென்னை
ஆதரித்திடவாரும் ஈசா ஈசா

அல்லியரசாணி அதட்டிமிரட்டியென்னை
ஆக்கினைசெய்வாளே ஈசா ஈசா
கல்லுங்கரைந்தாலவள் கன்மனங்கரையாதே
கர்த்தாயானென்செய்வேன் ஈசா ஈசா

சொக்கலிங்கேஸ்வரா ஜோதிசுயம்ப்ரகாசா
சோருதெந்தன்மனது ஈசா ஈசா
தக்கோர்பணிந்திடும் தற்பரானந்தனே
தருணமெந்தனைக்காரும் ஈசா ஈசா

(வ-ம்) சொக்கலிங்கநாதா மதுரைமீனாக்ஷி யானென்னசெய்வேன் இன்றையதினம் ஒருபடிமுத்துக் குறைந்துவிட்டதே அல்லியரசாணி தண்டிப்பாளென்று என்மனந்தத்தளிக்கின்றதே கர்த்தவ்யமே.

(கிரு) அருச்சுனா நாம் அநேக புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து திவ்யக்ஷேத்திரங்களையுங்கண்டு தரிசித்து ஆனந்தமடைந்து இந்த மதுரையில்வந்து சொக்கலிங்கேஸ்வரரையும், மீனாக்ஷியம்மனையும்பூஜித்து வருகையில் இவனேரோ ஒற்றைக்குரலா லேங்கியழுகின்றானே என்னபரிதாபம்.! பார்த்தனையா.

(அருச்சுனன்) ஆம் சுவாமி அவனுக்குநேர்ந்த துயரம்யாதோ அருகிற்சென்று விசாரிப்போம் வருவீர்.



(அருச்சுனன்) ஏன் விசனப்படுகின்றீரையா.

முத்துவாணியன சொல் - விருத்தம்.

சாற்றுவாயென்றென்னைக் கேட்டநீங்கள்
சஞ்சலத்தையகற்றுவதும் கும்மாவாமோ
கூற்றுவன்கையகப்பட்ட உயிரைப்போலுங்
கொடியதோராபத்திற் சிக்கிக்கொண்டு
மாற்றுதற்கும்வகையறியா திந்தவேளை
மதிமயங்கிசிந்தைசோர்ந் தேக்கமுற்று
தேற்றுவாரில்லாமல் தியங்குமென்னை
தெய்வமேகார்த்தருள வேண்டுமையா

(வ-ம்) ஐயா என் விதியைநினைந்து விசனப்படுகிறேன் நீங்களென்னைத் தேற்றவல்லவரா துயரைத் தீர்க்கவல்லவரா.

அருச்சுனன் முத்துவாணியனுக்குச்சொல் - விருத்தம்.

ஆரப்பாநீதான்மெத்த அஞ்சியேயழுகின்றாயெவ்
வூரப்பாஉன்னிருப்பு உற்றதோர்துயரந்தன்னை
தீரப்பாயுனக்குநேர்ந்த தீங்கதையென்முன்சொன்னால்
பாரப்பாகாப்பேனென்பேர் பார்த்தனென்றறிகுவாயே

(வ-ம்) நீ ஆரப்பா உனக்கு யாது வருத்தம் நேரிட்டது ஏன் இவ்விதமாக துயரப்படுகின்றாய் உனது மனக்கவலையை என்னிடத்தில் தெரிவித்தாயாகில் உனது சஞ்சலத்தைத் தீர்ப்பேன்.

(முத்துவாணியன்) ஐயா இந்த மதுரையை அரசாக்ஷிசெய்யும் அல்லியரசாணியம்மாளுக்கு யான் அனுதினமும் முத்துசரங்கள் கொடுப்பவன் இன்றையதினம் அவைகளில் ஒருபடி முத்துக்குறைந்தமையால் ஆக்கினைநேரிடுமேயென்று விசனப்படுகிறேன்.

(அருச்சுனன்) அவளென்ன மிருகவடிவமுள்ளவளோ

அல்லியரசாணியினுடைய ரூபசௌந்தரியங்களை
முத்துவாணியன் அருச்சுனராஜனுக்குச்சொல் - தரு.

இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

அல்லியரசாணி—அழகைபுகலுவேன்
அன்புடன்கேளுமையா (அல்லி)

அநுபல்லவி.

வல்லமையாகவே மதுரைவாழ்பாண்டியர்
தொல்லையைநீக்கிநிந் செல்வமென்றிலகும் (அல்லி)

சரணங்கள்.

ஆரணங்கிவள்தலைக் கொண்டையின்மயிரோ
அறுபத்துநான்கு முழம்—திருநெற்றியோ
பூரணச்சந்திரன் போலும்வேப்பிலைபோல்
புருவத்துலங்க மகிழும்

கூறியமுக்குடன் குளிர்ந்தமுகமும்
தேறியபல்லுந் தேன்போலுதடும்
பாரியாலோசனை பளிங்குபோலுருவும்
சாரிசெய்காலின் சதங்கையினழகும் (அல்லி)

காமசவுந்தர ரூபசிங்காரிமணங்
கமழுங்கையினழகும்—வயிரமுகோ
சோமன்பிரகாசமா யாலிலைபோலுஞ்
சிங்கத்திடை யழகும்

பூமியிலிவள்போல் பொற்கொடியேது
ஆமிவள்மிகவெரு அவனியிலேது
காமிகளுக்கிவள் கவிரசமாது
நாமினிசொல்ல ஞாயமோஏது (அல்லி)

(முத்துவாணியன்) ஐயா அந்த அல்லியரசாணியம்மாளுடைய ரூப சௌந்தரியசிங்கார அலங்கார வைபவங்களை இன்றைக்கெல்லாம் வர்ணித்துச்சொன்னாலு முடியாதையா.

(அருச்சுனன்) நல்லது! அவளுக்கு விவாகமாயிற்றா?

(முத்துவாணியன்) இன்னும் ஆகவில்லை.

பொது-வசனம்.

கேளுங்களையா சபையோர்களே முத்துவாணியன் அல்லியரசாணியினுடைய வடிவலங்காரத்தை வர்ணித்துச்சொல்லியதை ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்த அருச்சுனன் எப்படியாகிலும் அந்த மாதரசியை மணஞ்செய்துகொள்ள கிருபைசெய்தருளுமென்று கிருஷ்ணமூர்த்தியை வேண்டிக்கொள்ளும் விதங்காண்க.



அருச்சுனன்சொல் - விருத்தம்.

அண்ணலேகிருஷ்ணமூர்த்தி அல்லியென்றிலகுமங்கை
தன்னையாயெனக்குத் திருமணஞ்செய்விராகில்
என்னிலோ மகிழ்வாயானும் மங்கையுடனேவாழ்ந்து
மண்ணுளவரையிலும்மை மறந்திடேன்மறந்திடேனே.

(வசனம்) ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாகிய எனது உயிர்த்தோழரே இந்த அல்லியரசாணியை எனக்கு மணஞ்செய்துவைப்பீராகில் யான் எப்போதும் உமது திருவடியை பூஜித்துக்கொண்டிருப்பேனையா சுவாமி.

(கிருஷ்ணமூர்த்தி) அருச்சுனா என்னவார்த்தை புகன்றாய் நாம் தீர்த்தயாத்திரைசெய்யவந்ததும் நீ இவ்வண்ணமாக வீண் காரணங்களில் பிரவேசிப்பதும் சரியல்ல நாம் யாத்திரைவந்து வெகுநாளாய் விட்டது உனது தாயாரும், தமையன் தம்பிமார்களும் தேடிக்கொண்டிருப்பார்கள் நமது ஊருக்குப்போவோம் சீக்கிரமாக புறப்படுவாய்,

(அருச்சுனன்) அந்த அல்லியரசாணியை எனக்கு மணஞ்செய்யாவிடில் என் ஜீவன் நிலைப்பதரிதாகும் சுவாமி.

கிருஷ்ணமூர்த்திகோபத்துடனே சொல்லுகிற

பதம்-இ-டி-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னகாரியமுடி போட்டுக்கொண்டுவந்தா—விதை
பன்னும்போதே பயமாயி என்மனங்கலக்கினதே (என்)

அநுபல்லவி.

இன்னகரிலெத்தனைபேர் வீரக்கிராவரன்றி
அன்னநடையல்லிமீது ஆவல்கொண்டேனென்றாளி (என்)

சரணம்.

ஆறுயிரம்பாண்டியரும் அவளுக்குதிபதங்காத
ஆனைசேனைபரியுடன் ஆரணிலேபுரியும்
வீராவேசங்கொண்டவளா விரும்பிவருவதையும்
வீசுவாளேவாளினாலே வீறுபவளாசையுடன் (என்ன)

(கிருஷ்ணமூர்த்தி) அருச்சுனா! நல்லவார்த்தைபுகன்றாய் அந்த அல்லியரசாணியை இலேசாய் மதித்தனையோ சரி சரி உன்னுடைய வான்வந்ததுபோதும்போதும் இனியந்தவார்த்தையை என்னிடத்தில் சொல்லவேண்டாம்.

அருச்சுனன் சொல் - ஜாவளி.

இ-ம்-இக்ஷுஸ்நான்-பலஹம்ஸம்-ஆதிதாளம்.

பல்லவி.

மாயவாயா னென்னசெய்வேன் மாரன் கணையே
ஆவி மயக்க வென்னையே (மாய)

அநுபல்லவி.

நாவும்வரட்டுதையோ நல்லறிவுமாறுதுந்தன்
பூவடியைப்போற்றிசெய்தேன் பூபால முகுந்தா
மணஞ் செய்ய வரந்தா (மாய)

சரணங்கள்.

அல்லிநல்லாள் சுந்தரியை அன்புடனிணங்காவிடில்
வல்லுயிரிழந்திடுவேன் வைகுந்த வாசா
அருள் புரியும் சர்வேசா (மாய)

ஆவிதுடிதுடிக்க அனங்கன்மலர்க்கணையை
தூவியென்னைக்கலங்கச்செய்யுந் துன்பந் தீரையா
ஏழை முகத்தைப் பாரையா (மாய)

மெச்சும்புகழோங்கிடும் மைத்துனரே யிந்தவேளை
இச்சகாயஞ்செய்வீராகி லினிமற வேனே
யுனைத் தொழுதிடு வேனே (மாய)

பொது - விருத்தம்.

பார்த்தனிப்படியுரைக்க பாரினையளந்துமெங்கும்
கீர்த்தியாய்ப்பிரகாசிக்கும் கிருஷ்ணருங்கானகத்தில்
மூர்த்தியாய்மிருகமேவ புறப்பட்டுநாட்டில்வந்து
பார்த்தவருளங்கலங்க பயிர்களையழித்ததங்கே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அருச்சுனன் அல்லியரசாணியை நினைந்து நினைந்து மனமுருகுவதைக்கண்ட கிருஷ்ணமூர்த்தி அந்த மாதரசியை வரைவழைக்கும் நிமித்தமாக மிருகங்களைச் சிருஷ்டிக்கும்விதங்காண்க.





கிருஷ்ணமூர்த்தி வனத்தில் மிருகங்களை சிருஷ்டித்தல் - தரு

பல்லவி.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

கானகமிருகம்வந்ததே—கிருஷ்ணர்மாயையால்
கானகமிருகம்வந்ததே (கானக)

மானுங்கடம்பை மறநாய்செந்நாய்
மயில்குயில்காடை மயிலுஆந்தை
ஆனைகரடி அழகுள்ளசிங்கம்
அணியணியாக அடவியிலெங்கும் (கானக)

முள்ளம்பன்றியும் புலிகளும்நரியும்
முயலுடனேவெள்ளெலிகுரங்குகளுடனும்
துள்ளியேயோடி துடுக்குடன்பயிர்களை
துச்சம்செய்தழித்திட துர்ம்மதாக (கானக)

பொது-வசனம்.

கேளுங்களையாசபையோர்களே கிருஷ்ணமூர்த்திசிருஷ்டித்த மிருங்கள்யாவும்நாட்டிற்பிரவேசித்து பயிர்களையெல்லாம் அழிப்பதைக்கண்ட குடிகள் அல்லியரசாணியிடத்தில்தெரிவிக்கும் விதங்காண்க.

அல்லியரசாணி கொலு.

அல்லியரசாணி சொல் - விருத்தம்

ஆதியேபகுளேஞான அமிர்தமேமைகலைவாழ்வே
ஜோதியேசுயம்பிரகாச சொரூபமேசுடரோனும்

வேதியரேற் றும்நித்ய வேதத்தி னொளிவிளக்கே
நீதியேபெண்ணுசெங்கோல் நிலைத்திடவருள்வாய்போற்றி

பவளசேனைசொல் - விருத்தம்.

வீரமேயுருவாய்த்தோன்றி வில்லம்புன்னையிலேந்தி
தீரனாய்விளங்குகன்றன் சிரமறுத்துலவேசர்வாழ்த்த
பாரதையாளுமெங்கள் பராக்ரமஅரசியர்ச்சுன்
சேதாபிலக்குந்திவ்ய திருவடிபோற்றிபோற்றி.

(அல்லியரசாணி) பவளசேனை நமதுநாட்டில் மாதமும்மாரி பொழிந்து பயிர்களுக்கொருகுறைவுமின்றி வைகையாற்றில் ஜலம்பெருகி யோடிக்கொண்டிருக்கின்றதா.

(பவளசேனை) அம்மணி நமது நாட்டில் குறைவில்லாமல் மழை வருஷித்து வைகையாற்றிலும் ஜலம்நிறைந்து பயிர்களும்செழுமையா யிருக்கின்றதம்மா.

(அல்லியரசாணி) நமது நகரத்திலுள்ள ஆலயங்களில் அனுதினமும் பூஜைநடக்கின்றதா.

(பவளசேனை) அம்மணி நமது நகரத்திலுள்ள ஆலயங்களில் அனுதினமும் பூஜை தவராமல் நடக்கின்றதம்மணி.

(அல்லியரசாணி) சந்தோஷம்.

(பாங்கி) அம்மணி குடிகள் வந்திருக்கின்றனர்.

(அல்லியரசாணி) வரவழைப்பாய்.

(குடிகள்) அம்மணி நமஸ்கரிக்கின்றோம்.

(அல்லியரசாணி) பிரியமுள்ளகுடிகளே பாதுகாரியார்த்தமாக இங்கு வந்தீர்கள்.

(குடிகள்) அம்மணி வனத்திலிருக்கும் பயங்கரமான துஷ்டமிருகங்கள் வந்து யாங்களிட்ட பயிர்களை அழிக்கின்றதம்மணி.

(அல்லியரசாணி) குடிகளே அஞ்சாதீர்கள் அந்தக்கொடிய துஷ்டமிருகங்களையெல்லாம் என்று அவ்விடங்களுக்கு இரையாகச்செய்கின்றேன் உமதிருப்பிடம் செல்வீர்கள்.

(குடிகள்) அப்படியே மகாபாக்கியமம்மா.

(அல்லியரசாணி) பவளசேனை நாம்காட்டிற்சென்று வேட்டையாட வேண்டும் ஆதலின் எல்லோரும் ஆயுதபாணிகளாக புறப்படுவீர்கள்.

(பவளசேனை) அப்படியே புறப்படுகிறோமம்மா.



(அல்லியரசாணி) பெண்களே நாம்வெகுதூரம் வந்துவிட்டோம். இன்னும் கானகமெவ்வளவுதூரமிருக்கின்றதோ? தெரிவிப்பீர்கள்.

(பவளசேனை) அம்மணி இன்னுங்கொஞ்சதூரம் சென்றால் நந்தனவனம் அதற்கப்பால் மிருகவனமிருக்கின்றதம்மா.

(அல்லியரசாணி) ஆமாம்! இந்த நந்தவனத்தின்காக்ஷியை சற்று பார்ப்போம் வருவீர்கள்.

(பவளசேனை) நல்லதம்மணி.

அல்லியரசாணி வனப்பெருமையை வர்ணித்தல்


இ-ம் காதகாக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

என்ன வென்மெடுத்துரைப்பேன் - இந்த
அருமைசேர்ந்த வனத்தின்பெருமையை
எடுத்தென் றெடுத்துரைப்பேன்

சரணங்கள்.

| | | |
|---|---|---|
| நன்மணம்வீசும் | நந்தியாவட்டையும் | |
| நவிலும்குருவேர் | தவனமும்ரோஜா | |
| இன்புறுமல்லிகை | இருவாக்ஷியுடன் | |
| இசைந்தகொன்றையும் | இனிமைசேர்வனம் | (என்ன |
| அல்லிமலர்களும் | அரிக்குமல்லி | |
| அழகுசாமந்தி | பாரிஜமலரும் | |
| சொல்லொணாதமலர் | தூலக்குமிழ்வனம் | |
| தோற்றமதிசயம் | கோகையேயானும் | (என்ன) |
| மாடப்புறாவும் | மயில்குயிலன்னம் | |
| மயினமேடைகை | வலியனுங்கருடன் | |
| கானடையினங்களும் | கவுதாரியுடன் | |
| கானகம்நிறைந்த | காட்சியையானும் | (என்ன) |
| வக்காளையும் | வல்லூறாந்தை | |
| வான்கோழியுடன் | வெளவால்கிளிகளும் | |
| கொக்குகளுடனும் | குருவியினங்களும் | |
| கும்பலாயேகுது | மங்கையேபாரதோ | (என்ன) |






(அல்லியரசானி) பெண்களே இதோபார்த்தீர்களா நாம்கானகத்தில் ந்துவிட்டோம் இனி யாவரும் நாற்புரமுஞ்சென்று கணைகளையேவி ருகங்களையெல்லாம் ஓடவொட்டாமல் தாக்கிக்கொல்லுவீர்கள்.

(ப..ளசேனை) நல்லதம்மணி.

அல்லியரசானி வேட்டையாடுதல் - தரு.

பல்லவி.

வேட்டை யாடுவோம்—மிருக
வேட்டை யாடுவோம்

அநுபல்லவி.

காட்டைக்கலைத்து மேட்டிமையாக
பூட்டும்வில்லம்பால் நாட்டமதாக (வேட்

சரணங்கள்.

ஓடுதுபாரக்கே யானை—அதை
ஓடவொட்டாதடிப்பாய் பேனே
ஜாடுதலைகளை பாணம்—யான்
சற்றுமிலைக்கஞ் சேனை

கூடிநரிக்கூட்டங் கும்பலாயோடுது
வாடியென்னம்பா லவையெல்லாஞ்சாகுது (வேட்)

(கிருஷ்ணமூர்த்தி) அருச்சுனா அல்லியரசானியை இப்போது ார்த்துக்கொண்டீரையா.

(அருச்சுனன்) ஆஹா என்ன வடிவலங்காரம் இந்த மாதரசியை ப்படியாகிலும் எனக்கு திருமணஞ்செய்துவைப்பீர்சுவாமி.

(கிருஷ்ணமூர்த்தி) அருச்சுனா நீ அந்த மாதரசியை விரும்புவதால் ன்மீது ஆசையுண்டாகும்வரையிலும் அந்த அல்லியரசானி மிரு ்களின்மீதுவிடுக்கிற அம்புகளைப் பொறுக்கித்தந்து விசனமில்லாம நப்பாயாகில் சமயோசிதமாக எவ்விதமேனும் அந்த மாதரசிரோன் ரியை உனக்கு விவாகஞ்செய்துவைப்பேன்.

அருச்சுனன்) நல்லது சுவாமி:—எங்கள் மாதரசியே இந்தாரும் ம்புகள்.

அல்லியரசாணிசொல் - தரு.

எதிரிந்தேரூற்றதோர் சிங்கம்-சலோ
எப்போதனைதனிட அங்கம்
பரவிசெத்தது தங்கும் - அந்த
பன்றிக்கூட்டங்களை எங்கும்
பதிக்கப்போகாத மங்கையரப்பால்
விதிமுடிந்து விழுந்ததமண்மேல் (வேட்)

பொது-விருத்தம்.

அல்லியும்வேட்டையாடி அலுத்துமேடுத்துக்கொண்டு
வல்லமைமிகுந்தபெண்கள் வகையுடனொன்றனுக்கு
நல்லதோர்கதைசொல்லென்ன நாட்டமாயர்ச்சுனன்றான்
சொல்லுறக்கதையிலேவா சரிதையைக்கூறலானே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணி கானகத்திலுள்ள மிருகங்களெல்லாம் அகமாகும்படி வேட்டையாடி கைகாலெல்லாஞ்சோர்ந்து தோழிகளால் சிங்காரிக்கப்பட்ட புஷ்பசயனத்தில் படுத்துக்கொண்டு சாதிகளையழைத்து என் காதுக்கினிமையான ஒரு கதை சொல்லுவீரென்றுரைத்தவுடனே பெண்வேடமாகவந்து அம்பு பொறுக்கித்தந்த அருச்சுனன் அல்லியரசாணி கேட்கும்படியாக தன்னுடைய சரித்திரத்தையே ஒரு கதையாக சொல்லுகின்ற விதங்காண்க.

அருச்சுனன் கதைசொல்லுகிற-தரு.

இ-ம்-அசாவேரி ரூபகதாளம்.

கண்ணிகள்.

அல்லியரசாணியென்னுமமிர்தமே அன்புடன்கதைகேட்பையே
தொல்புவிதனில் குருவரசரின் குலங்குமந்திரமைந்தினுல்
சந்திரவம்சமிதேறவந்திடுஞ் சாற்றும்பஞ்சவரைவர்கள்
குந்திபாண்டுவுக்குரியபாலகர் குறைவிலாதர்மர்வீமராம்
இவருக்கிளையவரர்ச்சுனரவர் இனியவாசகதிரௌபதா
மலையிலவிலைத்தன்பாய்மாலையு ம்லனியுரியவேகுட்டினுர்
சிறுத்தவயிறிடை பெருத்தபுஜங்களும் சிங்கம்போலிரு கண்களும்
முறுக்குமீசையும் பல்லின்வரிசையும் முதுகில்ரேகையும நாவினில்
நட்சத்திரமதும் தோளிற்றழும்பின் மாலையலங்கிர்த விஜயனும்
பட்சமேவிய பெண்களுக்கொரு பஞ்சபாணனைப்போன்றவன்



ரூபசுந்தரன் பெண்கள்நாயகன் குலக்குமரனித முமிர்தமே
கோபமிச்சியே சேலுமம்மணி கொஞ்சுங்கிளிமொழி யல்லியே

பொது-விருத்தம்.

சித்தசன்ரதியிரேறும் சித்திரமுங்குளிர்ந்தாற்போல
எத்தியேவேஷங்கொண்டு வந்திழையல்லிக்கன்பாய்
மெத்தவுமினிமையாக மேன்மையாய்க்கதையுரைக்க
கத்தியையெடுத்தாள்கையில் கதறியோடினாரே.

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே அருச்சுனன்பெண்வேஷத்துடனே அல்லியரசாணியின் காதுக்கினிமையாக தன்னுடையசரித்திரத்தையே கதையாகச்சொல்லும்போது இதென்ன கதை பெண்ணு முகத்தைப்பார்த்து இவன் ஸ்திரீவேஷத்துடனேவந்து நம்மை யேமாற்றினான் பார்த்தீரோவென்று கோபாவேசத்துடனே வாளாயுதத்தைகையிலெடுக்கவே அருச்சுனன் ஒடிவந்திருந்தமூர்த்தியை வேண்டிக்கொள்ளும் விதங்காண்க.

அருச்சுனன் சொல் தரு.

ஸ்ரீராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதி மூலமேயாவென் செய்வேன் (ஆதி)

அநுபல்லவி.

மாதுசிரோமணி காதலாலென்னுடல்
மீதுமாரன்கணை வாருதேனைய்ய (ஆதி)

சரணங்கள்.

எந்தன் மனம்வாடுதே நாதா
சுந்தரியல்லியு மெந்தனைப்பார்த்திடு
முந்தனையுந்தினம் சிந்தனைசெய்வேன் (ஆதி)

மணஞ்செய் திடுவீரத மாதை
இணையில்லாசுந்தரி குணமுடனளித்த
கனையாழியுமிதோ கழட்டியேவைத்தேன் (ஆதி)

(வ-ம்) சுவாமி அந்த அல்லியரசாணியை எனக்குத் திருமணஞ்செய்து டிமது மோதிரத்தையாப்பார்த்து மகிழ்வீராகில் நானுமோடி வருவேன் இல்லாவிடி லெனதுபிராணனைவிடப்போகிறேன்.

கிருஷ்ணமூர்த்தி அல்லியரசாணியைப்போல
படமெழுதி மரத்திற்கட்டியது.

விருத்தம்.

அப்படிப்பார்த்தனைத் அல்லியின்ரூபம்போல
கொப்பெனப்படத்தைச்செய்து குளத்தண்டைமரத்தின்மேலே
வொப்பியேகட்டிவைத்து விஜயனேயென்க்குத்தண்ணீ
ரீட்போதேகொண்டுவாவென் றியம்பிட்டவேகினாரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கிருஷ்ணமூர்த்தியானவர் அல்லியரசாணியைப்போல் படமெழுதி குளத்தங்கரையிலிருக்கும்படி யானமரத்தின்கிளையின்மீதுகட்டிவிட்டுவந்து அருச்சுனனைப்பார்த்து அப்பாமைத்துனா எனக்குநாவரட்சியதிகமாயிருப்பதால் ஜலம்வேண்டுமென்றுரைக்க இதோகொண்டுவருகிறேன் சுவாமியென்று குளத்தருகில்வந்துதண்ணீரைப்பார்க்க அதில் அல்லியின்ரூபம்போல நிழல் தோற்றக்கண்டு தன்னை விவாகஞ்செய்துக்கொள்ளுவாயென்று வேண்டிக்கொள்ளும் விதங்காண்க.

அருச்சுனன்சொல் - தரு.

இ-ம்-அபூருபஉசேனி-ஏகதாளம்.

கண்ணிகள்.

மாதேமகிழ்கோதேயல்லி மானேயென்தன்மீது
வாதேசெய்யாதிந்தவேளை வருவாய்மணம்புரிவாய்
சந்த்ரமுகவதனிமகி ழிந்த்ரன்சேயன்யானே
எந்தனைமணம்புரிந்தா லெவருமுனைப்பணிவார்
காமசவுந்தரியேயுன்னால் காமினியைமறந்து
காலனூருக்கேகிடவும் காரணமோவறியேன்

பொது - விருத்தம்.

என்றிவன்ஜலத்தில்மூழ்கி எங்கெங்குந்தேடிப்பார்த்து
அன்றிவளிங்கையென்று அருச்சுனன்தண்ணீர்க்கொண்டு
சென்றிவர்திருமாற்கீய்ந்து செப்பினார்நடந்தவற்றை
நன்றுநன்றென்றுமித்ரை நண்பனேவருகுதென்றார்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே தண்ணீர்கொண்டுவரச் சென்று குளத்தங்கரையில்வந்து மரத்தின்கிளையில் கட்டியிருக்கும் படத்தின் நிழலைப்பார்த்து அல்லியரசாணியென்று மதித்துஜலத்தை



கையினலள்ளிப் பார்த்து ஐயோ மறுமடியும் மறைந்துவிட்டனளே யென்று கிருஷ்ணரிடத்தில்வந்து தெரிவித்தவுடன் அவர்தாகத்தணிய தண்ணீரருந்திகளைத்தவர்போல் பூமியில்விழுந்து அப்பா எனக்குநித்திரை வருகுதென்றுரைத்து தூங்கும்போது அருச்சுனன் இதுதான் சமயமென்று கருங்கல்லையெடுத்துவந்து அவர் தலையின்கீழ் வைத்துவிட்டு அல்லியரசாணியைத் தேடிக்கொண்டு வருகிறவிதங்காண்க.

அருச்சுனன் அல்லியரசாணியைத்தேடிக்கொண்டுபோகிற - தரு

இராகம்-அமீர்தகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

தேடித்தேடித்திரிந்தானே—அல்லியையெங்கும்
தேடித்தேடித்திரிந்தானே

அநுபல்லவி.

வாடிமதிமயங்கி வையகமெங்குஞ்சுற்றி
ஓடியோடித்திரிந்து ஒய்யாரியல்லியேயென்று (தேடி)

சரணங்கள்.

தருணமிதுவேயென்று—தனஞ்செயனும்
தருந்தயோசனைசெய்து
திருமாற்றலைக்குயரங் கருங்கல்லைவைத்துவிட்டு
பெருமையுடனெழுந்து மேவிநாவா[illegible]வித்தாவி (தேடி)

சந்தோஷமாயெழுந்து—மனதிலுற்ற
சஞ்சலமெல்லாமொழிந்து
சுந்தரவடிவழகி உந்தனைக்கண்டவுடனே
வந்தனஞ்செய்தென்னை மணம்புரிவாயென்று (தேடி)

பொது - விருத்தம்.

சித்திரைதெளிந்துகிருஷ்ணர் நினைத்துயோசித[illegible]து
சித்தசன்கணையாற்புத்தி சிதறியேயருச்சுனன்றான்
சுத்தியேகூவிக்கொண்டு காட்டினிற்றேடுவோன்முன்
வித்தகக்குறத்திபோல வேஷங்கொண்டேகினாரே

கிருஷ்ணமூர்த்தி குறத்திவேஷமணிந்துவருகிற தரு.

இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி.

குறத்திவந்தாளே—சிங்கார
குறத்திவந்தாளே

அநுபல்லவி.

சிறிந்தமுகமும் பெருத்தகொண்டையும்
கரத்தில்கூடையும் கைப்பிரம்புங்கொண்டு (குறத்தி

சரணங்கள்.

கொஞ்சிநடைநடந்து—பச்சைக்
குத்துங்குறத்தியென்று
செஞ்சொல்மொழியல்லி சிங்காரவீதியில்
சேனைபேர்க்குக்குறி சொல்லுவேனென்னவே (குறத்தி)

சொன்னகுறிதப்பா—திப்பாரினில்
சோதித்துப்பார்த்துக்கொள்ளும்

நன்னயமாக நிகழெதிர்காலமும்
நாட்டத்தோடேகிய நாட்குறியுஞ்சொலும் (குறத்தி)

(அருச்சுனன்) ஆரம்மா குறத்தி நீ எங்கிருப்பது குறிசொல்லு கின்றாயே.

(குறத்தி) ஆமையா எங்கசாதியோ குறச்சாதி எங்கள்தொழிலோ குறிசொல்லுகிறதும், பச்சைகுத்துகிறதுமே வழக்கம் யாங்களிருப்பது கொச்சி, மலையாளம், குடகு தேசங்களிலிருப்போம். மதுரைவீரப்பன், காத்தான், சின்னான், மலையாளபகவதி இவர்கள்தான் எங்கள் வீட்டுக்குலதெய்வம். தெரிந்துகொண்டீரா

(அருச்சுனன்) சரி! அப்படியானால் எனக்கு குறிசொல்லு பார்ப்போம்.

குறத்தி குறிசொல்லுகிற-விருத்தம்.

குந்திபாண்டவர்கட்சேபர் கூறிமைவருத்துள்
உந்தன்பேர்விஜயனாகும் உனக்கல்லியாசையாலே
சிந்தையில்துயரமாகி தியங்கியேவாடுகின்றாய்
இந்தநற்சேதியெல்லாம் இல்லையோசொல்லுவாயே

(அருச்சுனன்) ஆமம்மா நீ சொல்லியதெல்லாம் உண்மைதான். அல்லியரசாணியை நான் விவாகம் செய்துக்கொள்ளுவேனோ

(குறத்தி) ஐயா நீங்கள் அவ்விதமாகயோசிப்பதற்கு நான் ஒன்று சொல்லுகிறேன் கவனிப்பீரா

(அருச்சுனன்) அப்படியே கவனிக்கிறேனம்மா.

(குறத்தி) இதோபார்த்தீரையா இந்தக் குளிகையை எடுத்துக்கொண்டுபோய் அதோதெரிகின்ற அல்லிக்குளத்திலுரைப்பீராயாகில் அந்த தண்ணீரை அல்லியரசாணி குடித்தவுடனே உன் பேரில் ஆசையுண்



டாகி உன்னையே கலியாணம் செய்துக்கொள்ளும்படியாகச் செய்யும் ஆகையால் உன்னுடைய ஆபரணங் யாவும் கழட்டி எனக்குத் தருவாயாகில் இந்தக்குளிகையை உனக்குக் கொடுப்பேனையா

(அருச்சுனன்) இதோ எனது ஆபரணங்களைத் தருகிறேன் குளிகையைக் கொடுப்பாயம்மா.

(குறத்தி) இதோ வாங்கிக்கொள்ளுவீரையா.

அல்லிமலர் தடாகத்தில் அருச்சுனன்மருந்துரைப்பது - தரு.

இராகம்-இந்துஸ்தான்-பலஹம்சம்-ஆதிதாளம்.

பல்லவி.

குறத்திதந்த மருந்ததையிதோ ஜலத்திலுரைக்கிறேன்
எந்தன் குறையைத் தீர்க்கிறேன் (குறத்தி)

அநுபல்லவி.

அல்லியரசாணியே அழகுநவரத்தினமே
மெல்லியுனையான்விவாகம் செய்வதெப்போது
வந்து சொல்லாயிப்போது (குறத்தி)

சரணங்கள்.

மன்மதனெய்திடுந்த மலர்கணையால்வாடுகிறேன்
அன்னநடைசுந்தரியே ஆவிசோருதே
புத்தி மயங்கிவாடுதே (குறத்தி)

மின்னற்பிரகாசமாய் விளங்கும்வடிவழகி
அன்னாகாரமில்லாமலே அலைபவனானேனே
புன்னால் தியங்கலானேனே (குறத்தி)

(தோழிகள்) இவன் யார் இந்தத் தடாகத்தருகிலிருக்க வேண்டிய காரணம் யாதோ அருகிற்சென்று விசாரிப்போம் வாருவீர்கள்.

(அருச்சுனன்) ஆ எனது ஆசைக்கினிய அல்லியரசாணி நீ எப்போது என்னை விவாகம் செய்துக்கொள்ளுவாயோ அப்போதுதான் என் ஜீவன் நிலைக்குமென்றறிவாய் பிராணநாயகி.

(தோழிகள்) இவன் சொல்லுகிற வார்த்தையைக்கேட்டீர்களா? இந்த சங்கதியை நமது அரசியிடந்தெரிவிப்போம் வாருவீர்கள்.

அல்லியரசாணிக்குத் தோழிகள்சொல் - விருத்தம்.

வல்லமையாலேயிந்த மதுரையையாளுமெங்கள்
செல்வியேயல்லியம்மா செப்புவோமொன்றுகேளும்

அல்லியின்ஜலத்திலாரோ அன்புடன்மருந்துரைத்து
அல்லியைவிவாகஞ்செய்து அவனியில்வாழ்வேனென்றான்.

(வ-ம்) அம்மா நமது அல்லிமலர் தடாகத்தில் யாரோ ஒருவன் வந்து மருந்துரைத்துக்கொண்டு இந்த ஜலத்தை அல்லியரசாணி தாம் பட்டவுடனே என்னைத்தேடியழைத்துக்கொண்டுபோய் விவாகஞ்செய்துக்கொள்வதுண்மையென்று சொல்லிக்கொண்டிருக்கிறான் அம்மணி.

(அல்லியரசாணி) ஆ ஹா ஹா என்னவார்த்தைப்புகன்றான் பார்த்தீர்களா பவளசேனை என்னை இவ்விதமாகசொன்னவனுக்கு என்ன தண்டனைவிதிக்கலாகும் தெரிவிப்பாய்.

(பவளசேனை) அம்மணி உம்மைக்குறித்து இழிவாகப் பேசியவனை வெய்யலிற் காய்ந்திருக்கும்படியான ஆற்றுமணலிற்போட்டு புரட்டி கொல்லவேணுந்தாயே.

அல்லியரசாணி அருச்சுனனுக்கு முதலாவது
தண்டனையிடுவது - விருத்தம்.

இப்படியெனைக்குறும்பா இகழ்ந்ததோர்மடையன்தன்னை
கைப்பிடியாய்ப்பிடித்துக் காய்ந்திடும்மணலிற்றள்ளி
ஒப்பிலேபுரட்டிக்கொன்று ஓடிவந்துற்றசேதி
செப்புவீரெனக்குகந்த சேடிகாளிப்போதானே

(வ-ம்) பெண்களே கொஞ்சமேனும் என்னை மதியாமல் இகழ்ந்து குறும்பாகப்பேசிய அந்த துன்மார்க்கனை கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டுபோய் ஆற்றங்கரையிலுள்ள சுடுமணலிற்போட்டுப் புரட்டிக் கொன்றுவிட்டுவந்து எனக்குத்தெரிவிப்பீர்கள்.

(தோழிகள்) அப்படியே செய்கிறோமம்மா.

தோழிகள் அருச்சுனனை சுடுமணலிற்புரட்டுதல்.

விருத்தம்.

அல்லியின்தோழிப்பெண்கள் அருச்சுனனுயிரைப்போக்க
தொல்லையாய்மணலிற்றள்ளி தோற்றமாய்ப்புரட்டும்போது
வல்லமைவிஜயனென்று வாமனனுரைக்கக்கேட்டு
சொல்லியவெயிற்படாமல் சூரியன்செய்திட்டானே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணியின் சொற்பிரகாரம் அருச்சுனனைக் கொல்லுவதற்கு ஆற்றுமணலிற் புரட்டும்போது கிருஷ்ணமூர்த்திக்கு மனந்தாளாமல் சூரியபகவானைப்பார்த்து



ஓ நவக்கிரகாதிபதியே எந்தன்மைத்துனனாகிய அருச்சுனனுக்குமாத்திரம் வெய்யற்படாமல் குளிர்ந்திருக்கும்படியாகச்செய்தும் இந்தப் பெண்கள் தேகமெங்கும் கொப்பளிக்கும்படியாக அதி தீக்ஷண்யமாயிருப்பாயென்றுரைத்தவுடனே அருச்சுனனுக்கு குளிர்ந்த காற்றுவீசவும் பெண்களுடைய தேகமெல்லாங் கொப்பளிக்கும்படியாகவும் வெய்யற்காயும்விதங்காண்க. 46

அருச்சுனன் சொல் - ஜாவளி.

இ-ம்-இந்துஸ்தான்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

அல் லியே வரு வாயே ஆற்றங் கரையோரம் (அல்)

அநுபல்லவி.

வல் லமையாகி யங்கும் வருத்த மாயா னிங்கும்
அல்லற் படுவ தழகோ மெல்லி யே (அல்)

சரணம்.

பெண் களா யுங்க ளெஜமானியானுமே
சண் பக மலர் சூடி சந்தோஷமுடனுகை
மண் மீது மணஞ்செய்து மகிழ்வ தெந்நாளோ (அல்)

(தோழிகள்) இதென்ன ஆச்சரியம் இந்த வெய்யல் தீக்ஷண்ணியத்தால நமது தேகமெங்குங்கொப்பளித்துவிட்டதே இந்த ஓடிவானுக்கு கொஞ்சமேனும் சூடுரைக்கவில்லையா ? இதென்னவிந்தையோ நமது அரசியிடந்தெரிவிப்போம் வருவீர்கள்.

(செங்கமலம்) தாயே அவன்மீது சுடுமணலை வாரிவாரி கொட்டினாலும் சாகாமலிருக்கின்றானே இனி யாங்களென்னசெய்வோமம்மா.

(அல்லியரசாணி) இதென்னஆச்சரியம் அவன் மாந்திரிகனைப்போற்றோற்றுகின்றது ஆதலின் அவனைத் தூக்கில்போட்டுக் கொன்றுவிடுவீர்கள்.

(செங்கமலம்) அப்படியே செய்கிறோமம்மணி.

அருச்சுனனை இரண்டாவதுமுறை
தூக்குமரத்திலேற்றிக் கொல்லும்படியாக
தண்டனையிடுவது - விருத்தம்.

உச்சிதமாகயிந்த உலகெலாம்மதிக்கப்பெற்ற
தச்சனார்மகளாற்செய்த தகுந்ததோர்தூக்கென்றேனும்

மெத்தமிக்வேணியின்மேல் மெல்லெனவே நடைபின்னை
இச்சையேயிடக்குமாதே இத்தொழில்தெரியாதென்றுள்

(வ-ம்) அல்லியரசாணியின் ஆக்கினைப்படியே அருச்சுனனை நாக்கு பாரத்தண்டை இழுத்துவந்து இந்த வளி மேதறி அந்தக் கயிற்றை கழுத்தில் மாட்டிக்கொள்ளுவாயென் மாக்க அருச்சுனன் கண்டு இந்த பெண்கள் நம்மைக்கொல்லத்தருகு இவ்வளவு நூரென்னைக் கொண்டிருக்கின்றார்களென்று தனக்குள்ளேயோசித்து ஒன்றுமறியாதவரைப்போல மூன்றுதரங்களில் யாரானாலு இந்த வளியின்மீதேறி கயிற்றைக் கழுத்தில்மாட்டிக்கொண்டு காண்பித்தீர்களாகில் யாது மவ்விதமே செய்வேனென்று அனைத்தனைக்கேட்டுச்செங்கமலதாதி வளிமீதேறி கயிற்றைகழுத்தில்மாட்டிக்கொண்டு இப்படித்தானென்றுரைக்குமுன்னமே கிருஷ்ணமூர்த்தியானவர் பெருச்சாளி ரூபத்துடனேறி வந்து வணியைத்தட்டிவிடவே செங்கமலத்தாதியின் கண்களும், நாவும் பிதுங்கி இறந்ததைக்கண்டு பெண்களெல்லாம் குட்டோ முறையோ வென்று கூச்சலிட்டு அல்லியரசாணிக்கு தெரிவிக்கவும் இவையாவையுமுணர்ந்த அருச்சுனன் சொல்லும் விதங்காண்க.

அருச்சுனன்சொல் - விருத்தம்

இன்பமாய்க்கையுங்காலும் இழுத்திழுத்தாட்டிக்கொண்டு
வன்மையாயுஞ்சலாடும் மங்கையேபாணிக்கட்டம்
அன்புடன்கற்றுக்கொண்டேன் அழகேணிமீதிருந்து
நன்மையாய்நீயிறங்கு நானேறிப்பார்க்கின்றேனே

(வ-ம்) ஆஹா ஹா இதென்ன உன்கையுங்காலும் ஆட்டிக்கொண்டு கண்விழி பிதுங்க வெகுவேடிக்கையாக ஊஞ்சலாடுகின்றாயே சரி சரி இப்போது யானுங் கற்றுக்கொண்டேன் இறங்கி வருவாய் மாதே.

(தோழிகள்) அம்மணி செங்கமலத்தாதி இறந்துவிட்டாள் அந்த ஒடிவான் சாகவில்லையம்மா

(அல்லியரசாணி) அப்படியா:—பவளசேனை அவனை என்னகண்டனைசெய்யலாமென்றெரிவிப்பாய்.

(பவளசேனை) அம்மணி அவனை நமது எல்லைப்பிடாரியாகிய காளியம்மனுக்குப்பலியிடவேண்டுமம்மா

(அல்லியரசாணி) தாதிகளே அவனை காளியம்மனுக்கு பலியிடுவீர்.

(தாதிகள்) அப்படியே செய்கிறோமம்மா.



அருச்சுனனை மூன்றுமுறை காளியம்மனுக்குப்
பலியிடுகிற தண்டனை - விருத்தம்.

ஊர்கார்க்குங்காளிக்குப் பொங்கலிட்டு
உத்தமனாமருச்சுனனை யிழுத்துவந்தார்
சீர்மிகுந்தகாளிமுன்னே கிருஷ்ணர்சென்று
சிலைவிஜயன்பலிகொள்வா யானால்வீமன்
பார்த்திபனையுங்கொல்வா னதையாலே
பலிகொள்ளாதேயென்று ஓச்சப்பெண்போல்
பேர்கொண்டேபத்திருந்து பெண்கள்முன்னே
பெருமையுடனாவேச மாடினரே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணியின் சொற்பிரகாரம் பெண்களெல்லோரும் காளியம்மன் கோவிலுக்குப்போய் திருவிளக்கேற்றிவைத்து பச்சரிசிபொங்கலிட்டு தேங்காயுடைத்து தூபதீபாராதனையாவுஞ்செய்து அருச்சுனனைகுளிப்பாட்டி மஞ்சள் குங்குமம்பூசி கழுத்தில் பூமாலையைசுற்றி பலிபீடத்தில்கொண்டுவந்து நிறுத்தி காளியம்மனை ஸ்தோத்திரஞ்செய்து அம்மணி மஹம்மாயி எல்லைப்பிடாரியே இந்த நரபலியை ஏற்றுக்கொள்வாயென்று வாளாயுதத்தை வீசப்போது ஓச்சப்பெண்ணைப்போல உருவெடுத்து வந்திருக்கும் கிருஷ்ணபகவான் வாளாயுதத்தை கையிற்பிடித்துக்கொண்டு சொல்லும் விதங்காண்க.

ஓச்சப்பெண்மீது அருள்வருகிற - தரு.
ஆலேகாரம் அடதாளம்.
கண்ணிகள்.

ஆஹா ஆஹா பூங்கொடியேவெகு
அனலாயெரியுதே என்திரேகம்
ஓஹோஹோநீங்க ளொக்குவந்திரிவது
உரைத்திடுவீர்க ளென்னெதிரே

நாட்டுக்கழும்பு வந்ததென்றுங்கள்
நாயகிக்கிப்போதே சொல்வீர்கள்
ஓட்டிடுவேனே பேய்களெல்லாம்
ஒலமிட்டோடிடு மொருகொடியில்

அச்சம்பயங்க ளில்லாதெனக்கு
ஆண்பலிகொடுக்கவா வந்தீர்கள்

கச்சணிபெண்பலி தந்தாலேயான்
காவுகொள்வேனென் றழிவிர்கள்

அல்லிபோல்யாரொரு பெண்ணுச்சேயிந்த
ஆண்பலிவேண்டா மெந்தனுக்கு
அல்லதுயிப்படி செய்தாலேயான்
அதர்வுமதஞ்செய்வே னிவ்வூரை

மதுரைதேசத் தாள்துழைந்துயான்
மனிதரையெல்லா மதஞ்செய்வேன்
குதிரைகுடிப்படை சேனையானையிதை
கும்பலாய்க்கொன்று தின்றிடுவேன்

இப்படிக்குங்களாசிக் கெடுத்தோதுந்தாதிகளே
கொண்டுவாமஞ்சாணீர் கொழுந்தானவேப்பிலையும்

(தோழிகள்) அம்மா இதோ கொடுத்தோம் வேப்பிலையும் மஞ்சா நீரும் வாங்கிக்கொள்ளுவாயம்மா.

(ஓச்சப்பெண்) சந்தோஷம்.

(தோழிகள்) இனியென்ன செய்வோமம்மா:—அம்மணி காளிகா தேவி இந்த ஓச்சப்பெண் சொன்னது பொய்யோ மெய்யோ உன்னுடைய வாக்கினுலுரைப்பாயாகில் நம்புகிறோமம்மா.

(காளி) தோழிப்பெண்களே இந்த ஓச்சப்பெண்மீது யானேவந்து சொன்னேன்.

(தோழிகள்) புத்தி புத்தி தாயே காளிகாதேவி.

தோழிகள் அல்லியரசாணிக்குச்சொல் - விருத்தம்.

செம்மைசேரிலகுந்தாயே சிறப்புடன்பொங்கலிட்டு
வம்பனையிழுத்துவந்து வகையுடன்காளிக்கன்பாய்
அம்மணிபலிகொள்ளென்று அன்புடன்சொல்லும்போது
அம்புவிதனிலெனக்கு ஆண்பலிவேண்டாமென்றாள்

(வ-ம்) அம்மணி யாங்களுமது ஆக்ஞைப்படியேகாளியம்மனுக்கு பொங்கலிட்டு அந்த ஓடிவானை யிழுத்துவந்துபலிபீடத்தில் நிறுத்தி கத்தியை ஓங்கினோம் அப்போது காளிகாதேவி ஆண்பலி வேண்டாமென்றுசொல்லிவிட்டனள் இனி யாதுசெய்வோமம்மா.

(அல்லியரசாணி) அவனை பூதகிடங்கிற்றள்ளி கொன்றுவிடுவீர்கள்



(தோழிகள்) நல்லது அப்படியே செய்கிறோமெங்கள் அரசியே.

அருச்சனனுக்கு காவலாவது பூதக்கிடங்கில் தள்ளும்படி.

தண்டனையிடுவது - விருத்தம்.

பூதத்தின்கிடங்கிற்குள்ளே பார்த்தனையடைத்துவிட்டார்
ஆதியாம்கிருஷ்ணமூர்த்தி அவ்விடமோடிவந்து
ஓதினார்விஜயனென்று ஒப்பியேபூதமெல்லாம்
நீதமாய்த்தொண்டுசெய்யும் நிலைமையும்புகலுவேனே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அருச்சுனனை பூதகிடங்கிலடைத்துவிட்டதை யுணர்ந்த கிருஷ்ணபகவான் ஓடிவந்து ஓ பூதகூட்டங்களே இந்த அருச்சுனனுக்கு ஏதாகிலும் தீங்குசெய்வீராகில் இவருடைய தமயனாகிய வீமசேனன்வந்து உங்களையெல்லாம் ஒருமிக்க கொன்றுவிடுவானென்று பயமுறுத்திச் சென்றதை யுணர்ந்த பூதகூட்டங்கள் அருச்சுனனுக்கு பணிவிடைசெய்யும் விதங்காண்க.

சொண்டிச்சிந்து-அடதாளம்-கண்ணிகள்.

தந்தினந் தன தினனு-தனனந்
தந்தினந் தனதன தனதனனு

பூதக்கூட்டங்கள் கூடி—விஜயன்
பொற்பதந் துணையென்று கூத்தாடி
கீதசங்கீதம் பாடி—இவர்
கிருஷ்ணருக்குமைத்துன னென்றாடி

சிலபூதங்கால் பிடிக்க—சிலதிவர்
சிங்காரகையுடம்பதை பிடிக்க
சிலதிவர்புகழ் படிக்க—சிலபூதம்
சிரித்துசிரித்துகூத் தாடிநடக்க

ஆயாசங்களை தீர்த்தார்—அல்லியென்று
அன்புடனேசொல்லிபவ ரகம்கிழ்ந்தார்
ஓயாதுன்னாசை யென்றார்—என்னை
ஒய்யாரியல்லிமணம் புரிவாளென்றார்

கண்டார்பெண்கள் நன்றாய்—இவன்
கற்றவித்தையாலே பூதம அஞ்சவென்றார்
விண்டிடுவோமரசிக் கென்றார்—இவர்கள்
விசையாகவேயல்லி முன்சென்றார் (தந்தினந்)

தோழிகள் அல்லியரசாணிக்குச் சொல் - விருத்தம்.

அல்லியமென்னசெய்வோம் அவனை பூதக்கிடங்கில்
மெல்லெனத்தள்ளிவிட்டு மேலுக்குந்தாளும்போட்டோம்
சொல்லாதலைகளெல்லாம் கூடிப்பெருந்தொண்டுசெய்ய
உல்லாசமாகவேதா னும்மையேநினைக்கின்றானே

(வ-ம்) அம்மணி யாங்களவனை பூதக்கிடங்கில்போட்டனம் அலைகளெல்லாம் அவனுக்குப் பணிவிடை செய்துக்கொண்டு கொண்டாடியிருக்கிறது. அவன் சந்தோஷமாகவே உம்மை நினைந்துக்கொண்டிருக்கிறானம்மா.

(அல்லியரசாணி) ஆ ஹா ஹா பவளசேனை அவனை என்ன செய்யலாம் தெரிவிப்பாய்

பொது-வசனம்.

கேளுங்களையாசபையோர்களே இவ்விதமாக அல்லியரசாணி யோசித்துக்கொண்டிருக்கும்போதுகிருஷ்ணமூர்த்தியானவர் பெண்ருபந்தட்டனே அருச்சுனனைத் தேடிக்கொண்டு அல்லியரசாணியின் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.



கிருஷ்ணமூர்த்திபெண்ருபந்தட்டனே
அருச்சுனனைத் தேடிக்கொண்டுவருகிற - விருத்தம்.

அன்பனும்விஜயன்தன்னை அன்புறக்காணவேகிருஷ்ணமூர்த்தி
தெரிந்தமையாம்பெண்கள்போலந் தோன்றியேபணிகள்பூண்டு
வன்மைசேர்மதுரைதன்னில் வந்தல்லிதோழிகள்முன்
என்கணவனைக்காணேனென் றேங்கியேயபுலம்புவாரே.



(வ-ம்) கிருஷ்ணமூர்த்தியானவர் அருச்சுனனை அழைத்து வருவோமென்று ஆடையாபரணசிங்கார அலங்கிருதமாக அல்லியரசாணியின் கொலுவில்வந்து தோழிகள் முன்னே தன் கணவனைக்காணாமையால் தேடிக்கொண்டுவந்தேனென்று துயரப்படும்விதங்காண்க.

பெண்ருபந்தட்டனேவந்த கிருஷ்ணமூர்த்தி
தோழிகள்முன் துயரப்படுகிற-தரு.

இ-ம்-ஆஹிரி-ருபகதாளம்.

கண்ணிகள்.

அன்பாயிம்மதுரைவாழ் அக்காதங்கைமாரே அம்மமாரே-எங்கள்
ஆளன்மணாளனை யாரேனுங்கண்டீரோ அம்மமாரே

இன்பமிருக்கவ ரெனதுமணவாளன் அம்மமாரே-பிது
இசைவயதாகிலிலகிடுஞ்சிங்காரன் அம்மமாரே

செக்கசிவந்தவர் ஜெகம்புகழ்மாயபாரன் அம்மமாரே-நல்ல
செங்கிரைத்தண்டுபோல் தேஜஸுடையவர் அம்மமாரே

சிக்கெனவேயல்லி மெல்லியென்றுசொல்லி அம்மமாரே-அவர்
சிந்தனைசெய்து தியங்கிமயங்குவார் அம்மமாரே

சங்குலமாய்த்தண்ணீர்ப் பார்த்தவிடத்திலே அம்மமாரே-வெகு
சந்தோஷத்துடனே மருந்துரைப்பாரவர் அம்மமாரே

ட்டினநாளமுத லிதுவரையொருபோதும் அம்மமாரே-யான்
காணாதிருந்ததா ளில்லைபேதைப்போதும் அம்மமாரே

எட்டுநாளாச்சுது எங்கேபோனாரோ அம்மமாரே-அவரை
எவளோபிடித்துவைத்துக்கொண்டாளோயோ அம்மமாரே

(தோழிகள்) ஓஹோ அந்தபைத்தியம்பிடித்தவன் இவள் புருஷன் போலிருக்கிறது:—உன் புருஷனை பூதக்கிடங்கில்போட்டிருக்கிறோம் நீவந்து எங்களரசியாகிய அல்லியரசாணியைக்கேட்டு அழைத்துக்கொண்டு போவாயம்மா.

(கிருஷ்ணமூர்த்தி) அப்படியே யிதோ வருகிறேனம்மா.

(தோழிகள்) அம்மணி இவள் பூதக்கிடங்கில் இருப்பவனுடைய மனைவியாம் அவனைத்தேடிக்கொண்டுவந்திருக்கிறாளம்மா.

(அல்லியரசாணி) மெய்தானோ

கிருஷ்ணமூர்த்தி சொல் - தரு
இ-ம்-முகாரி-ஆதிதாளம்.
கண்ணிகள்.

மெய்தானவர் தானம்மா மேனிசிலிர்க்குதே — அம்மணி-அவர்
மெல்லியல்லியென்று சொல்லித்திரிகுவார் — அம்மணி

வையம்புகழும் துவாரகாபுரிதனில் — அம்மணி-நாளும்
வாழுந்திருமலை நாய்க்கரின்றபெண்கள் — அம்மணி

மெல்லியென்பேரம்மா யென்னையவருக்கு — அம்மணி-வெகு
மேன்மையுடனே விவாகம்செய்தாரம்மா — அம்மணி

அல்லியென் தங்கைமே லாசைகொண்டாரம்மா — அம்மணி-சுற்றம்
அப்படிசெய்வது தப்பிதமென்றனர் — அம்மணி

ஒருபெண்கொடுத்துமற் றொருபெண்தரோமென்றார் அம்மணி-இவர்
ஒய்ந்துமயங்கி கலங்கித்தவிக்கிறார் — அம்மணி

அன்றுளின்றுள்வரை அன்னமுண்ணு மலே — அம்மணி-இவர்
அலைந்துதிரிகின்று ரையையோயென்செய்வேன் — அம்மணி

மூன்றுளென்தலைமி லெழுதியகோலத்தை — அம்மணி-பிரம்மன்
முற்றுங்கலைத்துதான் றுயெழுதுவாரோ — அம்மணி

பெண்ணுப்பிறந்தது போதுமெந்தனுக்கு — அம்மணி-இந்தப்
பேதைக்கணவனைக் காணுதலைகிறேன் — அம்மணி

மன்னாமரமழ் மேயழகானழ — அம்மணி-இந்த
மானிலமெங்கும் கலங்கித்துடிக்குதே — அம்மணி

(அல்லியரசாணி) பெண்ணே உன் புருஷன் வைத்தியங்கொண்டவ னென்று எனக்குத்தெரியாது அவன் ஒருநாள் அல்லிமலர்தடாகத் தில் அல்லியேமெல்லியே என்னை விவாகம் செய்துக்கொள்ள வருவா யென்று மருந்துரைத்துக்கொண்டிருந்தானென்று தோழிப்பெண்கள் அவனை பூதக்கிடங்கில் போட்டிருக்கிறார்கள் ஆகையால் இப்போதே யழைத்துக்கொண்டுசெல்வாயம்மா.

(கிருஷ்ணமூர்த்தி) நாயகா வருவீர்.

அருச்சுனன் கிருஷ்ணமூர்த்தியினிடம்வருகிற-விருத்தம்.

ஆயனுருதவியாலே அருச்சுனன்விடுதலாகி
மாயனுர்சித்திரைசெய்யும் மாவனம்வந்தபின்பு



பேயனைப்போலேயல்லிப் பெண்ணிடம்பட்டதெல்லாம்
காயமாய்க்கனவுகண்ட காரணம்போற்சொல்வாரே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பூதக்கிடங்கிலிருந்த அருச்சுனன் விடுதலையாகி சித்திரை செய்துக்கொண்டிருக்கும் படியான கிருஷ்ணமூர்த்தியினிடம்வந்தபோது எல்லா சங்கதியும் தெரிந்தும் ஒன்றுமறியாதவரைப்போல தூங்கிக்கொண்டிருந்தவர் கனவுகண்டவரைப்போல திடுக்கென்றெழுந்து அருச்சுனனைப்பார்த்துச் சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்திசொல் - தரு
இ-ம்-நவரோஸ்-ஆதிதாளம்.
கண்ணிகள்.

ஆறுமுலகுமன்று — அர்ச்சுனுயானோர்கினவு
கண்டேனே — கினவு — கண்டேனே

நானக்குறத்தியுனக்குக் — கைபார்த்துகுறிசொல்லவும்
கண்டேனே — கினவு — கண்டேனே

ஆனமருந்தைக்கொடுத்துன் — அணிபணிகள்வாங்கிப்போக
கண்டேனே — கினவு — கண்டேனே

அம்மருந்தைக்கொண்டுநீயும் — அல்லிகுளத்திலுரைக்க
கண்டேனே — கினவு — கண்டேனே

செம்மையாயல்லிசேனைகள் — சேர்ந்துனையாற்றில்புரட்ட
கண்டேனே — கினவு — கண்டேனே

தூக்குமரந்தனிலுன்னை — தூக்கும்படிசொன்னதுபோற்
கண்டேனே — கினவு — கண்டேனே

சார்க்குங்காளிமுன்னேயுன்னைகாவுகொடுப்பதுபோலும்
கண்டேனே — கினவு — கண்டேனே

பூதத்தின்கிடங்கிலுன்னை — போட்டடைத்தார்போலவுமே
கண்டேனே — கினவு — கண்டேனே

நீதமுடன்தெய்வகன்னி — பின்னையுமழைத்துவர
கண்டேனே — கினவு — கண்டேனே

(வ-ம்) அருச்சுனு யானிப்போதுசொல்லியதெல்லாம் உண்மையாயிருக்குமா தெரிவிப்பாய்.

(அருச்சுனன்) சுவாமி இவ்வார்த்தையை எவர்கள்தான் உண்மையென்றோதுவார்கள்! நிரேகத்திலப்பித்தமதிகரித்ததால் நித்திரையில் கனவு மாறிமாறி கண்டதை மெய்யென்று எண்ணவேண்டாம்.

(கிருஷ்ணர்) நல்லது உனது ஆடையாபரணமெல்லாமெங்கே.

அருச்சுனன்சொல் - விருத்தம்.

ஐயனேயென்னசெய்வேன் அங்கொருகுறத்திவந்து
பையவேமருந்தைத்தந்து பணியெலாம்வாங்கிக்கொண்டு
தையலுன்வசமேயாவாள் தண்ணீரிலிதையுரைத்தால்
பொய்யானால்நீகொடுத்த பொருளெலாந்தருவேனென்றாள்

(வ-ம்) சுவாமி யான் அல்லியின்மேலாசையாகி அலையும்போது ஒரு குறத்திவந்து வசியகுளிகை யென்னும் மருந்தைக் கொடுத்து அல்லிமலர்தடாகக் கரையிலுட்கார்ந்து தண்ணீரிலிதை உரைத்துக் கொண்டிருப்பாயாகில் அல்லியரசாணிக்கு உன்மீது ஆசையுண்டாகி உன்னைத்தேடிவந்து கலியாணஞ்செய்துகொள்ளுவாளென்று என்னை ஏமாற்றி யானணிந்திருந்த ஆடையாபரணங்களையெல்லாம் வாங்கிக் கொண்டுபோய்விட்டாள். அதன்பிறகு யான் அவள் சொல்லியவண்ணமேசெய்தும் அல்லியரசாணி எனக்கு வசமாகவில்லை.

(கிருஷ்ணமூர்த்தி) ஆ! மோசம்போனாயா? அந்தக்குறத்தியிருக்கும்படியான இடந்தெரியுமா

(அருச்சுனன்) தெரியும் சுவாமி.

(கிருஷ்ணமூர்த்தி) அப்படியானால் நீ கொடுத்தவையெல்லாம் வாங்கிக்கொண்டுவருவாய்.

(அருச்சுனன்) நல்லது சுவாமி.

பொது-வசனம்.

கேளுங்களையாசபையோர்களே அருச்சுனன் குறத்தியைத் தேடிக் கொண்டுபோகும் சமயத்தில் கிருஷ்ணமூர்த்தி பழையபடி குறத்தியைப்போல்ரூபங்கொண்டு குடிசையிலிருக்கும் விதங்காண்க.

(அருச்சுனன்) ஓ திம்மக்கா.

(குறத்தி) ஆர்ராய்யே.

(அருச்சுனன்) நீ கொடுத்தமருந்து பலிக்கவில்லையம்மா.



அருச்சுனன்சொல் - விருத்தம்.

வம்புக்கேமருந்தைத்தந்து வஞ்சகமாயென்னுடை
திம்மக்காகுறத்தியேநீ திருடிபோய்க்கொண்டுசெல்ல
தொம்மக்காவென்றேநீரில் புகழுடன்மருந்துரைக்க
கும்மக்காயெல்லாஞ்சேர்ந்து கும்மினார்போதுந்தாயே

(வ-ம்) சபாஷ் குறத்தி நீ வெகுமோசக்காரி நீ கொடுத்த மருந்தை யெடுத்துக்கொண்டுபோய் நீ சொன்ன டொம்மக்கா மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு தண்ணீரிலுரைக்கவே பெண்களெல்லாம் சேர்ந்து என்னை அடித்த அடியை நினைக்கநினைக்க பயமாகுது அவ்வளவு கஷ்டநிஷ்டூரங்களடைந்தும் உன் மருந்துபலிக்கவில்லை ஆகையால் எனது ஆடையாபரணங்களைத் தருவாயம்மா.

(குறத்தி) ஆடே ஆர்ராய்யே உன் துணிமணியைக்கொண்டுபோய் கடையில்விற்கும்போது தலையாரிகள்கண்டு திருட்டு உடைமையென்று சொல்லி என்னையும் அடித்து உன்னுடைய ... பிடுங்கிக்கொண்டுபோனார்கள் போடாய்யே.

அருச்சுனனும் குறவர்களும் சண்டைசெய்தல்

விருத்தம்.

வம்பாககுறத்தியோடு விஜயனும்சண்டைசெய்ய
கும்பலாய்க்குறவரெல்லாங் கூடியொன்றாகச்சேர்ந்து
கொம்புகளாலடித்துக் கோவென்றலறச்செய்பொட
நம்பியமனிதனென்று ஞாயமாய்ப்பொருளீந்தாளே.

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே அருச்சுனனும் குறத்தியும் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதை யறிந்து குறவரெல்லாம் ஓடிவந்து அருச்சுனனை யடிக்கும்போது குறத்திக்குமனந்தாளாமல் எல்லோரையும் சமாதானப்படுத்திவிட்டு அருச்சுனனுடைய ஆடையாபரணங்களைத்தந்தவுடனே அதை வாங்கிக்கொண்டு வருகின்ற விதங்காண்க.

(அருச்சுனன்) சுவாமி ஆடையாபரணங்களை இதோ வாங்கிக்கொண்டுவந்தேன்.

(கிருஷ்ணமூர்த்தி) அருச்சுனா ஊருக்குப்போவோம் வருவாய்.

(அருச்சுனன்) சுவாமி அல்லியரசாணியை விவாகஞ்செய்துகொண்டபிறகுதான் வருவேன்.

(கிருஷ்ணமூர்த்தி) அருச்சுனா நீ ஆண்டியைப்போல ரூபமெடுத்து அல்லியரசாணியிடத்தில் யாசகம் வாங்கிக்கொண்டுவருவாயாகில் எப்படியாகிலும் உனக்கு விவாகஞ்செய்துவைக்கிறேனப்பா.

(அருச்சுனன்) அப்படியே மகாபாக்கியம் சுவாமி

அருச்சுனன் ஆண்டிவேஷங்கொண்டுவருகிற - விருத்தம்

வேண்டியகாவிபாடை யுடுத்திருத்திராக்ஷமாலை
பூண்டுகொண்டல்லிரூபம் போற்படமெழுதியன்பாய்
காண்பவாதிசயிக்க காரியவாதியென்னும்
ஆண்டிபோல்ரூபங்கொண்டு அருச்சுனன்வருகின்றாரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அருச்சுனன் காவிவஸ்திரமணிந்து கழுத்தில் ருத்திராக்ஷமாலையும் திருமேனியில் விபூதிதாரிதமும் பிரகாசிக்க மான்தோலாசனமும் தண்டுகமண்டலமும் ஜபமாலையும் ஒரு கையில் எடுத்துக்கொண்டு மற்றொருகையில் அல்லியரசாணியைப்போல் படமெழுதி எடுத்துக்கொண்டு ஹரா ஹரா சிவசிவா பரமேஸ்வராவென்றுவருகிறவிதங்காண்க.

தோழிப்பெண்கள் சொல்-விருத்தம்.

ஆரையாசாமியாரே அரண்மனைவந்திரெந்த
ஊரையாவுன்னிருப்பு உள்ளேநீபோகொணாது
காரையாஉபிரையிங்காண் காற்றுமேவிசொணாது
சீரையாதிரும்புன்தேசம் சிக்கெனவுரைத்திட்டோமே.

(வ-ம்) ஆரையா சுவாமி உள்ளேபோகிறது இது அல்லியரசாணியிருக்கும்படியான அரண்மனை இவ்விடத்தில ஆண்காற்றுவீசொணாது எங்களரசியுன்னைக்கண்டால் இரண்டுதுண்டாக வெட்டிப்போடுவளானையால் போகவேண்டாமையா.

(அருச்சுனன்) அம்மா யானொருகிழவன் மேலும் காசிப்பிராமணன் அல்லியரசாணியின் பெருமையைக்கேட்டு இங்கு வந்தேன் எனக்கு வழிவிடுவீர்கள்.

(தோழிகள்) அப்படியானால் போய்வாரும் சுவாமி.

அருச்சுனன் ஆசனத்திலமர்ந்துசொல்-விருத்தம்.

வந்ததோரர்ச்சுனர்க்கு வழிவிட்டாரினிமையாக
சிந்தைமகிழ்ந்து சிறப்புடனடக்கசென்று



52

ஐந்தாரும்படிதனைத்தில் ஆசனத்தோடமர்ந்து
சுந்தரப்படத்தைப்பார்த்து சொக்கியேபடிக்கின்றாரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே ஆண்டிவேஷத்துடனே வந்த அருச்சுனன் காவற்பெண்களை ஏமாற்றிவிட்டு முதற்படி இரண்டாம்படி மூன்றாம்படி நான்காம்படி கடந்து ஐந்தாம்படியிற் போய் ஆசனம்போட்டு உட்கார்ந்துகொண்டு கிருஷ்ணமூர்த்தியானவர் எழுதிக்கொடுத்த படத்தைக்கீழேவைத்து அதிலெழுதியிருக்கும் அல்லியரசாணியின் வடிவலங்காரத்தையும் பவளசேனையின் ரூபலாவண்ணியத்தையும் பார்த்து மகிழ்ந்து பாடும்விதங்காண்க

அருச்சுனன்சொல் - தரு.

இ-ம்- அசாவேரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| வடிவுசுந்தரி ரஞ்சிதரூபில் | வர்ணரூபசௌந்தரி |
| கொடியில்வந்து மணம்புரிந்திட | நோக்குவாயினி யல்லியே |
| உனதுஆசையா லுனைவிழைந்துயான் | உருகுமேனே சௌந்தரி |
| எனதுதாயையும் தமயன்தம்பியை | எண்ணேனென்சிந்தையி லல்லியே |
| மாரன்பூங்கணை மார்பிற்றைத்திட | மனமயங்கி சௌந்தரி |
| தீரவீரப்ர காசவிஜயனும் | தியங்கலாமோ லல்லியே |
| பருவயிளங்குயில் காமரஞ்சித | பஞ்சபாணா சௌந்தரி |
| கிருபைசெய்தென்னை மணம்புரிந்திடிற் | கீர்த்தியடைகுவாய் யல்லியே |

(தோழிகள்) அடியம்மா இந்தப் பண்டாரக்கிழட்டோடிவான் பாட்டைக்கேட்டீர்களா இந்தசங்கதியை பவளசேனைக்குத்தெரிவிப்போம் வருவீர்கள்:—அம்மணி யாரோ ஒரு பண்டாரக் கிழவன்வந்து அல்லியம்மாளைப்போலாகவும், உம்மைப்போலாகவும் படமெழுதிக்கொண்டு ஐந்தாம்படிகளத்திலுட்கார்ந்து அந்தப்படத்தைப் பார்த்து பார்த்து அல்லியரசாணி என்னை கலியாணஞ்செய்துகொள்வாளாகில் வெகு கீர்த்தியோடு வாழ்வாயென்று சொல்லுகிறானம்மா.

(பவளசேனை) இதென்ன ஆச்சரியம் நமது அல்லியரசாணியை விவாகம் செய்துக்கொள்ள இவ்விதமாக வேஷங்கொண்டுவந்த மஹானுபாவரோ? பெண்களே நீங்கள் ஐந்துபேரும் சிங்காரித்துக்கொண்டு அவர்முன்பாக நிற்பீர்கள்.



தோழிகள் அருச்சுனன்முன்வருதல்.

கலிவிருத்தம்.

முத்துடன்நவ ரத்தினம்பூண்டிவர்
சித்தசன்ரதிக் கொப்பாயிலகிடும்
முத்தமக்குண பெண்களாமைவரும்
பத்திவந்தனர் பற்குணராஜனே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பவளசேனை சொற்பிரகாரமாக ஐந்துபெண்களும் ஸ்நானஞ்செய்து களப கஸ்தூரிமுதலிய வாசனைதிகளை மேனியெங்கும்பூசிக்கொண்டு புஷ்பமுதலிய பணியணியாவுமணிந்து சிங்காரலங்காரமாக சிங்காரித்துக்கொண்டு ஐந்து தட்டுகளிலும் நவரத்தினங்களையெடுத்துக்கொண்டு அருச்சுனன்முன்வந்து சுவாமிகளே இந்தப்பெண்களிலெவர்கள்மீது உமக்கிச்சையோ தெரிவிப்பீராகில் உமது இஷ்டம்போல் உம்மைகலியாணம்செய்துக்கொள்ளுகிறோம் சுவாமியென்று சொன்னதைக்கேட்டு அல்லியரசாணியைக் காணுமென்றலையும் விதங்காண்க-

அருச்சுனன் சொல் - தரு

இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அல்லிவந்தாளோசொல்வீரன்புடன் — அமிர்தரஞ்சித பெண்களே
முல்லைப்பூமணம் வீசும்பகுண — முத்தலங்கிர்த பெண்களே



காமனெய்திற பாணமெந்தனை — களைக்கச்செய்யுதே பெண்களே
தாமதஞ்செய லாகாதென்றுமே — சாற்றுவீரினி பெண்களே
வல்லமையுள்ள யினியவாசக — வடிவலங்கார பெண்களே
அல்லியரசாணிதன்னையன்புடன் — அழைத்துவருவீர்கள் பெண்களே

(தோழிகள்) ஆ ஹா ஹா பெண்களே பார்த்தீர்களா என்ன விபரீதம் இந்தப்பண்டாரக்கிழமுநியன் நமது அரசியாகிய அல்லியம்மாள் மீதே நாட்டமாயிருக்கிறான். இனி இவன்கதி எவ்வாருகுமோ இந்த சங்கதிகளை பவளசேனைக்குத் தெரியப்படுத்துவோம் வருவீர்கள்:— அம்மா பவளசேனையே அந்த ஆண்டிக்கிழவனுக்கு அல்லியரசாணி மீதுள்ள ஆசையை அளவிட்டுச்சொல்லமுடியாதாம். ஆதலின் சீக்கிரமாக அழைத்துவரும்படி சொல்லுகிறானம்மா.

(பவளசேனை) ஆ! அப்படியா தெரிவித்தார்.

(தோழிகள்) அப்படியே தெரிவித்தாரம்மா.

(பவளசேனை) எங்களரசியாகிய அல்லியம்மா ஒரு சுவாமியார் வந்திருக்கிறார் அவரிடம்சென்று விபூதிதுளிதபிரசாதம் வாங்கிக்கொண்டு வருவோம் வருவாயம்மணி.

(அல்லியரசாணி) பவளசேனை என்ன வார்த்தையுரைக்கின்றாய் நான் அங்குசென்று விபூதிதுளிதபிரசாதம்கேட்கும்போது என்னைக் கண்டுமோகிப்பானாகில் இந்த வாளாயுதத்தினால் இரண்டு துண்டாக வெட்டிப்போடுவேன்.

(பவளசேனை) நல்லது அப்படியே செய்வாயம்மா.

அல்லியரசாணி அருச்சுனன்முன்வருகிற

விருத்தம்.

ஆழிசூழுலகந்தன்னில் ஆருமேயெதிரில்லாமல்
வாழியென்றெவருமேற்றும் வன்மைசேரிலகுமல்லி
ஊழிதவென்றென்னும்மல் உயர்தங்கப்பணிகள்பூண்டு
தோழிமாருடனேவந்துத் தோன்றினாள்விஜயன்முன்னே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பவளசேனையினசொற்பிரகாரம் அல்லியரசாணி ஆடையாபரணாலங்கிர்த சிங்காரமாக தோழிகளுடனே வருவதைக்கண்ட அருச்சுனசுவாமியாருக்கு ஆனந்தமுண்டாகி பரவிப்பதைக் காண்க.

அருச்சுனன் சொல் - தரு.

இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

என்றைக்கென்னை மணம்புரிகுவாய் எங்குதேமன மல்லியே
இன்றைக்குன்மன மெந்தன்மீது இரக்கமாச்சுதோ மெல்லியே

ரூபசுந்தரி காமரஞ்சனி ருசிக்குமிதழுள வல்லியே
ஆபத்தாகுமென் றெண்ணியேயெனை ஆதரித்தரு ளல்லியே

அல்லியரசாணிசொல் - விருத்தம்.

வாடியென்றழைப்போரிந்த வையத்திலெவருமில்லை
கூடியமமதையாலே கூசாமல்படத்தில்நம்மை
நாடியேயெழுதிப்பாட ஞாயமோபவளசேனை
ஓடியேவாளெடுத்தா ஓரேவெட்டாய்வீசுகின்றேன்.

(வ-ம்) ஆ ஹா ஹா பவளசேனை இந்தக் கிழமுதியன் சொன்ன வார்த்தையைக் கேட்டாயா ? இந்த உலகமெங்குமுள்ள வீராதிவீரரெல்லோரும் என்னைக்கண்டவுடன் கிடுகிடுவென்று நடுங்குவார்களே அப்படியிருக்க இந்தக் கிழவன் கொஞ்சமேனும் பயமில்லாமல் என்னையும், உன்னையும் படத்திலெழுதிக்கொண்டுவந்து அல்லியேயென்னை மணஞ்செய்துக்கொள்ளுவாய் மெல்லியே யென்றுசொன்னபடியால் இவனை இரண்டு துண்டாக வெட்டிப்போடுகிறேன் வாளாயுதத்தை எடுத்துக்கொண்டுவருவாய்.

பவளசேனைசொல் - விருத்தம்.

பாண்டியரணைகட்டென்று பகர்ந்திட்டகிழவிக்காக
வேண்டியஆளாய்வந்த விமலரையடித்ததாலே
பூண்டனரேகதுன்பம் புவிதனிச்யாசிகின்ற
ஆண்டியைக்கொன்றோமானால் அனர்த்தங்களாகுமம்மா

(வ-ம்) அம்மணி முன்னாளில் வைகைநதி பெருக்கெடுத்து வெள்ளம்புரண்டோடியதால் பாண்டியமஹாராஜா ஆக்ஞைப்படியே மதுரையிலுள்ள வீட்டுக்கொவ்வோராளாகசேர்ந்து வெள்ளத்தைமடக்கி அணைகட்டும்போது ஒரு கிழவியின்பாகத்துக்கு சொக்கலிங்கநாதர் ஒட்டனைப்போல் வடிவெடுத்துவந்து அணைகட்டும்போது பாண்டியர் சுவாமியென்றறியாமல் அடித்த தோஷத்தினாலே அனேகவித துன்பமெல்லாமனுபவித்தார்கள். ஆகையால் இந்த ஆண்டிக்கிழவனை உன்னுடைய கையால் கொல்லாமல் பாம்புகளைவிட்டு கடிக்கச்செய்துக் கொல்லவேணும் தாயே.



54

(அல்லியரசாணி) பவளசேனை இப்போது நீ சொல்லியதைக்கேட்க சரியமாயிருக்கின்றபடியால் இதை எனக்கு விபரமாகத் தெரியப்படுத்துவாய்.

பவளசேனை பாண்டியரடைந்த துன்பத்தை
அல்லியரசாணிக்குச் சொல் - அகவல்

இ-ம்-எதுகுலகாம்போதி.

கண்ணிகள்.

அம்மணியுந்தன் ஐயமார்முன்னாள்
செம்மையாமதுரை செழிப்புடனுள்கையில்

மழையின்றிவைகை மாநதியுலர
தழைமரக்கழனி தண்ணீரிலாமல்

காய்ந்தமையாலே கருதிடுங்குடிகள்
ஆய்ந்தபுண்ணியத்தால் அவனியில்மழையும்

சொரிந்திடபாண்டியர் சொற்படியாகவே
சரியென்றுலகோர் சகலருஞ்சேர்ந்து

ஓடும்ஜலத்தை ஓடாதடக்கி
நாடுமிவ்வைகை நதியிற்றடுக்க

உபாயமேசெய்து ஊராரைநோக்கி
அபாயமில்லாதணை அன்புடன்கட்டென

வீட்டுக்கோராளாய் விரும்பியேவந்து
கூட்டுமிவ்வணையெனக் குறித்தனர்பங்கு

அங்கோர்கிழவி ஆண்டிக்கின்றி
சங்கையாலேங்கி சலித்துப்புலம்ப

அக்காலவட்கு அருட்துணையாக
சொக்கலிங்கேசர் சோம்பாதெழுந்து

கையில்மண்வெட்டி கடப்பாரைகூடை
பையவேகொண்டு பகருமக்கிழவி

முன்னாலேவந்து முனைந்துன்பாகம்
நன்னயமாகிய நவிலுமிவ்வணை

முன்னுதாய்ச்செய்வேன் மொழிகருங்கூலி
என்றிவர்கேட்க ஏழையாக்கிழவி

அன்றெனக்குப்பொருள் அறிந்திடுமெனக்கு
கன்றுயுரைக்கும் ஞாயங்களாயிது

பிட்டதைச்சுட்டு பிழைக்கிறேனப்பா
ஓட்டாயுனக்கதில் உதிர்ந்ததைத்தாரேன்

சத்தியமிதுவென சாற்றினளவளும்
அத்தனுமப்போ ஆகட்டுமென்று

பிட்டுக்கிப்போதே பிரியமாயுலையும்
கட்டுமென்றேறுதி கடுகியேசென்றார்

இருபதுபிட்டு இனிமையாயவளும்
பிரியமாய்ச்சுடவும் பலபலென்றுதிர

அக்கரையாக அணைகட்டச்சென்ற
சொக்காண்டியொட்டன் சோர்ந்தோடிவந்து

காலாறடைத்தேன் குடும்பியார்ச்சுது
சீலமாய்ப்பிட்டுகள் சீக்கிரந்தருவாய்

என்றிவர்கேட்க எல்லாமுதிர்ந்தது
நன்றெனக்காளாய் நாசனேவந்தாய்

இந்தாயுதிர்ந்தவை இன்பாயருந்தென
புந்திமகிழ்ந்திதை புசித்தோடிமண்ணை

ஒருகூடையண்ணையில் ஒழுங்குடன்போட்டு
பெருமையாய்வந்து பெட்புறம்பாட்டி

அறைபாரடைத்தேன் அளித்திடும்பிட்டென
குறையாமலேம்பதுங் கொட்டுமென்றுதிர்ந்தது

இந்தாருமென்று சுந்தனன்கையில்
சந்தோஷமாயதை சலியாமல்வாங்கி

கொன்றைமரத்தின் கீழிருந்துண்டு
நன்றுசமண்ணை நலமுடன்வாரி

சீர்முக்காலாற்றை செப்பனிட்டணையும்
தார்புகழடைத்தேன் தந்திடும்பிட்டென

நாற்றெருபிட்டில் நாறுபிட்டுதிர
சாற்றுமிக்கிழவி தந்தனன்கையில்



55

எல்லாம்புசித்து எப்பங்களிட்டு
சல்லாபமாக சயனித்திருக்க

மூண்டணைகட்டி முடித்தோவென்ன
பாண்டியர்கண்டு பகருமிப்பங்கு

ஆளாரென்ன ஐயனேகிழவியின்
ஆளாகவந்த அவ்வொட்டன்பங்கு

பிட்டெலாந்தின்ற பிழையுளோனென்ன
திட்டமாயழைக்க ஸ்திரமுடன்மண்ணை

வாரியேகூடையில் வகையுடன்போட்டு
காரியர்போலிவர் நடப்பதைக்கண்டு

பிட்டுண்டியிரென பிரம்பாலடிக்க
தொட்டெனமண்ணைத் துரிதமாய்போட்டு

மற்றுரைடைக்க மறைந்தனரம்மா
உற்றதோரடியோ உலகெங்குமுள்ள

கருபின்டாண்டமுங் கலங்கிடப்பட்டது
பொறுமையேநாளும் பூஷணமாகும்

ஆகையாலம்மா ஆண்டியைப்பாம்பால்
சாகக்கடிக்கச் சாற்றுதல்நன்றே

(அல்லியரசாணி) பவளசேனை நீ யுரைத்தபடியே பாம்புபிடாரர்களை அதிசீக்கிரமாக வரவழைப்பாய்.

(பவளசேனை) இதோ வந்தார்களம்மா.

அல்லியரசாணி சொல் - விருத்தம்.

ஓட்டமாயோடிநீங்கள் ஒன்றுகச்சேர்ந்திப்போதே
மேட்டியாய்வனத்திற்சென்று மேன்மையாய்மகுடியூதி
காட்டில்வாழ்பாம்பையெல்லாங் கடுகெனகொண்டுவந்தால்
வாட்டமாயுங்களுக்கு வழங்கிடும்பரிசளிப்பேன்

(வம்) பிடாரப்பெண்களே நீங்களதிவேகமாக காட்டுக்குச்சென்று சர்ப்பங்களிருக்கும்படியான புற்றுகளில் மருந்துவைத்து புன்னாங்குழல் மகுடியூதி கருநாகம், செந்நாகம் பயக்கரவு, கட்டுவிரியனென்னும் பலவித பாம்புகளையும் பிடித்துக்கொண்டு வருவீர்களாகில் உங்களுக்கு வேண்டிய வெகுமதிகொடுப்பேன்.

(பிடாரப்பெண்கள்) இதோ கொண்டுவந்தோமம்மணி.

(அல்லியரசாணி) தோழிகளே இந்தப்பிடாரப்பெண்களுக்குவேண்டிய வெகுமதிகொடுத்து மனமகிழச்செய்து இந்த சர்ப்பங்களுக்குக் கோழிமுட்டையும், பசுவின்பாலும்வைத்து பசியாறச் செய்வீர்கள்.

(தோழிகள்) அம்மணி உமது சொற்படியே நிறைவேற்றினோம்.

அல்லியரசாணி சொல் - விருத்தம்.

நாகமேகேளாயிந்த நாட்டினிலெனையிகழ்ந்து
ஏகதேசங்களாக ஏசியபண்டாரத்தை
வேகமாய்ப்போய்க்கடித்து விஷத்தினாலிவனைக்கொன்று
சாகவேசெய்தாலெந்தன் சஞ்சலமகலுந்தானே.

(வ-ம்) கேளுங்கள் சர்ப்பக்கூட்டங்களே என்னை மதியாமலிகழ்ந்து பேசிய இந்த பண்டாரக்கிழவனை கடித்துக்கொல்வீர்களென்றுங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

பொது-வசனம்

கேளுங்களோ சபையோர்களே அல்லியரசாணியின்வார்த்தையைக் கேட்ட சர்ப்பங்களெல்லாங் கோபாவேசமாய்ப்புஸ்ஸெனச்சீறிவந்து பண்டாரக்கிழவனைக் கண்டபாத்திரத்தில் அருச்சுனனென்றறிந்து விளையாடும் விதங்காண்க.

பாம்புகள் அர்ச்சுனனிடத்தில்வந்து விளையாடுதல்.

இ-ம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

சீறிநாகங்கள் வந்ததே—இவர்
சிலைவிஜயனென்று பலகால்விளையாடவே (சீறி)

அநுபல்லவி.

மீறியவரைக்கடிக்க லாகாதாகாதென்றவர்மே
லேறிவிளையாடிபாடி நாடியுல்லாசமாகவே (சீறி)

சரணங்கள்.

முன்னழகும் பின்னழகும் முதுகில்மச்சரேகையும்
முறுக்குமீசையழகும் சிரித்தமுகமழகும்
என்னசிங்காரம்பாரா யிவரைக்கொல்லென்றநம்மை
ஏவினாளல்லியிதென்ன பாவச்செயலென்றுரைத்து (சீறி)



முகங்கழுத்திடைபுஜ மார்பெங்கிஞ்சுற்றித்திரிந்து
முத்திகொடுத்தவரிதழ் தித்திக்குதென்றானந்தமாய்
ஜகம்புகழ்மகிழ்குண சிங்காரப்புருஷனென்று
மிகவுமனமகிழ்ந்து வெகுநேரம்விளையாட (சீறி)

(அல்லியரசாணி) பவளசேனை பார்த்தனையா இந்த நாகங்கள் இவனுடன் விளையாடிக்கொண்டிருப்பதை, இதோ இவைகளை என் கை சலிக்க அடித்துத் துரத்த ஓடிவிட்டதே இனியென்னசெய்வோம்.

(பவளசேனை) அம்மணி இந்த பண்டாரத்தின் மகிமையை நம்மாலுரைக்கமுடியாது. ஆகிலும் நீ பிறக்கும்படியாக தபஞ்செய்த ஆனை காட்டிலிருக்கின்றது அதையழைத்துக்கொண்டுவந்து இவரைக்கொல்லும்படியாகச்செய்யவேணுமம்மா.

(அல்லியரசாணி) தோழிகளே யான் பிறக்கும்படியாகத் தபஞ்செய்த எங்களையமார் பட்டத்துயானை காட்டிலிருக்கின்றது. அதை அழைத்துவாருங்கள்.

(தோழிகள்) அப்படியே அழைத்து வருகிறோமம்மா.

தோழிகள் மதயானையை அழைத்துக்கொண்டுவருவதும்,

அல்லியரசாணி அருச்சுனனைக்கொல்லும்படியாக சொல்வதும்.

விருத்தம்.

இன்பமாய்ப்பெண்களெல்லாம் இருண்டதோர்வனத்திற்சென்று
வன்மைசேர்யானைதன்னை வகையுடனழைத்துவந்து
அன்பாகதேங்காய்வெல்லம் அரிசியுமுண்ணச்செய்து
பன்முறையெனையிகழ்ந்த பாவியைக்கொல்லென்றாளே

(வ-ம்) தோழிப்பெண்கள் காட்டிற்சென்று மதயானையை அழைத்துக்கொண்டு வந்தபிறகு அல்லியரசாணி மனமகிழ்ந்து அந்த யானைக்குப் பசிதணியும்படியாக தேங்காய், வெல்லம், பச்சரிசிமுதலாகியதும் வைத்து புசிக்கச்செய்தபிறகு இந்தப்பண்டாரக்கிழவனைக்கொல்லுவாயென்றுரைத்தவுடனே நல்லதென்றுசம்மதித்துவந்துஉற்றுப்பார்த்து இவர்தான் அர்ச்சுனனென்றுமதித்து நமது அருந்தவப்புத்திரியாகிய அல்லியரசாணியைக் கலியாணஞ் செய்துக்கொள்ளவந்த நமது மருமகனென்று ஆசையோடு வரும்விதங்காண்க.

மதயானை அருச்சுனனைத்தூக்கிக்கொண்டு விளையாடுகிற - தரு

இ-ம்-கோட்டு-ஆதிதாளம்.

பல்லவி.

மதயானை மனமகிழ இதமுடன்பார்த்தன் றனைநோக்கி

அநுபல்லவி.

முதகினில் மச்ச ரேகையுறுந் துதிபெறும் நாவில்வீணையிந்த்ர
சுதனிவரே யெனமகிழ்மன் மதனிவரேயென் றுசித்து (மத)

சரணங்கள்.

தும்பிக்கையாலே தூக்கியதின் வம்பணுகாபுஜமீதேற்றி
அம்புவியோர்கண் டகமகிழ இன்புடனேகூத் தாடிபுகழ்
கம்பமத மாயானை களிகூர்ந் தகமகிழ்ந் தோங்கிடவே (மத)

மருமகனே திருவுருவே மாறுவே ஷங்கொண் டேன்வந்திர்
பருவ...ளங்கொழு லலலிதையகீ திருமணம் புரியவே யுத்தனுக்குத்
தருவோமே ...ருமையுடன் வருவீ ரென்று வந்தமுடன் (மத)

அல்லியரசாணி யானையை அடித்துத்துரத்துகிற - விருத்தம்.

அன்புடன்யானையந்த அருச்சுனன்றன்னைத்தூக்கி
இன்புடன்கமகிழ்ந்து இனிமையோடாடக்கண்டு
வன்மையால்பிரம்பெடுத்தே யடித்திடவுங்களுக்கு
நன்மணமாகும்போது நான்வரேனென்றேகிற்றே

(வ-ம்) கேளுங்கள்யா சபையோர்களே மதயானை அருச்சுனனைக் கொல்லாமல் தனது தும்பிக்கையினால் தூக்கிக்கொண்டு விளையாடுவதைக்கண்ட அல்லியரசாணி கோபாவேசங்கொண்டு தன்கையிலுள்ள சவுக்கினால் ஆனையையடித்துதுரத்தவே இனியுங்கள்கலியாணத்திற்கு யான் வரமாட்டேனென்றுசொல்லி காட்டுக்குப்போய்விட்டது.

பொது-விருத்தம்.

என்னமோபவளசேனை என்பாயங்கட்டிக்கொள்ள
இன்னமிப்பாவிசாகா திருக்கிறேனென்னசெய்வேன்
பன்னுவாயென்றுரைக்க பாங்கியர்சுனனைக்கண்டு
வன்மைசேர்சுவாமிநீங்கள் வந்தகாரணஞ்சொல்லென்றாள்.

(வ-ம்) கேளுங்கள்யா சபையோர்களே அல்லியரசாணி பவளசேனையைப்பார்த்து இவனைக் கொல்லும்படியாக வந்தசர்ப்பங்களும்;



யானையும் இவனுடன் விளையாடிக்கொண்டிருந்ததையும் பார்த்தனையா இதென்னவிபரீதமோ இந்தப்பண்டாரக்கிழவனை யென்னசெய்யலாமென்று மனவியாகூலத்துடனே கேட்கும்போது பவளசேனை ஆலோசித்து அம்மணி நீர் விசனப்படவேண்டாமென்று தைரியம் புகன்று அர்ச்சுனசுவாமியாரைப்பணிந்து நமஸ்காரஞ்செய்து சுவாமி நீர் எவ்விடமிருந்து யாது காரணமாக இங்குவந்தீரென்று கேட்கும்போது அருச்சுனன் சொல்லும்விதங்காண்க.

அருச்சுனன்சொல் - தரு.

இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்த...பத்தையான்—வரைகுவேனுங்கள்முன்
மனமகிழ்ந்துகேளாய் (வந்த)

அநுபல்லவி.

முந்திமல்லிகார்ச்சுன மிருந்திவ்வுழியாத்திரையாய்
சந்தோஷமாய்த்தூங்க பத்திரையுமேக (வந்த)

சரணங்கள்.

ஆதாரமாங்கிருஷ்ண ஆற்றில்முழுகிப்பின்பு
அடைந்தபாபங்களை அகற்றியதன்பின்பு
கேதாரஞ்சரஸ்வதி ஸ்நானஞ்செய்தேபின்பு
கேட்டேன்மதுரைபல்லி கீர்த்திப்ரகாசவன்பு (வந்த)

தள்ளாதகிழவன்யான் தமோதிகளையாலே
தவித்துவந்தேன்வஸ்திர தானமளித்தாலே
உள்ளநாள்வரையிலும் உங்கள்தருமத்தாலே
உற்றவென்பழஞ்சோளி தைத்துக்கொள்வேனன்பாலே (வந்த)

(வ-ம்) அம்மா யான் மல்லிகார்ச்சுனபுரத்திலிருந்து அநேகதீர்த்தயாத்திரைகள் செய்துக்கொண்டு இந்த மதுரைக்குவந்தேன். இதோ பார்த்தீரா இது எங்கள் பாட்டனாருடைய ஜோல்னாபை இதுபழையகந்தையானபடியால்கிழிந்துவிட்டது ஆகையால் அல்லியரசாணி ஒரு முழவஸ்திரந் தானங்கொடுத்தால் யான் வாங்கிக்கொண்டு போகின்றேனம்மா.

பவளசேனை அல்லியரசாணிக்குச்சொல் - விருத்தம்.

மெச்சிடுங்கீர்த்திபெற்ற மேன்மைசேரல்லியம்மா
இச்சகந்துயர்ந்தோர் இல்புடன் செய்துவந்த
உச்சிதசுவாமியார்க்கு ஒருமுழவஸ்திரந்தான்
இச்சமயந்தானிலே இவிடம்விட்டகலுவாராம்

(வ-ம்) அம்மணி அந்த சுவாமியார் யாசகம் வாங்கும்படியான சோணிப்பைகிழிந்துவிட்டதாம். அதற்காக ஏதேனும் பழையபுடவையில் ஒருமுழந்துணிகிழித்துக்கொடுத்தால் வாங்கிக்கொண்டு போவேனென்று சொல்லுகிறாரம்மணி.

அல்லியரசாணி சொல் - விருத்தம்.

இப்படிபிச்சைபெற்ற இவ்வுலகத்தோருக்கு
ஒப்புமோபவளசேனை யோசித்துப்பாராமல்
தப்படிசாமியார்க்குத் தந்திடும்புடவையென்று
[illegible]யாகிலுஞ்சான் எழுந்தவன்போகவேண்டும்

(வ-ம்) பவளசேனை என்னவார்த்தை புகன்றாய்? சபாஷ்! வெகு ஆச்சரியமாயிருக்கின்றதே! காமக்குரோத லோபமோக மதமாற்சரியங்களையகற்றி, பொய்கொலைகளவு கட்காமமுதலாகிய பஞ்சமகாபாதகங்களையகற்றி இல்லற மார்க்கந்தனைவிடுத்து துறவற மார்க்கத்தைப் பிடித்து அஞ்ஞானவிருளைத்தாண்டி மெய்ஞ்ஞானதீபவொளியின் பிரகாசத்தையடைந்த பிரமஞானிகளின் மார்க்கத்தையடைந்தவன் இவனல்ல இவன் யாரோ பொய்வேஷமணிந்து வந்தவனானதால் இப்படி பெண்களுடையவஸ்திரத்தை தானங்கொடுக்கும்படிகேட்கிறான் ஆனதால் ஒரு பச்[illegible]ட்டசேலை யெடுத்துக்கொடுக்க தாமதிக்கிறீர்கள்.

(பவளசேனை) அப்படியே சேலையைக்கொடுத்துத் துரத்திவிடுகிறேனம்மணி:—சுவாமி இதோ பார்த்தீரா இது வெகுநேர்த்தியான புடவை வாங்கிக்கொண்டுபோவீராக.

(அருச்சுனன்) அம்மா இவ்விதமானவஸ்திரங்களெனக்கு அநேகங்கிடைக்கும் ஆதலின் இது எனக்கு வேண்டியதில்லை அல்லியரசாணியின்புடவையில்கொஞ்சங்கிழித்து ஒரேமனதாகயிருந்து எனக்குவஸ்திரதானஞ்செய்தால் யான் விபூதியையெடுத்து நெற்றியிலணிந்து ஆசீர்வாதஞ்செய்துவிட்டுப்போவேனம்மணி.



(பவளசேனை) எங்களரசியே காசிப்பிராமணர் சேவைகிடைப்பதோ மிகவும் அரிது. ஆதலின் தமது அதிர்ஷ்டானுகூலத்தால் இங்கு வந்தனர் ஆகையால் ஒருமுழவஸ்திரம் உன்கையால் தானஞ்செய்து சேவித்துக்கொள்ளுமம்மா சகலபீடையும் நிவர்த்தியாகும்.

அருச்சுனனுக்கு அல்லியரசாணி வஸ்திரதானஞ்செய்கிற-விருத்தம்

அணிந்திடும்வஸ்திரத்தை அன்புடன்கிழித்தவள்தான்
தணித்திவனாந்தரத்தை தானஞ்செய்தவர்பாதத்தை
பணிந்திடமுகந்திலன்பாய் பக்ஷமாய்த்திருநீறிட்டு
பணிபெண்களைத்தப்போதே மாயமாய்போகிறாரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பவளசேனையின் சொற்படி அ[illegible]சுவாமியாருக்கு அல்லியரசாணி வஸ்திரதானஞ்செய்து [illegible] திருநெற்றியில் விபூதியணிந்து மங்கிலிஸ்திரீயாக புத்திரபாக்கிய[illegible]தாயி சஞ்சீவியாய் வாழக்கடவாயென்று ஆசிர்வதித்தபுடவை[illegible] வஸ்திரத்தையெடுத்துக்கொண்டு கிருஷ்ணபகவானிடம்வந்து நடந்த[illegible]திகளையெல்லாஞ்சொல்லி எவ்விதமாகிலும் அந்த மாதரசியை எனக்குக்கலியாணஞ்செய்துவைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டிருக்கிறான்.

பொது-வசனம்.

கேளுங்களையா சபையோர்களே வஸ்திரதானம்வாங்கிய பண்டாரக் கிழவன்சொல்லிய வார்த்தையைக்கேட்ட அல்லியரசாணி கோபாவேசங்கொண்டு தோழிகளை அந்தக்கிழவனைத்தேடிப்பிடித்துக்கொண்டுவாருங்கள் அவனை இந்தவாயுகத்திலே இரண்டுதுண்டாகவெட்டிப்போடுகிறேனென்றுரைக்க அவர்கள் எங்கெங்கும் தேடிப்பார்த்து அகப்படாமையால் அம்மணி அந்த மஹான[illegible]ரானவர் சந்திரசூரியரோ, இந்திராதிதேவரோ, சொக்கலிங்[illegible] இவ்வண்ணமாக வந்துநமக்கு தரிசனந்தந்தாரம்மாவென்றுசொ[illegible]விட்டார்கள், இனி நடக்கும்விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி பிடாரனைப்போல் வேஷமணிந்து
அருச்சுனனை சர்ப்பரூபமாகச்செய்துக்
கொண்டு வருகிற - தரு.

இராகம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

ஆயர்பிடாரக—அருச்சுனன்பாம்பாக
அன்பாய்வேஷஞ்செய்தாரே (ஆயர்)

அநுபல்லவி.

மாபவர்னப்பாம்பென — ர்ரிலம்புகழிந்த்ர
சேயன்விஜயனேடு — வாயன்பிடாரனென்ற (ஆயர்)

சரணங்கள்.

பழுத்தமிர்த்தாப்பியம் போலப்பங்கயக்கண்ணன்
பாம்புப்பிடார — ஞக—செந்நரசங்களை
கழுத்திலுர்தோளிலும் இழுத்துப்போட்டுக்கொண்டு
கையில்பெட்டியு — மாக

அழுத்தருணவர்ச்சுன — அன்புள்ளபாம்பை
செழித்தபெட்டிக்குளிட்டு — செந்நாகத்தாழ
வழுத்துங்கட்டிவிரியன் — மண்ணுளிப்பா
கொழுத்தவிஷமீதென்னக் — கோதித்துவ (ஆயர்)

காடுசெடிகளுந் தாண்டிவேகமுடன்
காசிலிதல் — வந்து—உல்லாருக்க
பாடும்மகடியூதி பலவிதபாம்புகள்
படத்தைபெடுத்து முந்தி

ஆடுபாம்பேயென் — றதட்டியேகூற
நீடும்புகழ்விஜய — திருபனும்வீர
நாடும்பராக்ரம — நவிலொணுதிர
மோடிநடனம்புரிக் — காடும்ஜிவாதார (ஆயர்)

பொது-விருத்தம்.

ஆயனும்பாம்புபெட்டி யன்புடனெடுத்துக்கேக
சேயிழையார்க — ள் செழிப்புடன்தலையிற்றுங்கி
போயதைப்பார்ப்போமென்ன பொற்கொடிமாதரெல்லாம்
ஞாயமாய்க்காண்போமென்று நம்பியேவருகின்றாரே.

(பெண்கள்) ஐயா பிடாரனே அந்த பாம்புகளை ஆடச்செய்வாய்.

(கிருஷ்ணமூர்த்தி) அம்மா இந்த பாம்புகளுக்கு ஐந்தாறுநாளாக ஆகாரமில்லாமல் பசியோடிருக்கின்றபடியால் ஆடாதம்மா.

(பெண்கள்) அப்படியானல் கொஞ்சம் பால்வார்க்கிறோம் குடிக்கச்செய்வீரையா.

(கிருஷ்ணமூர்த்தி) அம்மா காற்புரமும் திரைகட்டி பாற்குடங்களை வைப்பீராகில் குடிக்குமேயல்லாமல் ஒருவர்கண்பார்க்கக்குடியாது.



59

(பெண்கள்) இதோ பாற்குடங்களையும் எதிரில்வைத்து நாற்புரத்திலும் திரைகட்டினேம் குடிக்கச்செய்வீரையா.

(கிருஷ்ணமூர்த்தி) அம்மா பாம்புபெட்டியைத் திறக்கிறேன் தூரமாயிருந்து பாருங்கள்.

(பெண்கள்) நல்லதையா.

(கிருஷ்ணமூர்த்தி) அருச்சுனு வயறு நிறைய சாப்பிடவாயப்பா.

(அருச்சுனன்) அப்படியே எல்லாப்பாலையும் குடித்துவிடுகிறேன் சுவாமி.

(கிருஷ்ணமூர்த்தி) அம்மா பாம்புபாலருந்தி, பசியாறிவிட்டது ... நீங்கள் வந்துபாருங்களம்மா.

(பெண்கள்) ஐயோ பாலெல்லாங்குடித்துவிட்டதே.

அருச்சுனன் பாம்பு பாலெல்லாங் குடித்துவிட்டதைக்கண்டு பெண்கள் அபாப்பட்டிற - தரு.

இ-மேசவசோஸ்-ஆதிதாளம்.

என்னசெய்வோமேதுசெய்வோ — மெப்படிமனந்துணிவோம்
பெண்களே — தோழிப் — பெண்களே
அன்னிதப்பிடாரனிவன் — நன்றாயமாய்காத்தைசொல்லி
பெண்களே — தோழிப் — பெண்களே
பாம்புக்குப்பால்வார்த்திராகில் — படமெடுத்தாடுமென்றதால்
பெண்களே — தோழிப் — பெண்களே
தீப்பனுமாதென்றெண்ணித் — திரமுடன்பாற்குடத்தை
பெண்களே — தோழிப் — பெண்களே
திரைக்குள்வைத்தபாற்குடத்தை — திரும்பவுங்கண்காணாமல்
பெண்களே — தோழிப் — பெண்களே
தரையில்கொஞ்சமும்விடாமல் — தாராளமாயுண்டதுவே
பெண்களே — தோழிப் — பெண்களே
பாம்புவயிறென்னசாலோ — அறுகுளமோகடலோ
பெண்களே — தோழிப் — பெண்களே
நாங்கலந்திடவாயிரம் — பானைப்பாலுமுண்டதுவே
பெண்களே — தோழிப் — பெண்களே

சொல்லும்பகுதிப்பாலெல்லாஞ் சோராமற்குடித்ததுவே
பெண்களே தோழிப் பெண்களே
அல்லியரசாணிமுன்சென் றற்றனையுரைத்திடுவோம்
பெண்களே தோழிப் பெண்களே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அருச்சுனசர்ப்பமானது ஆயிரம்பானைப் பாலையுங் குடிததுவிட்டதைக்கண்ட பெண்களெல்லாம் குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுக்கொண்டுபோய் அல்லியரசாணிக்குத்தெரிவிக்கும் விதங்காண்க.

பெண்கள் அல்லியரசாணிக்குச்சொல்

கலிவிருத்தம்.

அல்லியம்மணி யரவுப்பிடாரனும்
நல்லரவிற்குப்பால் வையெனப்பாற்குடம்
உல்லாசமாயதின் முன்னாலேவைத்திட
எல்லாமுண்டேப்ப மிட்டதேன்செய்குவோம்

(வ-ம்) அம்மணி உமக்குப்பகுதிகட்டும்படியாக நாங்கள் ஆயிரம் பாற்குடங்களையும் எடுத்துக்கொண்டு வரும்வழியில் பாம்புபிடாரன் வந்து சர்ப்பங்கள்பசிதணிய கொஞ்சம்பால்வார்க்க வேண்டுமென்றதால் ஆயிரம்பானையையும் எதிரில்வைத்தவுடனே அந்தசர்ப்பமானது பாலெல்லாங்குடித்துவிட்டதம்மா.

(அல்லியரசாணி) ஆ! இதென்ன ஆச்சர்யம் ஆயிரம்குடத்திலுள்ள பாலையும் பாம்புகுடித்துவிட்டதா ?

(பெண்கள்) ஆம் அம்மணி.

(அல்லியரசாணி) சரி! அப்படியானால் அந்த பாம்புபிடாரனை வரவழைப்பீர்கள்.

(பெண்கள்) அப்படியே அழைத்துவருகிறோமம்மா:—பாம்புபிடாரா எங்கள் அரசி உன்னை அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தனர் சீக்கிரம்வருவாய்.

(கிருஷ்ணமூர்த்தி) இதோ வருகிறேனம்மா.

(பெண்கள்) அம்மணி இதோவந்தான் விசாரித்துக்கொள்ளுவீர்.

(அல்லியரசாணி) இம்வா ஆயிரம் குடத்திலுள்ளபாலையும் எந்தப் பாம்பு குடித்துவிட்டது ?



(கிருஷ்ணமூர்த்தி) இந்தப் பாம்புதான் குடித்துவிட்டதம்மா.

(அல்லியரசாணி) ஆ! என்ன அழகாயிருக்கின்றது பார்த்தனையா நீவர் இதை ஆடச்செய்வாய்.

(கிருஷ்ணமூர்த்தி) நல்லது தாயே.

கிருஷ்ணபிடாரன் அருச்சுனபாம்பை
ஆடச்செய்கிற - தரு.

பாம்பாட்டி ராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆடுபாம்பேகூத் தாடுபாம்பே—நப்ப
ஆயியெனுங்கொடுப்பா ளாடுபாம்பே

நாடெல்லாஞ்சுற்றிசுற்றி யலைந்தோமே—யிந்த
நாயகியரண்மனையில் வந்தோமே

பாடெல்லாம்பட்டுகெட்டு நொந்தோமே—யுந்தன்
படத்தையெடுத்துக்கொண் டாடுபாம்பே

பெண்களைக்கண்டால் மயங்காதே—இந்தப்
பேதமைபுத்தியால் இயங்காதே

வன்மையாமோகத்தா லேங்காதே—மெத்த
வருத்தமில்லாமலே யாடுபாம்பே

(வ-ம்) ஆ ஹா ஹா பாம்பே நமது இராஜாத்தியம்மாசந்தோஷிக்கும்படிவிளையாடி அம்மா கொடுக்கும் வெகுமதியைவாங்கிக்கொண்டு வருவாய்.

அருச்சுனசர்ப்பம் அல்லியரசாணிமுன்பாக
விளையாடுகிற - தரு.

இ-ம்-நானக்ஷா.

ஆத்திரமாயல்லி யரசாணிமுன்பு
அன்பாய்விளை யாடி—நாண்போர்
ஆதிசயிக்க நாடி

சாஸ்திரமுணர்ந்த தரணியோரமதிக்கும்
சர்ப்பமெனவே யாடி—வெகு

சந்தோஷம் பாடி—கஷ்டம்
சற்றுமில்லா தோடி (ஆத்திரமா)

மார்பால்கீர்ந்து மண்மேற்புரண்டு
மனதிடங்களி கூர்ந்து—காண்போர்
மதித்திடவினை தீர்ந்து

கார்திறமைபர வென்றுலகோர்முன்
கதலியெனவே சேர்ந்து—மாந்தர்
களிக்குமன மோர்ந்து—வாயால்
கனிமுத்தந் தந்து (ஆத்திரமா)

அருச்சுனசர்ப்பத்தை விற்கிரயஞ்செய்யும்படி
அல்லியரசாணி கிருஷ்ணமூர்த்திக்குச் சொல்

விருத்தம்.

ஐயனேபிடாரயிந்த அழகுள்ளசர்ப்பந்தன்னை
துய்யனேயெனக்குத்தந்தால் திரவியமுனக்களிப்பேன்
பையவேயதனைக்கொண்டு பாக்யவானுவாயிந்த
வையமீதெவருங்காண வாழ்ந்துகொண்டிருப்பாயையா

(வ-ம்) ஐயாபிடாரனே இந்த சர்பத்தை எனக்குக்கொடுப்பாயாகில் யானுனக்கு பதினாயிரம்வராகன் தருகிறேன்.

(கிருஷ்ணமூர்த்தி) அம்மணி இந்தசர்ப்பம் என்னுடையதல்ல என்னுடைய தங்கை அருமையாக வளர்த்துக்கொண்டிருந்ததை யான் விற்கிரயஞ்செய்தால் கோபித்துக்கொண்டா லென்னசெய்வேன் ஆதலால் யாதொருபோதுங் கொடுக்கமாட்டேன் தாயே.

(அல்லியரசாணி) பிடாரனே யாருடையதாயிருந்தாலு மென்ன அதற்கு யான் கிரயந்தருகிறேன் அதைக்கொண்டுபோய் உங்களுடையவறுமையையகற்றி செல்வபொருளுடனே வாழ்ந்துக்கொண்டிருப்பீரையா.

(கிருஷ்ணமூர்த்தி) அம்மா இதை கொஞ்சநேரம் காணாதிருந்தால் என் தங்கை அன்னமுந்தியா ளப்படியிருக்க இதை விற்கிரயஞ்செய்துவிட்டால் [illegible] கொண்டால் என்னசெய்வேன்.

(அல்லியரசாணி) அப்படியானால் இன்றைக்குமாத்திரம் இருக்கட்டும் நாளையதினம்வந்து வாங்கிக்கொண்டு செல்வீரையா.



(கிருஷ்ணமூர்த்தி) அம்மணி அதற்குப் பசியினை யறிந்து பாலும், பழமும் வையாதிருந்தால் இளைத்துப்போகுமே என்றுவிசனப்படுகின்றேன் தாயே.

(அல்லியரசாணி) அப்படி இளைத்துப்போகுமாகில் அதற்குச் சரியாய் தங்கத்தைவைத்து நிறுத்தி எடைகுறையாமல் தருகிறேனையா.

(கிருஷ்ணமூர்த்தி) சரி அப்படியானால் நிறைவைத்து நிறுத்து பார்ப்பீரம்மா,

(அல்லியரசாணி) பவளசேனை தராசுகொண்டுவருவாய்.

(பவளசேனை) இதோ கொண்டுவந்தேனம்மா.

(அல்லியரசாணி) பிடாரக்கிழவா இதோபார்த்துனையா சர்ப்பத்தின் நிறையளவை.

(கிருஷ்ணமூர்த்தி) சரி நாளையதினம் யான்வருகிறேனம்மா.

(அல்லியரசாணி) நல்லது சென்றுவருவாய்.

அல்லியரசாணி தோழிகளுக்குச்சொல்.

விருத்தம்.

என்னிட்ட தோழிமாரே எடுத்துவாசொர்ணக்கிண்ணி
உன்னிதமாய்குறிக்கும் உணவுசர்க்கரைகறிகண்டும்
பன்முறைபாம்புக்கிட்டு பஞ்சணையலங்கரித்து
வன்மையாயெனக்குச்சேதி வரைகுவீர் துரிதமாக

(வ-ம்) தோழிகளே நவரத்தினகசிதமாகிய சொர்ணக்கிண்ணியில் சுகின்பாலும் பழதினுசுகளும் சர்க்கரைமுதலாகியஇனிமைபொருள்ய உணவுகளும்வைத்து பாம்புக்கு பசியாறச்செய்து எனது பஞ்சணையும் அலங்காரஞ்செய்வீர்கள்.

(தோழிகள்) அப்படியே செய்கிறோமம்மா.

தோழிகள் பஞ்சணையை சிங்காரிக்கும் - தரு

இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

செஞ்சொல்மொழிதோழிகள்—அல்லியரசாணிக்கு
பஞ்சணைஜோடித்தார் (செம்பை)

அநுபல்லவி.

கொஞ்சுங்கிளிமொழி நஞ்சிதமெனப்புகழ்
தஞ்சமென்றோர்க்கருள் தயாளகுணமகிழ் (செஞ்)

சரணங்கள்.

மெத்தையலங்கரித்து மேலேமல்லிகைமுல்லை
மென்மையுடன் சொரிந்து—கட்டிலைச்சுற்றி
சித்திரபொம்மைகளணிந்துப்பிரகாசமாய்
சிங்காரமெனத் தெரிந்து
மங்கையின்நித்திரை மாட்சிமைக்கென்று
தங்கத்தலையணை தானிதோவென்று
பொங்கும்புகழுள போர்வையுமீதென்று
செங்கையாற்றோழிகள் சிங்காரித்தோரமென்று (செஞ்)

அல்லியரசாணி பஞ்சணையில் நித்திரைசெய்கிற
விருத்தம்.

அஞ்சுகபெண்களெல்லாம் அலங்காரஞ்செய்தபின்பு
மிஞ்சியேயடக்குசென்று மென்மையாயழுநருக்கி
கொஞ்சியேசர்ப்பந்தன்னை கூசாமலெடுத்துவந்து
பஞ்சணைமீதிலேதை படுத்துநித்திரைசெய்தாளே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணி அநகளவ பதா த்தத்துடனே அன்னம்புசித்து சர்ப்பத்திற்கும்பசிதணிய பால் பழமுதலாகியதும்வைத்து தோழிகளால் அலங்காரஞ்செய்திருக்கும் சொர்னக்கட்டிலின்மீதுவந்து சர்ப்பத்துடன் சற்றுநேரம் விளையாடிக் கொண்டிருந்து நித்திரைசெய்துக்கொண்டிருந்தாள்.

அல்லியரசாணி நித்திரைதெளிந்து படுக்கையைவிட்டு
எழுந்துவருகிற - விருத்தம்.

வன்மையாயல்லியம்மா மலரணைமஞ்சமீது
இன்புடன்சயனித்தன்பாய் எழுந்துமேலதம்பின்பு
அன்புடனபவளசேனை அம்மணியுன்றேகம்
என்னமாயிருக்குதம்மா எங்களுக்குரைப்பாயென்றாள்.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணி நித்திரை தெளிந்து எழுந்தவுடனேபோது பவளசேனைப்பார்த்து அம்மணி இன் றையதினம் உமக்குதேக அசௌக்கியமோவென்று கேட்கும்விதங் காண்க.



பவளசேனைசொல் - தரு
இ-ம்-ஜம்பை-திரிபுடைதாளம்.
கண்ணிகள்.

அல்லியம்மாநீயணிந்த ஆபரணமிதுகளெல்லாம்
அலங்கோலமாயிருக்கும் அதிசயமேன்சொல்வாய்
உன்னுடையமயிரவிழ்ந்து உதடுசிவப்பானதென்ன
உத்தமியேயெங்களிடம் உரைத்தருள்வாயம்மா
நெற்றியிலேநீயணிந்த நீலவர்ணப்பொட்டதுவும்
நேரிழையேகலைந்ததென்ன நேர்மையுடன்புகல்வாய்
காம்பரிந்தஜெங்கலப்பூ கசங்கிடவுமுந்தனிரு
கன்னிவிட்டமைக்கரைய காரணமேனம்மா

(வ-ம்) அம்மணி இன்றைக்கென்ன இவ்விதமாகிய அலங்கோலமா யிருக்கின்றீர்.

அல்லியரசாணி சொல் - விருத்தம்

அன்புள்ளதோழியிக்க அறிவுள்ளசர்ப்பம்போல
கன்மனமுடையதிந்த நாட்டினிலெங்குமில்லை
இன்பமாயிதற்குமெத்த இனிமையாம்பாலும்வார்த்து
அன்புடனெடுத்துக்கொண்டு அருகினில்வருவாயம்மா

(வ-ம்) பவளசேனை எந்ததேசத்திலும் இவ்விதமாகியநல்லசர்ப்பம் கிடையாது இதுமிகவும்அறிவுடையதம்மா இது மனிதரிடத்திலவிளை யாடிக்கொண்டிருக்கும் பழக்கமுடையதாகையால் என்னிடத்திலும் விளையாடிக்கொண்டிருக்கின்றது ஆகையால் இதற்கு பாலும்பழமும் நெய் சர்க்கரைமுதலாகிய இனிமையுள்ள உணவுகளைவைத்துபுசிக்கச் செய்து கொண்டுவாருங்கள்.

(பவளசேனை) அம்மணி உமது சொற்படியே பாம்புக்குப் பாலும் பழமும்வைத்து புசிக்கச்செய்து எடுத்துக்கொண்டுவந்தோமம்மா.

கொஞ்சுமொழிநேத்திசொல் - விருத்தம்.

அம்மணிபாம்பையிங்கே அறியாமல்விட்டுவிட்டோமே
கொம்பனேயெந்தன் தங்கை கோபித்துக்கண்சிவந்து
செம்மையாயன்னமுன்னே சேர்க்காற்போல்மனைச்சார்ந்து
வம்புசெய்தாள்பாம்பை வரவழைத்திடுவாயம்மா

(வ-ம்) அம்மணி யான் சர்ப்பத்தை உம்மிடத்தில் கொடுத்துவிட்டு வந்தேனென்று என்னை தன்னைக் என்மீது கோபித்துக்கொண்டு அன்னம் புசியாதிருக்கின்றனள் ஆகையால் சர்ப்பத்தைக்கொண்டுவந்து கொடுப்பாயம்மா.

(அல்லியரசாணி) பவளசேனை அந்தசர்ப்பத்தை எடுத்துக்கொண்டு வருவாய்.

(பவளசேனை) இதோ கொண்டுவந்தேனம்மா.

(கிருஷ்ணமூர்த்தி) அம்மா இதோபார்த்தீர்களா சர்ப்பம் இறந்திருக்கிறது.

(அல்லியரசாணி) பவளசேனை தராசுகொண்டுவருவாய் நிறுத்துப் பார்ப்போம்.

(பவளசேனை) இதோ கொண்டுவந்தேனம்மா.

அல்லியரசாணி பாம்பையொருதட்டிலும்,
இரத்தினங்களையொருதட்டிலும்வைத்துநிறுத்தி
கிருஷ்ணமூர்த்திக்குக் கொடுத்தனுப்புகிற-விருத்தம்.

அல்லியுடன்றிராசுதன்னில் அறிவுள்ள சர்ப்பந்தன்னை
இன்பமாய்நிறுத்தபோது எடைகுறைந்ததற்குசொர்ணம்
கன்னமாகவைத்து காரணங்கையிற்றந்து
உன்மனமகிழ்கீயும் உலகினிற்பிழைப்பாயென்றாள்.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பாம்பைதிராசில் வைத்து நிறுத்திப்பார்த்து குறைந்த எடைக்குப்பிலாக சொர்ணங்களைவைத்து கிருஷ்ணமூர்த்திக்குக் கொடுத்தனுப்பியபிறகு நடக்கும்விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி மறுபடியும் மிருகங்களைகிருஷ்டித்தல்
விருத்தம்.

கன்னனேயல்லிதன்னைக் கலியாணஞ்செய்வீராகில்
புண்ணியமுனக்குண்டென்று புகழ்ந்துமேவிஜயனோடு
எண்ணில்லாமிருகந்தன்னை ஏவியுங்காட்டிக்குள்ளே
குண்ணியேபமனைத்தின்னைந்து குடிகள்வாழ்குன்றுதே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே சர்ப்பமாகவும், பிடாரனாகவுமிருந்த கிருஷ்ணார்ச்சுனர்களிருவரும் தங்கள் தங்கள் சுயரூபத்துடனேயிருக்கையில் அருச்சுனன கிருஷ்ணமூர்த்தியை நமஸ்காரஞ்செய்து சுவாமி அந்த அல்லியரசாணியை எனக்கு விவாகஞ்செய்து



உமதுசேத்திரானந்தமாய்ப்பார்த்தருளும் பக்தரக்ஷகா என்றுவேண்டிக்கொள்ளவே மனமகிழ்ந்து மறுபடியும் மிருகங்களைகிருஷ்டிசெய்ய அவைகள் வீராவேசத்துடனேசென்று குடிகளின்பயிர்களை யழிக்கும்போது அவர்களெல்லோரும் குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுக்கொண்டுவந்து அல்லியரசாணிக்குத்தெரிவிக்கும் விதங்காண்க

அல்லியரசாணிமுன்பு குடிகள்வந்துமுறையிடுதல் — தரு
இ-ம்-கலோரஸ்-ஆதிதாளம்.
கண்ணிகள்.

அன்னநடையல்லியம்மா ஐயையோயாமென்னசெய்வோம்
அம்மணி அல்லி யம்மணி

எங்களைப்பரிதவித்து ஏனமும்மா றுங்கடம்பை
அம்மணி அல்லி யம்மணி

செங்கரும்புவிசாடி சிதிவருதென்னசெய்வோம்
அம்மணி அல்லி யம்மணி

தங்கவொட்டாமல்களின் தாவிகடிக்கவருதே
அம்மணி அல்லி யம்மணி

காட்டுமிருகங்களெல்லாம் நாட்டுக்குள்வந்தெல்லோரையும்
அம்மணி அல்லி யம்மணி

ஓட்டுதெம்மதூரவிட்டு ஓடிவந்தோமுன்னெதிரே
அம்மணி அல்லி யம்மணி

(வ-ம்) அம்மணி கானகத்திலுள்ள மிருகங்கள்காட்டில்வந்து பயிர்களையழித்து எங்களையுந்துரத்திக் கொல்லவருகின்றதே என்னசெய்வோம்மா.

(அல்லியரசாணி) ஆஹா [illegible] தன்னாயிபரீதம் பத்துநாளைக்கு முன்னே யான் வேட்டையாடி மிருகங்களை அதஞ்செய்துவந்தேனே மறுபடியும் எவ்விதமாய்வந்தது

(பவளசேனை) அம்மணி முன்புஇறந்ததுபோக ஓடிவிட்டதெல்லாம் மறுபடியும் வந்தாற்போலிருக்கிறதம்மா.

(அல்லியரசாணி) சரி அப்படியானால் இப்போது ஒன்றையும்விடாமற்கொன்று குடிகளின் சஞ்சலத்தைத்தீர்ப்போம் எல்லோரும் ஆயுதபாணிகளாக புறப்படுவீர்கள்

(பவளசேனை) அப்படியே எல்லோரும்புறப்படுகிறோம்மா



அல்லியரசாணி வேட்டையாடுதல்.



மறுபடியும் அல்லியரசாணி மிருகவேட்டையாடுதல் - தரு.

இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வேகமுடனே வீரர்—காட்டினிற்சென்று
வேட்டையாடுவோம் வீரர் (வேக)

அநுபல்லவி.

சோகமிருகங்களை கொய்யுந்தனிமோக
சரகவதைத்துவூர்ச் சஞ்சலமொழித்தேக (வேக)

சரணங்கள்.

பார்த்தோபுலி நாணம்—சிறுத்தையுடன்
ப[illegible]கடம்பை வேணம்
பர[illegible]ராக்குடுக்கப் பராக்ரமாபோடு
சுர[illegible]க்களைகளால் கொல்வீர்துரிதமே (வேக

சிங்கக்கரடி யானை—ஆளியுஞ்சீறி
சிலிர்த்துப்பார்க்குதே நம்மை
உங்கள்சகபாணம் விடுத்ததைக்கொல்லும்
மங்கையேமாண்டது மிருகங்களெல்லாம் (வேக)

(அல்லியரசாணி) பவளசேனே நாம் வேட்டையாடி அநேகமிருகங்களை வதைத்தோம் இப்போது எனக்குதாகவிடாயதிகரித்து ஜலமரட்சியாயிருக்கின்றதே யென்செய்வேன்.

அல்லியரசாணி சாவரட்டியால்களைத்துவிழவும்

அருச்சுனன்காசிப்பிராமணன்போல்வந்து

தீர்த்தங்கொடுப்பது

விருத்தம்.

மின்னல்போலிலகுஞ்ஜோதி மெல்லியுங்கானகத்தில்
பன்னெறிவேட்டையாடி பதிதாகக்களையினாலே
கன்னியுங்களைத்துவிழக் கண்டதோர்காசிபார்ப்பான்
நன்னயதீர்த்தமன்னி நாவினில்வார்த்திட்டானே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணி காட்டில் வேட்டையாடி தண்ணீர்தாகத்தினால் ச[illegible]ரட்சியாய்களைத்தமையால்

அருச்சுனன் காசிப்பிராமணனைப்போல் நீர்த்தக்காவடியை தோளில் தூக்கிக்கொண்டு வருவதைக்கண்டு தோழிகளெல்லோரும் ஓடிவந்து சுவாமி எங்கள் அரசி தாகவிடாயால் களைத்திருக்கின்றமையால் கொஞ்சம் ஜலங்கொடுப்பீரென்று வேண்டிக்கொள்ளவே அருச்சுனன் மனமகிழ்ந்து அல்லியரசாணிக்கு தண்ணீர்கொடுத்ததைதெரிவித்து கிருஷ்ணமூர்த்தியிடத்தில்வந்து சொல்லும்விதங்காண்க.

அருச்சுனன்சொல் - தரு.

இ-ம்-இந்துஸ்தான் பரனக்ஷா.

ஆதிமூலரென்னை அல்லியரசாணி
அன்பாய்மணம் புரிய—வகை
அருள்வீரும தீய
கோதண்டகாமலர்ப் பாதந்தனைக்கும்பிட்டேன்
கோபால மயமே—அல்லி
கொம்பனையென் வசமே—யுமை
கொள்வதுமிச் சயமே (ஆதி)
காட்டின்மிருகங்களை வேட்டைவேட்டையாடி
களைத்தவல்லி யிருக்க—என்
கையால்ஜலங் கொடுக்க
வாட்டமில்லாமலே வல்லியுமெழுந்து
வருத்தமில்லா திருக்க—பாவை
வன்சாடு தாக்க—செய்
வாவென்மனம் களிக்க (ஆதி)

(வ-ம்) சுவாமி அல்லியரசாணி காட்டில் வேட்டையாடி நாவரட்சியடைந்தமையால் யான் ஜலங்கொடுத்தக்களைபாற்றினேன் இனி எவ்விதமாகிலும் எங்களிருவருக்கும் கலியாணஞ் செய்துவைப்பதையா சுவாமி பக்தரக்ஷகா.

(கிருஷ்ணமூர்த்தி) அருச்சுன சற்றுநிதானிப்பாய் ஆக்கப்பொருத்தது ஆறப்பொறுக்கலாகாதா? இன்னுங்கொஞ்சநேரத்திலியான் தண்ணீர்பந்தல்வைத்து அல்லியரசாணிமுதலானோரை இங்குவரவழைத்து திருமணஞ்செய்துவைக்கிறேன்.

(அருச்சுனன்) சுவாமி! அப்படியே உமது கிருபையினால் அல்லியரசாணி என்னைகலியாணஞ்செய்துகொண்டால் இந்த மாகில்முன்னவரையிலும் உமது பாதாரவிந்தத்தைமறவேன்.



அல்லியரசாணியும், பெண்சேனைகளும் தண்ணீர்ப்பந்தலுக்கு வருகிற - விருத்தம்.

செல்லியமிழுவனுந்தான் சேர்ந்தனைக்கிருஷ்ணன்பார்த்து
பல்லிகாக்கிழவன்போலப் பார்த்தவுசெய்துதானும்
மெல்லியபசுந்தண்ணீர்ப்பந்தல் மேன்மையாயமைத்திருக்க
அல்லியரசாணியவள் அன்புடன்கேட்டின்றுளே.

(வ-ம்) செருக்கினியா சபையோர்களே இவ்விதமாக அருச்சுனன் சொல் வார்த்தையைக்கேட்டு கிருஷ்ணமூர்த்தியானவர் அதிரூப தரிவுற்றனர் கிருஷ்ணம்மாளென்னும் தெய்வகன்னியைப்போ விருப்பத் தொண்ணுற்றெண்பது வயதுடைய கிழவியைப்போ செய்து காவகத்தில் தண்ணீர்ப்பந்தல் வைத்துக்கொண்டிருக் பாது அல்லியரசாணியும், தோழிகளும் தண்ணீர்ப்பந்தலுக்கு விசாரிக்கும் விதங்காண்க.

அல்லியரசாணி தண்ணீர்ப்பந்தல் யாருடையதென்று கேட்கும் - விருத்தம்.

...சொல்லியந்த மாயவர்முகத்தைப்பார்த்து
...ருகுகானிருப்ப எவர்வைத்தார்தண்ணீர்ப்பந்தல்
...நீருக்காதே சொல்லெனக்கென்னாக
...ஞானப்பூ கிருஷ்ணமூர்த்தி விளம்பினாரம்புத்தோகை.

(வ-ம்) செருக்கினிய சபையோர்களே அல்லியரசாணி பெண்சேனைகள் தண்ணீர்ப்பந்தலுக்குவந்து தாகந்தணிய நீருண்டியபின் கிழவியைப்போலிருக்கும் கிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து இது யாரால் நிருமிக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தல் நீங்கள்யார் எங்குவூர் என்றுகேட்கும்போது கிருஷ்ணம்மாள் சொல்லிக்கொண்டு இருக்குங்காண்க.

கிருஷ்ணம்மாள் அல்லியரசாணிக்குச்சொல் - தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

...ம்மே தோஷத் நீ—தண்ணீர்ப்பந்தல்
கட்டினேன் தயார்நீ (நம)

அநுபல்லவி.

முன்னாள்செய்பாவகை — வின்னுனொழிந்திட
பன்னூற்றுமக்க — ளுள்ளிவினன் செய்திட (கன்ம)

சரணங்கள்.

தெய்வப் பிரமணத்தி — அம்மாயானுக்
தெம்பாய்வாழுங் காலத்தில்
ஐயமென்னுமாண்டிசன் — பாவியுமெனை
வைதவர்களே — யடித்துத்துரத்தின (கன்ம)

ஆதலர்தேகி கட்டு — போபோவென
அள்ளிப்பதரைவிட்டு
நீதியில்லாதோஷம் — வாழுற்றனுலே
கோதனுவாறிக் — குவலயத்தாளிலே (கன்ம)

(வ-ம்) அம்மணி யான் பூர்வஜென்மத்தில் தெய்வப்பிரமணத்தி யாயிருக்கும்காலையிலே ஆண்டிபண்டிதகி [illegible] ஐயமென்று வந்தவரை அடித்துத் துரத்தி, பாசுகம்வாங்கிப் புசிக்கும் ஏழைகளுக்குப்பதரையள்ளிப்போட்டும், அநியாயமாய் சாணக்கரைப் புற்குசோம்பலாய் கட்டிகட்டியாகதெளித்துமறுப்படியாக இன்னும் அநேகவித பாபங்களைச்செய்ய இவைகளெல்லாம் கண்டுபோற் குலிக் இருந்த ஒருநாள்சொக்கலிங்கேஸ்வரர் இந்திராதிதேவர்கள் [illegible] ரிஷிகள் யாதாகருடகாந்தர்வர்களுடனே உல்லாசமாய் [illegible] தெருவீதி வுக்கு வரும்போது எதிரில் யான்செய்தபாபமென்னும் பர்வதத்தைக் கண்டு கோபித்துஎன்னை பூமியில்பிறக்கும்படி சபித்தனர். அந்தபாபத் தினுல்வந்த சாபதோஷத்திர கண்ணீர்ப்பந்தல்வைத்து தருமஞ் செய் கிறேனம்மா.

(அல்லியரசாணி) இந்தக் கிழவன் யாரம்மா?

(கிருஷ்ணம்பாள்) இவர் எனது பணவாளர்.

(அல்லியரசாணி) அப்படியானுல் நீ எங்களைவெருகின்றீரா.

(கிருஷ்ணம்பாள்) அம்மணிஇந்தக்கிழவனைஎப்படிஆண்டியாய்விட்டு வருவேன்.

(அல்லியரசாணி) பணசேனே இந்தக் கிழவனை டோலியில் தூக்கிப் போட்டுகொண்டுவருவீர் வீட்டுக்குப்போவோம்.

(தோழிகள்) நல்லதம்மணி



அல்லியரசாணி பெண்சேனைகளுடனே
அரண்மனைக்குவருமிற-ராகுசீந்தரு.
இ-ராகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

அல்லியும் வந்தாளே — அவே வருகுதுகூடி யாவண்மனைகாடி (அல்)

அநுபல்லவி.

வல்லிகிருஷ்ணம்பாளும் — விஜயபார்ப்பாளும்
வெல்லிகின்சேனையும் — மேன்மையதாக (அல்)

சரணம்.

மிகுகம்ப்ஸ்ஞ்சாக — மிக்கவேட்டையாடி
விருதுக்கொடிகுடையும் — விளக்கவேயுகழ்ந்தாடி
விருத்தகிழவனக்கண்ணி — வெகுத்தோருங்கூடி
கருணுமலர்சமர்ப்பக் — களித்துமனதாத்தேடி

வாட்ட — மேதினி — வெனக்
காட்ட — விருதுக் — கொடிக்
குட்டப் — புகழுட — ஞர்
பாட்ட — மிலக்கிடவே

பருவக்கிருஷ்ணம்பாள் — பார்த்துமனம்வக்திட
பெருமைதனைமுறையே — பேசிப்புகழ்ந்திட
கிருபணுக்கிழவன் — தாவியணிக்திட
வருமினைபதியாமல் — வல்லியுமகிழ்ந்திட (அல்)

(அல்லியரசாணி) அம்மா தெய்வப்பிராமணத்தி நாமெல்லோரும் அரண்மனைக்கு வந்துவிட்டோம். இந்தக் கிழவனை ஜக்ரதையாக வாசம் பண்ணிருக்கச்செய்து சீமாத்திரம் எங்களைவெருவீரம்மா.

(கிருஷ்ணம்பா) அம்மணி இந்தக்கிழவன் யாதொருகுற்றமும்செய்ய வில்லையே இவரை இவ்விடத்தில்விட்டு வருவதற்கு எனக்கு மனம்வர வில்லை யாதுசெய்வேனம்மா.

(அல்லியரசாணி) சரி அப்படியானுல் அழைத்துக்கொண்டு வருவீரம்மா.

(கிருஷ்ணம்பாள்) அம்மா நாமெல்லோரும் இந்தக் கிழவனைத் தூக்கிக் கொண்டுபோவோம் வருவீரம்மா.

(தோழிகள்) நல்லதம்மா.

பொது-வசனம்.

கேளுங்களையா சபையோர்களே பெண்களெல்லோரும் இறவனைத் தாக்கிக்கொண்டுபோய் அரண்மனையில் இறக்கிவிட்டபிறகு நடக்கும் விதங்காண்க.

கிருஷ்ணம்பாள் அமுதுபடியரிசிமுதலானவைவாங்கி
சமையல்செய்து இறவனுந் தானும்புசித்தல்.

விருத்தம்.

அன்புடன்தோழிப்பெண்கள் அரிசிபருப்புநெய்யும்
இன்பமாய்க்கொடுக்கப்பெற்று இனிமையாய்கிருஷ்ணம்பாளும்
வன்மையாய்சமைத்தருந்தி வல்லியோயரசாணியிடத்து
அன்பம்போம்விரதத்தன்னை நடக்கவேண்டியதைசெப்பென்றாள்.

கேளுங்களையா சபையோர்களே தோழிகளால் கொடுக்கப்பட்ட அரிசி, பருப்பு, நெய் முதலிய பதார்த்தங்களையெல்லாம் கிருஷ்ணம்பாள் வாங்கிக்கொண்டுவந்து சமையல்செய்து இறவனுந்தானும் புசியாறப் புசித்தபிறகு கிருஷ்ணம்பாள் அல்லியரசாணியைப்பார்த்து அம்மணி யான் காளைபதினம் இலக்ஷுமிவிரதமிருக்கவேண்டும் ஆகலின் அதற்குரிய சாமான்களெல்லாம் சேகரிக்கும்படியாக கிருபைசெய்தருள வேண்டுமென்று கேட்க இனிநடக்கும் விதங்காண்க.

(அல்லியரசாணி) அவ்விரதத்திற்குஎன்னென்னசாமான்கள் வேண்டுமெ தெரிவிப்பாயம்மா.

(கிருஷ்ணம்பாள்) அம்மணி அரசாணிப்பாளை, பச்சரிசி, மஞ்சள், குங்குமம், கர்ப்பூரம், சாம்பிராணி, பால், பழம், நெய், சர்க்கரை, புடவை, அங்கவஸ்திரம், தேங்காய், புஷ்பம் முதலியவைகள் வேண்டியது தாயே.

(அல்லியரசாணி) பவளசேனை இந்த பிராமணஸ்திரீ கேட்பதெல்லாம் தருவாய்.

(பவளசேனை) அம்மணி உமது சொற்படியே யாவுந்தந்தோம்.

(அல்லியரசாணி) இன்னமென்னென்னவேண்டுந் தெரியப்படுத்து வாயம்மா.

(கிருஷ்ணம்பாள்) அம்மணி இந்த வீடுவாசலெல்லாஞ்சுத்திசெய்து கோலமிட்டு வாசலில் வாழை, கமுகு, தென்னைபால் பச்சைப்பந்தல்



67

போட்டு புஷ்பங்களால் சிங்காரித்து அம்மியும், குழவியுங்கொண்டு வந்துவைத்து அரசாணிப்பாளைநிறுத்தி அகண்டம்நிறையநெய்வார்த்து திருவிளக்கேற்றிவைக்கச் சொல்வீரம்மா.

(அல்லியரசாணி) பவளசேனை இந்த பிராமணஸ்திரி யுரைத்தவண்ணம் செய்துமுடிப்பீர்கள்.

(பவளசேனை) அப்படியே செய்துமுடித்தோமம்மா.

(கிருஷ்ணம்பாள்) அம்மணி நீ கிழக்குமுகமாகவும், தோழிகளெல்லோரும் பந்தலைச்சுற்றியும் உட்கார்ந்திருப்பீர்கள்.

(அல்லியரசாணி) நல்லதம்மா.

அருச்சுனனுக்கும், அல்லியரசாணிக்கும்
விவாகஞ்செய்வது - விருத்தம்.

கலியாணச்சடங்குபோலுங் கன்னியர்செய்நடகார
புலிபோல்மூதேவிவந்து புருஷன்பெண்கூட்டத்தில்
சலியாமலேமந்த்செய்து சடங்கெலாமுடிந்தபின்பு
வலிமைசேர்தாலிக்காக வரைந்தனரிந்திரற்கு

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பிராமணஸ்திரீசொரூபமாக வந்த கிருஷ்ணமூர்த்தியானவர் அல்லியரசாணியைஏமாற்றி தோழிகளால் கலியாணத்துக்குரிய வேலைகள்யாவும் நிறைவேற்றிக்கொண்டு மூதேவியை வரவழைத்து அவர்கள்மீது பிரவேசிக்கச்செய்து அருச்சுனனை அல்லியரசாணியின் பக்கத்திலுட்காரவைத்து ஓமம்வளர்த்தி மணவறைப் பந்தலைச் சுற்றிவரச்செய்து மங்கிலியத்திற்காக இந்திரனுக்கு திருமுகமெழுதும் விதங்காண்க

கிருஷ்ணமூர்த்தி இந்திரனுக்குத் திருமணப்பத்திரிகை
எழுதுகிற - விருத்தம்.

இந்திராசொல்லக்கேளாய் இனிமைசேரருச்சுனர்க்கும்
சுந்தரவல்லியார்க்கும் கலியாணஞ்செய்யவேண்டும்
உந்தனற்கிருபையாலே உளங்களித்திடவிபூதி
தந்தியின்தலைமைப்போதுந் தாலியுமனுப்புவாயே.

இப்படிக்கு,
கிருஷ்ணவதாரன்.

(வ-ம்) வாயுபகவானே இந்த திருமணப்பத்திரிகையை எடுத்துக் கொண்டுபோய் தேவேந்திரனுக்குக் கொடுப்பாய்.

(வாயுபகவான்) அப்படியே கொண்டுபோய்த்தருகிறேன் சுவாமி.

(இந்திரன்) வாயுபகவானே யாதுவிசேஷமாய் இங்குவந்தீர் தெரியப்படுத்துவீர்.

(வாயுபகவான்) தேவர்கட்கரசே உமது மைந்தனுகிய அருச்சனனுக்கும், மதுரைமாநகரத்தை பரிபாலனஞ்செய்யும் அல்லியரசாணிக்கும் இன்றையதினம் விவாகமஹோற்சவமென்று கிருஷ்ணபகவான் உமக்குத் திருமணப்பத்திரிகை யனுப்பினுரையா.

(இந்திரன்) வாயுபகவானே இந்த விருபத்தில் விபூதியும், மங்கிலியமும் கொடுத்தனுப்பவேண்டுமென்று வரைந்திருப்பதால் இதோ தந்தேன் வாங்கிக்கொண்டுசெல்வீர்.

(வாயுபகவான்) அப்படியே மகாபாக்கியமையா:—இதோ கொண்டுவந்தேன்சுவாமி விபூதியும், மங்கிலியமும்

(கிருஷ்ணமூர்த்தி) மஹாசந்தோஷம்:—அருச்சுனா யான் சுலோகமந்திரம் சொல்லுகின்றேன் நீ ஓமாக்கினியில் நெய்வார்த்துக்கொண்டிருப்பாய்.

சுலோகம்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப் புஜம்
பிரசன்ன வதனம் தியாயே
சர்வ விக்நோப சாந்தயே.

(வ-ம்) அருச்சுனா நீ எழுந்திருந்து விக்னேஸ்வரரை சேவித்துக்கொள்ளுவாய்.

(அருச்சுனன்) இதோ சேவித்துக்கொள்ளுகிறேன் சுவாமி.

சுலோகம்.

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விலம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

(வ-ம்) அருச்சுனா இந்த மங்கிலியத்தை அல்லியரசாணியின் கழுத்திலணிந்து என்னை சேவித்துக்கொள்ளுவாய் யான் அக்ஷதைத்தூவி ஆசீர்வதிக்கின்றேன்.



156

அல்லியரசாணியின்கழுத்தில் அருச்சுனன் மங்கிலியந்தூட்டி
தேவதா ஸ்தோத்திரஞ்செய்கிற விருத்தம்.

ஆதியேயுமையவளொளி ஹரிநாரப்பிரமதேவே
மாதினுக்கின்றுயென்தன்மணமகிழ்ந்திட்டவேதாவே
நீதியாய்சூட்டுகின்றேன் நீங்களெல்லோருஞ்சாட்சி
ஜோதியேவேதியன்போல் தோன்றியவின்றுன்போற்றி.

(வ-ம்) ஆதிபராசக்தியாய் விளங்கும் மதுரைமீனாட்சி சொக்கலிங்கேஸ்வர பிரமாதிதேவர்களே, அஷ்டதிக்குப்பாலகரே, யட்ச கின்னர கிம்புருட சித்தவித்தியாதரர்களே, ஆகாயவாணி பூமாதேவியே, நவக்கிரகங்களே அக்கினிசாட்சியாக யான் அல்லியரசாணியை திருமணஞ்செய்துகொண்டேன் இதற்கு நீங்களெல்லோரும் சாட்சியாகயிருக்கவேண்டும் தேவர்களே. புரோகிதராகவிளங்கும் கிருஷ்ணபகவானே உமது திவ்விய திருவடிகளுக்கு நமஸ்காரஞ்செய்கின்றேன் பக்தரக்ஷகா.

(கிருஷ்ணமூர்த்தி) சந்ததிபெருக மைந்தரைப்பெற்று சுகஜீவியாய் வாழ்ந்திருப்பீர்கள்.

அல்லியரசாணியின் கழுத்திலிருக்கும்
மங்கிலியத்திற்கு கிருஷ்ணமூர்த்தி
வரங்கொடுப்பது - விருத்தம்.

கனிவுடனித்தத்தாலி கத்திகொண்டறுத்திட்டாலும்
எனதருள்வரத்தினுலே எப்போதுமறுந்திடாது
இனிமைசேரர்ச்சுனுகேள் எனதுருகவியாலே
உனக்குநன்மணஞ்செய்தேனே ஊருக்குவருகின்றுயா

(கிருஷ்ணமூர்த்தி) அருச்சுனா உன்னிஷ்டப்பிரகாரமே அல்லியரசாணியை விவாகஞ்செய்துகொண்டாயே இனியாகிலும் ஊருக்கு வருகின்றனையா ?

(அருச்சுனன்) அப்படியேசெல்வோம் வருவீர்சுவாமி.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும், அருச்சுனனும்
தருமபுரத்திற்கு வருகிற-தரு
இ-ம்-கந்தார்த்தம்-மோசனம்.

அன்புடனோடிவந்து அருச்சுனன்அல்லிக்குற்ற
வன்மைசேர்விருதறுத்து மஞ்சளின்கொடியறுத்து.

இப்பமாம்மகுடரத்ன மிலகுதோரணமறுத்து
பன்முறைசந்தோஷித்து
பற்குணனன்மனமகிழ்ந்தானே...கிருஷ்ணனோடு
பக்ஷமுடனே சென்றானே
இச்சைபொழிந்ததுவென்ன இனிமேல்வருமேயென்ன
பச்சைமால்கூடவே பத்துவமாகவே
தச்சனுற்கட்டிய தாமாபுரிக்கு (டக்ஷ)

அல்லியராணி மங்கிலியத்தைக்கண்டு
ஆச்சரியப்படுகிற-விருத்தம்.

விஜயனுங்கிருஷ்ணனோடு ஊருக்குப்போனபின்பு
புஜபலஇனகரன்றான் புறப்பட்டான்விடியற்காலை
நிஜமுளபவளசேனை சேர்மையாயெழுப்பவல்லி
கஜமுகஞ்சிரசைப்போலக் கண்டிட்டாள்கழுத்திற்றாலி

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அருச்சுனனும், கிருஷ்ண மூர்த்தியும் கமதெண்ணம் நிறைவேறியதென்று மனமகிழ்ந்து தங்களுடையதேசத்திற்குப்போய்விட்டபிறகு சூரியோதயமாகவும் பெண்சேனையின்கூட்டத்திற்பிரவேசித்தமூதேவியோடிப்போகவும் எல்லோரும்நித்திரைதெளிந்தெழுந்திருக்க அல்லியராணியின் கழுத்திலிருக்கும் மங்கிலியத்தைக்கண்ட பவளசேனை ஆச்சரியமடைந்து இதுயார் செய்தமோசமென்று துயரப்படும்விதங்காண்க.

அல்லியராணி மங்கிலியத்தைக்கண்டுதுயரப்படுவது
இ-ம்-ஜம்பை-திரிபுடை தாளம்.
கண்ணிகள்

தோகைமயில்கந்தரியே தோற்றுவிதுவென்னவித்தை
பாகுமொழிபார்ப்பினியை பிடித்துக்கொண்டுவருவீர்

(தோழிகள்) அம்மணி எங்கெங்கு சுற்றித்திரிந்து தேடிப்பார்த்தாலும் அந்த பிராமணஸ்திரீயையும் கிழவனையும் காணவில்லையே இனி யாதுசெய்வோமம்மா

அல்லியராசாணி சொல் - தரு.

வாசமுடன்சோன்பெண்வே ழுேத்திரிந்தேவந்திருந்து
மோசஞ்செய்தாள்கண்டீரோ மொய்குழல்பாங்கியரே

(தோழிகள்) அம்மணி இதையறுத்தெறிந்துவிடுகிறோம் விசனப் படவேண்டாம்.



69

அல்லியராணி சொல்-தரு.

கத்திகொண்டென்றிதனைக் கையாற்பிடித்துநீங்கள்
உத்தமியேபவளசேனை உறுத்துதம்மாகழுத்து

(பவளசேனை) அல்லல் கழுத்தை நிமிராம்மா: —இதென்ன கத்தியும் முறிந்துவிட்டது கயிறு அறுபடவில்லையே.

அல்லியராணிசொல்-தரு.

வெட்டரும்புகத்திகொண்டு வேகமுடனேவலுவாய்
வெட்டிடுவீர்தோழிகளே வலிக்குதையோகழுத்து

(தோழிகள்) அம்மணி இந்தஇரும்புக்குச்சரியாக கழுத்தைவைத்துப் பிடித்துக்கொள்ளுமம்மா:—பெண்களே கயிற்றை யொரு கையிலும், கழுத்தையொருகையிலும் பிடித்துக்கொள்ளுவீர்கள், இதோ யாங்கள்வெட்டுகிறோம். ஆ! இதென்ன ஆச்சரியம் வெட்டரும்பும் கத்தியும் உடைந்துவிட்டது கயிறு அறுபடவில்லையே.

அல்லியராணிசொல் - தரு.

என்னுடையகொடிவிருதை சின்னபின்னமாயறுத்து
வன்மையுடனென்கழுத்தி லணிந்தவனார்தாலி

(தோழிகள்) அம்மணி யாங்கள் யாரென்றுரைப்போம் அந்தப் பிராமணஸ்திரீயும், அவளுடைய புருஷனுகிய கிழவனுந்தவிர மற்றவர்கள் யாரும் இங்கு வரவில்லையே.

அல்லியரசாணிசொல் - தரு.

பக்ஷமுள்ளதோழிகளே பாண்டியனைப்போயழைத்து
இக்ஷணமேவந்தெனக்கு இனியமொழியுரைப்பீர்

(தோழிகள்) அழைத்துவருகிறோமம்மா:—சுவாமிபாண்டியபூபதியே எங்களரசியாகிய அல்லியராசாணிஉங்களைசிக்கிரத்தில் அழைத்துவரும்படியாகத் தெரிவித்தனளையா.

(பாண்டியர்) இதோ வருகிறோம்.

பாண்டியர் அல்லியராசாணியை விசாரிக்குதல்.

விருத்தம்.

தாதிகளுரைக்கநெஞ்சந் தளர்ந்துபாண்டியர்களெல்லாம்
ஓதியவல்லிமுன்னே ஓடிவந்தேக்கமுற்று

ஆதிமுற்சமுத்திரத்தில் குட்டியகாரணத்தின்
சேதியைக்கூறென்றெ சொல்லியேதுடிக்கின்றாளே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே தோழிகளுரைத்தமொழியைக்கேட்ட பாண்டியர்கள் அல்லியரசாணியின்முன்பாகவந்து அம்மா எங்கள் பிள்ளைகளிலிருக்கப்பிறந்த செல்வமே உன் விருதுக்கொடியை மறுத்து உன் கழுத்திலானைத்தலைபோலும் மங்கிலியஞ்சூட்டினவர் யாரென்று கேட்கவும் அல்லியரசாணி நடந்த விபரங்களையெல்லாம் சொல்லிக்கொண்டுவருகிற விதங்காண்க.



அல்லியரசாணி பாண்டியர்கள்முன் துயரப்படுவது - தரு
இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆரென்றறிந்து அறைகுவேனுங்கள்முன் தந்தைமாரே-கண்டால்
புலியைஞ்சாறுதுண்டாகவெட்டுவேனே தந்தைமாரே

சீரமுடனொமதுரையையாண்டேனே தந்தைமாரே-இப்போ
சீயங்கிமயங்கிலங்கிடலாச்சுதே தந்தைமாரே

சேர்ந்தக்கொடுமைகேழ்த்துவேனுங்கள்முன் தந்தைமாரே-இதை
பார்வையுடன்கேளும்பார்மிசைவாழ்ந்திடும் தந்தைமாரே



முன்னொருநாள்வனந்தனில்வேட்டையாடுந் தந்தைமாரே-ஒருவன்
அன்பாகவந்தெனைப்பொருத்தித்தந்தான் தந்தைமாரே

காலும்பிடித்தவன்கதையையானுரைத்தனன் தந்தைமாரே-வெட்டக்
கத்தியையோங்கினேன்காற்றுப்பறந்தனன் தந்தைமாரே

மற்றொருநாளவன் மதுரைநகரில்வந்து தந்தைமாரே-நகரில்
சுற்றமருந்தைக்குளத்திலுரைத்தானென்று தந்தைமாரே

தோழிகளென்னிடம்சொன்னார்களிவ்விதம் தந்தைமாரே-அவனைக்
கடுமனைவிற்றனிக்கொல்லுமென்றேனே தந்தைமாரே

மதிமோசமாபாவி மனவாற்சாகவுமில்லை தந்தைமாரே-ஊக்கில்
மாட்டிக்கொள்ளுமென்னை மடிந்தாள்செங்கமலம் தந்தைமாரே

அம்மன்காளிமுன்னேயவனைவெட்டச்சொன்னேன் ,, -காளி
ஆண்பலிதந்தால் அனர்த்தமாகுமென்றாள் தந்தைமாரே

பூக்கிடங்கிலிற்போட்டுக்கொல்லுமென்றேன் தந்தைமாரே-அவை
போதப்பணிசெய்ய சாகாதிருந்தனன் தந்தைமாரே

சுந்தரமோகினிதெய்வகன்னிவந்து தந்தைமாரே-தனது
சொந்தக்கணவனென் றழைத்தேகினளையா தந்தைமாரே

பண்டாரமென்றொருவன் படத்தையெழுதிவந்து ,, -என்னைப்
பார்த்துமயங்கி மணஞ்செய்வாயென்றனன் தந்தைமாரே

பாம்பாலுங்கரியாலும்பதைக்க கொல்லென்ன தந்தைமாரே-இவனை
பார்த்துப்பயந்துபதறியோடிவிட்டது தந்தைமாரே

மற்றொருநாளில்லேமாயப்பிடாரன்வந்து தந்தைமாரே-வெகு
மாட்சிமையாகவே பாம்பாட்டினானையா தந்தைமாரே

இன்னொருநாள்வனவேட்டையாடச்சென்றேன் தந்தைமாரே-தாகத்
திரபிராமணன்தீர்த்தங்கொடுத்தானையா தந்தைமாரே

வேட்டையாடிப்பின்புவீட்டுக்குவரும்போது தந்தைமாரே-சதிரில்
விருந்தனுங்கன்னியும் விளக்குக்கண்ணாடிப்பந்தல்-தந்தைமாரே

வைத்திருந்தாரவர்வருந்தமெல்லாஞ்சொன்னார் தந்தைமாரே-யான்
வாவென்றழைத்திட வந்தாராண்மனைக்குத் தந்தைமாரே

இலகூமிகோன்பென்றுகளியானைவாறுபோல் தந்தைமாரே-செய்து
கலக்கமுடன்தாலி கட்டிவிட்டோடினார் தந்தைமாரே

(வ-ம்) தந்தையே யான்சொல்லியதெல்லாங் கவனித்தீரா
(பாண்டியர்) கவனித்தோமம்மா.

(அல்லியரசாணி) தந்தையே அந்த பிரமனைக்கூட இலக்ஷுமி தோன்பெண்று ரைத்து தலியர்ணைச்சடக்குபோலச் செய்துகொண்டி ருக்கையில் எல்லோரும்பார்த்துக்கொண்டேயிருந்து அயர்ந்து நித்தி ரைசெய்து விடியற்காலையிலெழுந்திருக்க என்கழுத்தில்மங்கிலியமிருக் கிறது அவர்களைக்காணோம் இதுதான் நடந்தசங்கதி.

பாண்டியர்சொல் - விருத்தம்.

அண்டம்வாழ்'ரராளுல் அமர்செய்ய முடியாதம்மா
மண்டலத்தரசராளுல் மணிமுடி துணித்துவெட்டி
சண்டைசெய்தவரைவெல்வோம் சமர்த்துடனிருபந்தன்னை
பண்மேன்னரசருக்குப் பரிவுடனெழுதுவாயே

(வ-ம்) அம்மணி இவ்வித மாயருபங்களாகவந்து மங்கியஞ்சூட்டி மறைந்துபோய்விட்டவர்கள் தேவர்களானல் அவர்களைஜெயிக்கமுடி யாது அல்லது பூலோகத்திலுள்ள அரசர்களாகில் அவர்களைப்பிடித்து சித்திரவதைசெய்ய எங்களுக்கு சமார்த்தியமுண்டு ஆதலின் ஐம்பத் தாறு தேசத்தரசர்களுக்கும் நிருபமெழுதி வரவழைத்து கொப்பரை யில் நெய்யைக்காயவைத்து கையைதோய்க்கும்படியாகப் பிரமாணஞ் செய்யச்சொல்வாயாகில் குற்றவாளிகள் அகப்படுவார்கள் அச்சயத்தில் அவர்களுடன் சண்டைசெய்து அவர்கள்தேசத்தையுங் தொலைத்திடு வோம் இதுதான் தகுந்தயோசனையம்மா.

(அல்லியரசாணி) நல்லது அப்படியேசெய்வோம்.

ஐம்பத்தாறுதேசத்தரசர்களையும்மதுரைக்குவரும்படியாக
அல்லியரசாணி திருமுகநிருபமெழுதும் - சிட்டுக்கவி.

சீர்கொண்டமல்லியாள கர்னடபப்பர
சிங்களபங்காளகாம்பூல்
சீனபர்மாகுடகு மச்சயாழ்ப்பாணமுந்
சிந்துபாஞ்சாலயோத்தி
பேர்கொண்டஐம்பத்தி யாறுதேசத்தையாள்
பெருமைதங்கியமன்னரே
பெட்பிலகுமல்லியரசாணியெனுமாங்கார
பெண்சிங்கமெழுதநிருபம்
நேர்கொண்டயென்தன்கழுத்திலிதிருமிகை
நேர்மையாய்ச்சூட்டினோர்



செற்றைசைப்பிளந்தவன்தேசங்கலங்கவே
சேதிமுகச்செய்வேனினி
பார்கொண்டவரசர்மேற்சந்தேகமானதால்
பலரறியவிங்குவந்து
பிரமாணஞ்செயல்வேணும்வருகாதோருர்களைப்
பாழாயழித்திடுவேனே.

இப்படிக்கு,
மதுரையையாளும்
அல்லியரசாணி.

(அல்லியரசாணி) மல்லகஜெட்டிகளே இந்த நிருபங்களைக்கொண்டு போய் ஐம்பத்தாறுதேசத்தரசர்களுக்குங்கொடுத்துவிட்டுவாருங்கள்.

(ஜெட்டிகள்) அப்படியே மஹாபாக்கியமம்மணி,

ஜெட்டிகள் அரசர்களுக்கு நிருபங்கொடுப்பது.
விருத்தம்.

ஜெட்டிகளோடிவந்து தேசத்துமன்னர்க்கெல்லாம்
சட்டமாயிருபந்தந்தார் சரியெனப்படித்தோரெல்லாம்
இட்டமாய்வருவோமென்ன திருமாலைவரவழைக்க
இட்டுபோவோமென்றோர்க்கு செப்பினர்தருமராஜன்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணியின் கட்ட ளைப்படியே தூதர்கள்சென்று சகலதேசத்து அரசர்களுக்கும் நிருபங் களைக்கொடுக்க எல்லோரும்வாசித்துப்பார்த்து யாதொருதடையுமின்றி வருகிறோமென்றுபுறப்பட்டனர்கள், தருமராஜா ஆலோசனைசெய்து சேவகரையழைத்து அதிசீக்கிரமாக துவாரகைக்குப்போய் கிருஷ்ண மூர்த்தியை அழைத்துவருவீர்களென்றனுப்பினர்.

கிருஷ்ணமூர்த்தியை தருமர் விசாரித்தல்-விருத்தம்.

மாயனுங்நிருபங்கண்டு வருகிறோமென்றுரைத்தி
சேயனுர்தூதர்சொன்ன சேதிபோல்வந்துதர்மர்
வாயினுலுரைத்ததெல்லாம் மறைத்தவர்தெரியாதென்று
ஆயனும்பிமனோடு அல்லிமுன்வந்திட்டாரே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணி யனுப்பிய நிருபத்தைக்கண்ட கிருஷ்ணமூர்த்தியும் வருகிறோமென்றுபுறப்படும் சமயத்தில் தருமனனுப்பிய தூதுவர்கள்வந்தழைக்க இதுதான் அருண

மென்று சகாதேவனாக தருமபுரியில்வந்து பஞ்சபாண்டவர்களைப் பார்த்து என்ன யாதுகாரணமாக வரலானீரென்றுரைத்ததைக் கேட்ட தருமாரானவர் சுவாமி உம்முடனேவந்த அருச்சுனன்மதுரையில் ஏதேனுங் கலகஞ் செய்ததுண்டா வெனக் கேட்கவும் யாங்கள் யாதொரு பாபமுமறியோமேயென்றுரைத்து பீமசேனனையழைத்துக் கொண்டு மதுரைக்கு வந்துசேர்ந்தார்.

அல்லியரசாணி இராஜாக்களைப்பிரமாணிக்கஞ்செய்ய வேண்டுமென்பது - விருத்தம்.

விமனுங்கிருஷ்ணரோடு வையத்துவேந்தரெல்லாம்
தாமதஞ்செயாமலல்லி சமூகத்தில்வந்தபோது
பூமிபிற்கலக்கந்தீர மெய்தனிமிற்கையைத்தோய்த்து
ஆமெனும்பிரமாணிக்கம் அனைவருஞ்செய்யீரென்றாள்.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே வீமசேனன் கிருஷ்ணமூர்த்தி முதலாகிய ஐம்பத்தியாறு தேசத்தரசர்களும் அரண்மனையில்வந்திருப்பதைக்கண்ட அல்லியரசாணி எல்லோருக்கும் ஆசனங்கொடுத்துபசாரஞ்செய்து தானும்சிம்மாசனத்திலமர்ந்து ஓ இராஜாக்களே என்னிடத்திலொரு சந்தேகமிருக்கின்றது ஆதலின் நீங்களெல்லோருஞ்சென்று சொக்கலிங்கேஸ்வரர் ஆலயத்திற்குமுன்னிருக்கும்படியான கொதிக்கும்நெய்யில் கைதோய்த்து எதிரிலிருக்கும்படியான சம்பாநெல்லைக் கைபாலன்னிமிட்டு அரிசியாகச்செய்யவேண்டும்.

(இராஜாக்கள்) அது யாதுகாரணத்தினாலோ? எங்களுக்கு விபரமாய்த் தெரியப்படுத்தவேண்டுமம்மா.

(அல்லியரசாணி) நல்லது அப்படியே தெரிவிக்கின்றேன்.

அல்லியரசாணி இராஜாக்களுக்குச்சொல் - தரு
இ-ம்-ஆனந்தபைரவி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

மகுடமுடி மன்னரென்னும்—அதிவீர
அகிலபுவியரச ரென்னும்
பிரகாச கீர்த்தியின்னும்—அரசரே
நிகழ்த்தவே னறிவீரின்னும்

பாண்டியர்கள் செய்தவத்தால்—மீனாட்சி
வேண்டியே யெனையளித்தாள்



மீன்முகனை வென்றுயிப்பான்—துரையை
ஆண்டேனே என்பழைத்தால்

அன்னுளின்றுள் வரையினும்—என்புகழ்
சொன்னதெக்கப் புவியிலும்
கன்மமோ வென்றவியினும்—நான்முகன்
வன்முர்வைத் தெழுதினும்

இப்படியுஞ் செய்வதுண்டா—பாவியவன்
தப்பித மென்னகண்டா
பெப்பியான் பார்த்ததுண்டா—ஜலவனை
கொப்பென துணிப்பேன்ரெண்டா


(இராஜாக்கள்) என்ன ஆச்சரியம்! உம்மை யாதுசெய்தார்கள், ங்களுக்கு விபரமாகத்தெரியப்படுத்துவாயம்மா.

அல்லியரசாணி உற்றதையுரைத்து
இராஜாக்களை சத்தியஞ்செய்யச் சொல்லுதல்.

விருத்தம்.

கன்னியும்விருத்தராக களவாகவந்துதாலி
மின்னுமென்கழுத்திற்கட்டி மறைந்தோடிப்போய்விட்டார்கள்
அன்னவர்தெரியவேண்டி அரசரேயழைத்தேனும்மை
பின்னமில்லாமற்சத்யம் பிரியமாய்ச்செய்குவீரே.

(வ-ம்) அரசர்களே ஒரு பிராமணஸ்திரீயும் கிழவனுமாக காட்டில் தரவற்றவர்களாயிருப்பதை யான் கண்டு பரிதாபத்துடனே அவர் ளையழைத்துவந்து, அந்தப் பிராமணஸ்திரீ இலக்ஷ்மி விரதஞ் சய்வதற்கு இடமுங்கொடுத்து, கோன்புக்குறியவையாவுங்தேன் ந்தப்பிராமணஸ்திரீ கலியாணச்சடங்குபோலச்செய்துக்கொண்டிருக் தயில் யாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே எங்களுக்கு நித் ரைவந்த சமயத்தில் என் கழுத்தில மங்கிலியத்தை கட்டிவிட்டு மாய யோடிவிட்டார்கள் யாங்கள்நித்திரைதெளிந்தெழுந்திருக்கும்போது வர்களிருவரையுங் காணாமையால் உங்களெல்லோரையும் வரவழைத் தன் ஆதலின் என்மனதிலிருக்கும் சந்தேகந்தெளியும்படியாக கொப் றையில் காய்ந்திருக்கும் நெய்யில் கையைத்தோய்த்து அதிலிருக்கும் யாழி மோதிரத்தையெடுத்து சபையோர்முன்பாக வைத்துவிட்டு ல்லியரசாணிகழுத்தில்யாங்கள்மங்கிலியத்தைக்கட்டவில்லையென்று அந்த பாநெல்லைவாரி கையாலன்னிமிட்டு அரிசியாகச்செய்வீராகில்குற்றவா கள் கைகொப்பளிக்கும் அப்போது அவர்களைப்பிடித்து சித்ரவதை ய்து அவர்கள் தேசத்தையுங்கொள்ளையிடுவேனென்றறிவீர்கள்.



இராஜாக்கள் பிரமாணிக்கஞ் செய்வது.



அல்லியரசாணிக்கு மங்கிலியஞ் சூட்டவில்லையென்று
இராஜாக்கள் பிரமாணிக்கஞ் செய்வது

விருத்தம்.

மதுரைவாழ்சொக்கலிங்கா மங்கைமீனாட்சித்தாயே
இதமுள்ளகாளிதுர்க்கா இந்திரசந்திராதித்தா
புதுமையாய்த்தாலியிந்த பூவையர்க்கணிந்தோமானால்
அதமாவோமென் றசத்யம் அனைவருஞ்செய்திட்டாரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே இராஜாக்களெல்லோரும் எழுந்திருந்து அல்லியரசாணிகழுத்தில்மங்கிலியஞ்சூட்டவில்லையென்று கொதிக்கும்படியான நெய்க்கொப்பரையிலிருக்கும் கணையாழிமோதிரத்தையெடுத்து சபையோர்முன்பாக வைத்துவிட்டு சம்பாநெல்லையும் கிட்டி அரிசியாகச்செய்தார்கள். வீமசேனனும் பிரமாணிக்கஞ் செய்வதற்கு நெய்க்கொப்பரையண்டைபோகும்போது அக்கினிவிகலைதைக்கண்டு பின்னுக்கிடைவதை கிருஷ்ணமூர்த்திதெரிந்து அக்கினிபகவானை வேண்டிக்கொள்ளும்விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி அக்கினிபகவானை வேண்டிக்கொள்ளுவது

கலிவிருத்தம்.

அக்கினிபகவானேகாண்டாவனம்
மிக்கவெந்திடவாட்டியவர்ச்சுன
தக்கசகோதரவீமருக்கனல்
பக்குவமாகக்குளிர்ந்திடச்செய்குவாய்

(வ-ம்) அக்கினிபகவானே உமக்காக வெகு கஷ்டப்பட்டு காண்டாவனத்தைத் தகனஞ்செய்த அருச்சுனனுடைய சகோதரனாகிய இந்த வீமசேனனுக்கு அனல்வீசாமல் குளிர்ந்திருப்பாய் உத்தமனே.

வீமசேனன் நெய்யைக்குடித்துவிட்டு
கொப்பரையை யுருட்டியது.

விருத்தம்

அன்புடன்கிருஷ்ணரோத அக்கினிகுளிர்ந்ததங்கே
இன்புடன்வீமன்சென்று இனிமைசேர் நெய்யையுண்டு
வன்மையாய்க்குடத்தை தூக்கி விசையுடன்விட்டெறிந்து
துன்பங்களின் றியன்பாய்த் தேசத்திற்கேகினரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அக்கினிபகவான் குளிர்ச்சியா யிருப்பதையும், நெய் வாசனைவீசுவதையுங்கண்டு வீமசேனன் கொப் பரையைத்தூக்கி மடமடவென்று நெய்யைக்குடித்துவிட்டு கிருஷ்ண மூர்த்தியுடனே தங்கள் தேசத்திற்குப்போய்விட்டபிறகு நடக்கும் விதங்காண்க.

அல்லியரசாணிசொல் - விருத்தம்.

இத்தனையரசர்க்குள்ளே எவர்களைத்திருடனென்போம்
சத்தியஞ்செய்யாமற்று னசத்யமாய்நெய்குடித்து
வித்தைகள்மாயமந்த்ரம் விதவிதமாகக்கற்ற
எத்தனைக்கொல்வதற்கு எல்லோருமென்பின்வாரீர்

(வ-ம்) ஆ ஹா ஹா இராஜாக்களே இத்தனைபேரில் நாமெவர்களைத் திருடனென்றுரைப்பது? எல்லோரும்பிரமாணிக்கஞ்செய்தார்களே! அப்படியிருக்க காய்ந்தருகும்நெய்பண்டைவத்து மந்திரமாயக்கட்டுக ளால் அக்கினிபந்தனஞ்செய்து நெய்யைக்குடித்துவிட்டுப்போய்விட லாமோ? அவனையின்னானென்று தெரியச்சொல்லவேணும் மஹா ராஜாக்களே.

(இராஜாக்கள்) அம்மணி அவர் யாரென்றால் தருமாபுரியைப்பரிபால னஞ்செய்யும் தருமராஜாவின்சகோதரராகியவீமசேனனென்றறிவீர்.

(அல்லியரசாணி) அப்படியா! பொன்மனைநாடாளும் என் அண்ணா யான்வருகிறவரையிலும் இந்தசெங்கோலைத்தாங்கி மதுரையைப் பரி பாலனஞ்செய்துகொண்டிருப்பீர். எனது தந்தைகளே நமதுசேனா சயினியங்களையெல்லாம் சண்டைக்குரிய வில், வாள், வேல், கத்தி, கட்டி, பாலா, பரிசைமுதலாகிய ஆயுதங்களுடனேயுத்தசன்னத்தராய் சீக்கிரத்தில் புறப்படும்படியாகஆக்ஞாபித்து நீங்களும் படைத்துணை யாக வருவீர்கள்.

(பாண்டியர்) நல்லதம்மணி அப்படியே சேனாசயினியங்களுடனே ஆயுதபாணிகளாக எல்லோரும்புறப்படுகிறோமம்மா.

அல்லியரசாணி சேனாசயினியங்களுடனே
பஞ்சபாண்டவர்மீது சண்டைக்குப்போகிற - தரு.

இராகம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

திறமுள்ளமன்னரே—வருவீரென்றல்லி
புறப்பட்டாளமருக்கு



அநுபல்லவி

மறைந்தென்கழுத்திற்றாலி மாயமாய்கட்டிய
வஞ்சகனைவெல்லோம் வருவீரென்றோதியே (திற)

சரணங்கள்.

தர்மாபுரந்தனிற் சென்றவ்வூரையழித்து
தவிடுபொடி யாக்கி—திருட்டுப்பயல்
சர்வமடங்கவே கலக்கியவனுயிரை
களைகளுக்கிரை யாக்கி

மர்மமந்திரமாய மறைந்ததுவென்ன
தர்ச்சாவனுக்குத் தடார்ந்தாற்போலுன்ன
பர்வதாகாரமாய்ப் படைகளுந்தான்ன
கர்மவிதியாலவன்! கலங்கவென்பின்னே (திற)

சடடியம்புபாலா கத்திகேடயம்
இணையிலாவில் லம்பும்—தேவாஸ்திரம்
கட்டியசத்திவேலாயுதமென்றும்
குறித்தகணை யம்பும்

மட்டியம்புறத்தாணி முறுகிலணிந்து
திட்டியுல்லாசமாய் தேரேறிவந்து
நாட்டமாய்செற்றோர் கடுக்கச்சினந்து
ஆட்டும்பம்பரம்போ லடக்கவினைந்து (திற)

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே சகல சேனாசயினியங்களுட னே அல்லியரசாணி வீராவேசமாக தருமாபுரியில்வந்து படைகளை யணியணியாகநிறுத்தி சண்டைமுரசறையும்போது தருமர் யோசிக் கும்விதங்காண்க.

தருமர் தம்பிமார்களுக்குச்சொல் - விருத்தம்

என்னிடதம்பிமாரே எந்தையேகிருஷ்ணதேவா
உன்னிதமாய்விளக்கும் ஊருக்குள்யெவரோவந்து
இன்னங்கள்தாரைபூரி சமர்பேரியறைகின்றாரே
பன்னுமோர்அதனாலே பார்த்தென்முன்னோதுவீரே.

(வ-ம்) இதென்ன ஆச்சர்யம்! சற்றுநிதானித்துகேட்போம். சண் டைபேரிமுழங்கவேண்டிய காரணமென்ன? தம்பிமாரே! கிருஷ்ணா!

நமது நகரத்தின்மீது யாரோ படையெடுத்துவந்தாற்போலிருக்கிறது ஆகலின் ஒரு தூதுவனையனுப்பி விசாரித்துக்கொண்டுவரும்படியாகச் செய்வீர்கள்.

(கிருஷ்ணபீமார்ச்சுனநகுலசகாதேவர்) அப்படியேவிசாரிப்போம்.

(வீமசேனன்) அடா சேவகா அதிசீக்கிரமாய்ச்சென்று நமது நகரத்தில் ரணபேரிகைமுழங்குங்காரணமென்னவென்றுவிசாரித்துக் கொண்டுவருவாய்.

(சேவகன்) அப்படியேதெரிந்துக்கொண்டுவருகின்றேன்மகாப்ரபு.

சேவகன் சண்டையின்காரணத்தைவிசாரிக்குதல் - கவி

அண்டங்கலக்க சண்டைக்கோலங்
கொண்டவரார்முன் விண்டிடுவீரே.

(அல்லியரசாணி) இவனென்ன வரும்போதே அட்டகாசத்துடனே வருகின்றானே நல்லது விசாரிப்போம். நீ யாரடா?

(சேவகன்) யான் தருமராஜனுடைய சேவகன்.

(அல்லியரசாணி) உன்னை யாதுகாரணமாக அனுப்பிவைத்தனர் தெரிவிப்பாய்.

(சேவகன்) நீங்களிங்குவந்து ரணபேரிகையறைந்த காரணமென்ன வென்று விசாரித்துக்கொண்டுவரச்சொன்னாரம்மா.

(அல்லியரசாணி) பவளசேனை ஓலையு மெழுத்தாணியும் எடுத்துக் கொண்டுவருவாய்.

(பவளசேனை) இதோ வாங்கிக்கொள்ளுமம்மா.

அல்லியரசாணி யுத்தநிருப மெழுதுதல்

விருத்தம்.

வையமீதெவருங்காண வந்துயென்கழுத்திற்றாலி
பையவேயணிந்தோன்றன்னைப் பார்த்துயான்பிடிக்கவெண்ணி
கெப்பிலேகையைத்தோய்த்து நெல்லையும்கிமிட்டுமென்ன
பொய்யானசத்யஞ்செய்து போய்விட்டாயுனதுகையில்

பிடித்ததுவில்லம்பானால் பிழையிலாசண்டைசெய்வீர்
அடித்துமேயொளிததீரங்கில் தூக்கியுங்களையான்கொன்று
அடித்துங்களானைசேனை அதஞ்செய்திவ்வூரையெல்லாம்
இடித்துத்தூளாகச்செய்வேன் இணையிலாவல்லியானே

இப்படிக்கி
அல்லியரசாணி



(அல்லியரசாணி) அடா சேவகா இந்த நிருபத்தைக்கொண்டுபோய் உங்களரசனுக்குக்கொடுப்பாய்.

(சேவகன்) நல்லதம்மணி.

(தருமர்) சேவகா யாதுவிசேஷம்! தெரிந்துக்கொண்டுவந்தனையா?

(சேவகன்) இதோ யுத்தநிருபமெழுதித்தந்தனரையா.

தருமர் யுத்தநிருபத்தை வாசித்துப்பார்த்து
கிருஷ்ணமூர்த்தியை விசாரிப்பது

விருத்தம்

ஓலையைக்கண்ட தர்மர் யோசித்துவல்லிக்கன்பாய்
மாலையைத்தரித்தோர்காண வழுத்தினள்சத்யஞ்செய்ய
நூலையுமுணர்ந்துநீதி நெறிமுறைநபிசகளமோ
வாலையாய்நடந்தசேதி வழுத்துவீரென்றுரைத்தார்


(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே தருமர் யுத்த நிருபத்தை வாசித்து கிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து சுவாமி வீமசேனனையழைத் துக்கொண்டு மதுரைக்குச்சென்றீரோ அங்கு நடந்தசங்களையெல்லாம் எனக்கு விபரமாகதெரிவிப்பீரென்றார்.


(கிருஷ்ணமூர்த்தி) தருமபுத்திரா இராஜாக்களெல்லோரும் நெய்க் கொப்பரையில் கைதோய்க்கும்போது அருகிலிருந்தவீமசேனன் கொப் பரையைத்தூக்கி நெய்யையெல்லாம் மடமடவென்று குடித்துவிட்டு வந்தமையால் சமர்த்தனென்றுமெச்சி சண்டைக்குவந்தாற்போலிருக் கிறது ஆகிலும் பெரிதல்ல நாமிதற்கு பயப்படலாகாது.

(தருமர்) சரி! அப்படியானால் எனதுதம்பிமார்களில் உமக்கிஷ்ட மானவரை யழைத்துச்சென்று ஜெயம்பெற்றுவருவீர் சுவாமி.

பொது - வசனம்

கேளுங்களையா சபையோர்களே கிருஷ்ணமூர்த்தியானவர் தருமர் சொற்பிரகாரம் வீமசேனன், நகுலன், சகாதேவன் முதலானோரை அழைத்துக்கொண்டுஆயுதபாணிகளாகபுறப்படும்போது அருச்சுனன் ஓடிவந்து சுவாமி அல்லியரசாணியின்மீது ஒரு அம்பாகிலும் படா மல் சண்டைசெய்து அந்தமாதரசியை யழைத்துக்கொண்டுவருவீர்க ளென்றுரைக்க இதுவும் நல்லசகுனந்தானென்றுமனமகிழ்ந்து யுத்த களத்தில் வந்துசேர்ந்தபின் நடக்கும்விதங்காண்க.







கிருஷ்ணவீமநகுலசகாதேவருக்கும்,
அல்லியரசாணியின் சேனைகளுக்கும்யுத்தம்.

விருத்தம்.

ஆனைகள்புரவிதேரும் அடங்கலும்பயனமாகி
சேனைகள்குழுவல்லி சிர்படைதனிற்புகுந்து
ஏனையோமகுடமன்னர் எல்லோரும்பயந்துவோட
சேனைபோற்கணைகளேவி தொடுத்தனர்சயர்த்தாயுத்தம்

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே இருதிறத்தாருடைய சேனைகளும்கைகலந்துசண்டைசெய்யும்போது கிருஷ்ணனொருபுறமும் நகுலனொருபுறமும், சகாதேவனொருபுறமுமாக வீராவேசத்துடன் பாண்டியருடைய சேனைகளை யதஞ்செய்யும்போது வீமசேனன் கும்பலிற்புகுந்து தாறுமாறுகசண்டைசெய்து சேனைகளைச் சின்னபின்னமாய்க்கொல்வதைக்கண்ட அல்லியரசாணிக்கு மனந்தரிளாமல் வீமசேனனுடன் சண்டைசெய்யும்விதங்காண்க.

அல்லியரசாணிக்கும் வீமசேனனுக்கும்யுத்தம் - தரு

இ-ம்-காம்போதி-சாப்புதாளம்

கண்ணிகள்

அல்லியரசாணிசொல் - தரு

இருட்டுப்பயலே நியன்காதென்முன்னுக
நீமாய்வந்தெதிர்த் தாயே—உன்னுங்
காரத்தைப்போக்குவேன் நாயே
நெருப்புப்போலென்கனை சிறக்குடனேவந்துன்
தெற்றியிற்பட்டது வீமனே

வீமசேனன் சொல் - தரு

பெண்மதிபாலேயென் வன்மையறியாமல்
பேய்ப்போலேதுள்ளுறு யென்னமோ—உன்
பேதைமதியோதான் பன்னுவா—யிதோ
எண்ணிலா அம்புகள் விட்டுன்யானைசேனை
எல்லாமழித்திட்டேன் அல்லியே

அல்லியரசாணி சொல - தரு

அக்கினியாஸ்திரம் அர்த்தசந்திராஸ்திரம்
ஆதித்தனஸ்திரந் தொட்டேனே—உன்

ஆருயிர்வாங்கலே விட்டேனே—பாராய்
சிக்கெனத்தேருமுன் வில்லுமுறிந்ததே
சிச்சீப்போதென்ன செப்புவாய

வீமசேனன் சொல - தரு

சிச்சீயென் றுமெத்த விசாரப்புன்சேனை
நிந்திபபக்தோடவென்றேனே—இதோ
சேமத்தேரேறிமுன்வந்தேனே
பேச்சநிந்தாயும் வேட்டைப்பிடியாது
பெண்கையாலெந்தனை வெல்லமுடியாது (பெண்)

அல்லியரசாணிசொல் - தரு.

எத்தனைசேமத்தே ரேறினாலுமவை
எல்லாமழிந்திட வெட்டினேன்—உன்கை
வில்லையறுத்திதோ ஒட்டினேன்—மந்ர
வித்தைகற்றுயன்றி விற்றிறமறியாமல்
வீரவார்த்தைபேச லாகுமோ . (திருட்)

வீமசேனன் சண்டைசெய்யமுடியாமல் பயந்தோடுவதைக்கண்ட
கிருஷ்ணமூர்த்திக்கும், அல்லியரசாணிக்கும் யுத்தம்.

விருத்தம்

சேமத்தேரேறியேறி சென்றுசமர்செய்தினைத்து
வீமனுமயினைத்துமோட வீரமாய்க்கிருஷ்ணமூர்த்தி
ராமனங்காளிலங்கை ராவணனோடியுத்தம்
ஆமெனச்செய்தாற்போல அல்லிமுன்னெதிர்த்திட்டரே.

(வ-ம்) கேளுங்கள்பா சபையோர்களே வீமசேனன் தன்னுலான மட்டும்யுத்தம்புரிந்து ஜிவிக்கமுடியாமல் ஓடுவதைக்கண்டகிருஷ்ண மூர்த்திக்குமனந்தாளாமல்வீராவேசத்துடனேவந்து அல்லியரசாணியை எதிர்த்து வில்லிற்கணைகளைத்தொடுத்து பிரயோகஞ்செய்யும் விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் - தரு
இ-ம்-கலியாணி-சாப்புதாளம்

பல்லவி

அல்லியரசாணி—கர்வத்தை
அடக்கவந்தேன்றிகாணி



அநுபல்லவி.

சொல்லுமுன்னேகணை வல்லமையாகவே
வில்லிற்றொடுத்தேனே பல்லோலமாகவே (அல்லி)

அல்லியரசாணி சொல் - தரு.

துள்ளிவிழா நிர்கள்—இன்றோடே
துலைந்தபடி வீர்கள்
வெள்ளம்வெள்ளமாக விடுத்தகணைகளால்
சல்லடைக்கண்போலச் செய்குவேனிட்சணம் (துள்ளி)

கிருஷ்ணமூர்த்தி சொல் - தரு.

வாய்வாஸ்திரந்தொடுத்தேன்—சத்திவேல்
வழங்குங்கணைதொடுத்தேன்
ஒபாதம்புவிடுத் தேனேயுன்சமர்த்து
சாயதினிமேலே சாற்றினேன்றிறத்து (அல்லி)

அல்லியரசாணி சொல் - தரு.


இந்தக்கணைகளுக்கும்—பயப்பட
இல்லையேபான்விடுக்கும்
சக்தரிந்த்ராஸ்திரம் சாம்பவியாஸ்திரம்
வந்துனைக்கொல்ல வனைந்ததைப்பார்த்திரும் (துள்ளி)

கிருஷ்ணமூர்த்தி சொல் - தரு.

பெண்பிள்ளையாச்சதென்றுந்—சொல்லாமல்
பொறுத்திட்டேனேயென்றும்
உன்மனதென்னுதால் உயிரொழிந்தாயிதோ
வன்மையாஞ்சேனையும் மடியுதபாரதோ (அல்லி)

அல்லியரசாணி சொல் - தரு.

உன்தேரும்வில்முறிய—உன்சாரதி
உயிரழிந்து மடிய
வன்மையாயக்னி யாஸ்திரதொண்டுனே
துன்பப்பட்டோடவே தொத்தியடித்தேனே (துள்ளி)



சகாதேவனுக்கும், அல்லியரசாணிக்கும் யுத்தம்

விருத்தம்

அன்புடன்கிருஷ்ணமூர்த்தி அமர்புரிந்திளைத்துலோட
இன்புடன்சகாதேவன்கண் டிணையிலாசமர்செய்தோய்ந்து
கன்மையாய்சாஸ்த்ரம்பார்த்து நாடியேபுலிப்போனுள்ளே
வன்மையாயல்லிதன்னை மடக்கவேயோசிந்தானே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கிருஷ்ணமூர்த்தியாலான வரையிலும் யுத்தம்புரிந்துநிர்வகிக்கமுடியாமலொடுவதைக்கண்ட சகாதேவனுக்கு மனந்தாளாமல் அல்லியரசாணியை எதிர்த்து தன்னாலான வரையிலும் சமர்செய்திளைத்து இரதகஜதுரகபதாதிகளையுமிழந்து, ஜோதிஷநூம்கணிதஆரூடத்தையுணர்ந்து அல்லியரசாணியைஜெயிப்பதற்கு எவர்களாலுமாகாது ஆகையால் புலிக்கூண்டுசெய்து வெகு தந்திரமாக பிடித்துக்கொண்டு போகவேணுமென்று ஆலோசிக்கும் விதங்காண்க.

(சகாதேவன்) சேவகா! சீக்கிரமாகச்சென்று ஆயிரம்சிற்பசாஸ்திரிகளை அழைத்துக்கொண்டுவருவாய்.



பொது - வசனம்.

கேளுங்களையா சபையோர்களே சகாதேவன்சொற்பிரகாரம் சேவ
ன்சென்று சிற்பசாஸ்திரமுறையுணர்ந்த ஆயிரம தச்சர்களை அழைத்
துக்கொண்டுவந்தபிறகு புலிக்கூண்டு செய்யும்படியாக சகாதேவன்
ஆக்ஞாபிக்கும்விதங்காண்க.

சகாதேவன் சிற்பசாஸ்திரிகளை புலிக்கூண்டுசெய்பச்சொலவது.

விருத்தம்.

ஒருபுறங்கண்டோமாகும் உச்சிதக்கூண்டுபோலும்
ஒருபுறம்மச்சுவீடும் உயர்ந்ததோர்கோட்டையாக
அருமையாய்க்கதவுமிட்டு அதற்குசங்கிலிதாப்பாளும்
பெருமையாய்த்திறவுகோலும் பெட்புறச்செய்குவீரே.

(வ-ம்) சிற்பசாஸ்திரி நீங்கள் எனக்கு ஒருபுலிக்கூண்டு செய்துக்
காடுக்கவேண்டும். அதெப்படியிருக்கவேண்டுமெனில் ஒரு புறத்திற்
ண்டோமாகில் அலங்காரமாகிய கூண்டுபோலவும், மற்றொருபுறத்
ல் உச்சிதமாகிய மச்சவீடுபோலவும், ஒருபுறமாயுள்ளே நுழைந்து
றுபுறமாக வெளியே போவதற்கு வழியுமேற்படுத்தி திக்கிசைக்
ற்போல ஜன்னல்களும்வைத்து நாற்புறத்திலும்இரும்புக்கதவுகளும்
ாப்பாளும், திறவுகோலும் அமைத்துத் தரவேண்டும்.

(சிற்பசாஸ்திரிகள்) அப்படியே செய்கிறோமையா.

மேஸ்திரி வேலைக்காரர்களுக்குச் சொல் - விருத்தம்.

பழக்கமாய்வேலைசெய்யும் பார்த்தசாரதியேகுப்பா
பழனிசுப்பையாமுத்தா பலகையையறுத்தளந்து
இழைப்புளியாலிழைத்து எட்டடிசதுரமாக்கி
வழங்கிடுந்தாப்பாளிட்டு வர்ணங்கள்பூசுவீரே.

(வ-ம்) பார்த்தசாரதி நீ இந்த மரத்தை அறுபத்துநாலு துண்டாக
ஏலடிஉயரமாகவும், இரண்டடிசதுரமாகவும், ஆறங்குலகனமாகவும்
அறுப்பாய். குப்புசாமி நீ இந்தப் பலகையை யெல்லாம் ஒன்றாய்ச்
சேர்த்திணைத்து எட்டடிசதுரமாகஒருபுலிக்கூண்டுசெய்வாய். பழனி
சுப்பையா நீங்களிருவரும் ஜன்னல், கதவு, தாப்பாள்முதலியவைகளை
செய்வீர்கள்.

(வேலைக்காரர்கள்) அப்படியே செய்கிறோமையா.

சிற்பசாஸ்திரிகள் புலிக்கூண்டுசெய்கிற - தரு
இ-ம்-புன்னாகவராளி-சாப்புதாளம்.

பல்லவி

புலிக்கூண்டுசெய்தாரே—அல்லிக்காக
புலிக்கூண்டுசெய்தாரே

அநுபல்லவி.

சலியாமலேசிற்ப சாஸ்திரிகூடியே
வலிமையோடேசெய்ய வாட்டமாய்காடியே (புலி)

சரணங்கள்.

காட்டமோடு மரத்தை—யறுபத்து
நாலடியா யறுத்து
கூட்டியேவீடுபோல் குறித்துக்கதவிட்டு
பூட்டியதாப்பாளுங் கிராதிகோலுமிட்டு (புலி)

வாசலுக்கும்வெளிக்கும்—வழியாக
வைத்துப்பின்னும்ஜொலிக்கும்
மாற்றதென்றிவர் மேஸ்திரிமெச்சவே
வாசற்கதவுக்கும் வர்ணங்கள் பூசியே (புலி)

(சிற்பசாஸ்திரி) இராஜேஸ்வரா புலிக்கூண்டு செய்துக்கொண்டு வந்தோம் பார்வையிடுவீர்.

(சகாதேவன்) ஆ ஹா சிற்பாசாஸ்திரிகளே நீங்கள் மிகவும் சமர்த்தராகையால் இவ்வளவு சீக்கிரத்தில் செய்தீர்கள். ஆதலின் என்மனமகிழ்ந்து கொடுக்கப்பட்ட இந்த ஆயிரம்விராகனையும் வாங்கிக்கொள்வீர்கள்.

(சிற்பசாஸ்திரிகள்) அப்படியே மகாபாக்கியமையா.

சகாதேவனுக்கும், அல்லியரசாணிக்கும்
கடைசிகாள்யுதம் - தரு.
இ-ம்-வன்னம்-தோடி-ஆதிதாளம்.

சகாதேவன்—சாரிபுரவிரத மேறிவிருதுடனே
சகலபடைகள்சூழ சாஸ்திரக்கொடியோன்
சமைத்தகூண்டிலே நுழைத்திடவல்லியை
அமைந்ததசரியென அணிந்தகவசமுடன்



வந்தானே—அல்லியின்சேனையில் வல்லமையாகவே
வில்லிலம்பேற்றியே வீசவுஞ்சேனைக
ளலறிகதறியோடி குன்றிநிலைதளர்ந்து
பலபலவிதமாக கலங்கியமுதவாடி

சொந்தாரே—அல்லியவளைக்கண்டு கொல்லுவேனடாயெதிர்
நில்லுடாதேயென்று சொல்லிநன்றேரை
திருப்பியஸ்திரங்களை பொறுக்கிபொறுக்கிவாரி
சுறுக்குசுறுக்கெனவே உறுத்தும்படிசொரிய


சகாதேவன்—அயர்ந்துதளர்ந்துமிக பயந்திடும்வாறுபோ
லுயர்ந்திடுங்கூண்டிலே நுழைந்திடவல்லியும
விட்டேனாயென்றவளும் பொட்டெனக்கூண்டிலே
சட்டெனநுழையவும் இட்டெனதாளிட்டு

ஜெய பேரி—கொட்டிமுழங்கிடவி முட்டகாசத்துடன்
இட்டுபோலெதிரியே எட்டுதிக்கதிரவே
பட்டணந்தனில்ரதம் பளபளென்றுஜொலிக்க
கிட்டியரண்மனையி லழைத்துவந்தாரே-மகிழ்ாக

புலிக்கூண்டிலிருக்கும் அல்லியாசாணியை
சமாதானஞ்செய்வதற்கு
துரோபதையும், சுபத்திரையும, நாககன்னியும் வருகிற-விருத்தம்.

அல்லியைபோனிமிட்டு அரண்மனைக்கழைத்துவந்தார்
வில்லேந்தும்விஜயனுந்தான் விளம்பினனுற்றசேதி
நல்மொழிசுபத்ரையும்பாஞ் சாலியும்நாககன்னி
சொல்லியேமனந்திருப்ப துரிதமாய்வருகின்றாரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணியைப் புலிப்போனிவிட்டு ஜெயபேரிகை முழங்கும்படியாகக் கொண்டுவருவதைத் தருமர்முதலான யாவருங்கண்டு சகாதேவனைப் புகழ்ந்துக்கொண்டிருக்கையில் அருச்சுனன் அதிகசந்தோஷத்துடனே தான் தீர்த்தயாத்திரைபோயிருக்கையில் நடந்த சங்கதிகளையெல்லாம் சொன்னதைக் கேட்டு துரோபதையும், சுபத்திரையும், நாககன்னியும், அல்லியரசாணியின் முன்பாகவந்து விசாரிக்கும்விதங்காண்க.



துரோபதையும், நாககன்னியும், சுபத்திரையும் வந்து அல்லியராணியை சமாதானஞ்செய்தல்.



துரோபதையும், சுபத்திரையும், நாககன்னியும் அல்லியராணிக்குச்சொல் - விருத்தம்.

ஆரம்மா கூண்டுக்குள்ளே அன்புடனெங்கள்முன்னே
கூறம்மாயுனக்குநேர்ந்த குறைதயவொல்லாம்பேசு
நீரம்மாபயப்படாதே நியக்கிவேகலங்கிடாதே
நேரம்மாயுனக்குண்டாச்சி சிக்கையிலுன்னுவாயே.

(வ-ம்) அம்மா இந்த கூண்டுக்குள்ளே மிகவருத்தத்தோடிருக்குங் கன்னியே நீ யாதுகாரணத்தால் இந்தப்போனுக்குள் அகப்பட்டனை எங்களுக்கு விபரமாகச்சொல்லுமம்மா.

புலிக்கூண்டிலிருக்கும் அல்லியராணிசொல்-விருத்தம்.

அன்புடன்பாண்டியர்க்கு அன்னைமீனுகூியம்பாள்
இன்பமாபெணையளித்தாள் ஈசனருகவியாலே
வன்மைமீன்முகனைவென்று மதுரையையாண்டிருந்தேன்
என்பெயரல்லியென்பார் என்குறைமெத்தவம்மா.

(வ-ம்) பாண்டியர்கள்செய்த அருந்தவத்திற்குமனமிரங்கி மீனாட்சியம்மன் அல்லிக்கொடியிலென்னை சிருஷ்டித்தமையால் பாண்டியர்கள் என்னையெடுத்துக்கொண்டுவந்து வளர்த்துவருகையில் அவர்களுடைய பகைவனாகிய மீன்முகனை ஏழுவயதில் சம்மாரஞ்செய்து நவரத்தினமணிமகுடந்தாங்கி மதுரைமாநகரத்தைப் பரிபாலனஞ்செய்துக் கொண்டிருக்கையில் இந்த திருட்டுப்பயலெனதுநகரத்தில்வந்து என் கழுத்தில் மங்கிலியஞ் சூட்டியதுமல்லாமல் பொய் சத்தியஞ்செய்து யுத்தமுகத்தில் நிர்வகிக்கமுடியாமல் ஓடியோடியொளித்து கடைசியி லென்னையிவ்விதமோசஞ்செய்யலாமோ? சாமார்த்திய முடையவர்களானால் எதிரெதிர்நின்றுபேசவேண்டும் ஆகையால் கதையைத் திறந்து விடுவீர்களம்மா.

அல்லியராணியை துரோபதை சமாதானஞ்செய்கிற-தரு.

இ-ப்-அசாவேரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சொல்வேனுன்கழுத்ததனிற்றாலியுஞ் சூட்டினோரையுமுன்னெதிர்
அல்லியெனுமயில்முருகசுந்தரி அன்பாயிதையுணர்ந்திடுவாய்
ஆடவிவேட்டையோடப்போகையில் அம்புபொருக்கியேதந்தவர்
திடமாயுனதுகால்பிடித்துகதையுமுன் சித்தங்களிக்கவேசொன்னவர்

பித்தன்போலவேஜலத்தில்மருந்தையும் பிரியமுடனேயிழைத்ததால்
மெத்தகோபமாயாற்றில்புரட்டியும் வெந்துசாகாதிருந்தவர்

தூக்கில்போடவேசெய்துகாளிமுன் தலங்கும்பலியிடசொல்லியும்
நோக்கும்பூதக்கிடங்கினடைத்திட நொய்யவொருதெய்வகன்னியும்

எந்தன்கணவனென்றவுரையன்புடன் எத்தாய்க்கூட்டியேசென்றபின்
உந்தனுசையாலுருகிமணந்திட உபாயமாகவேவந்தவர்

ஆண்டிபோலொருதினமுன்மீதவர் ஆசையுற்றகாலாவினால்
தூண்டிகடிக்கவேசெய்துயானைபின் தம்பியாற்கொல்லசொன்னயே

பாம்பைப்போலவுன்னேடொருதினம் பக்ஷமாய்விளையாடினார்
ஆம்புகழுளதெய்வகன்னியும் அந்தணர்போலும்வந்தனை

அன்பாய்மணஞ்செய்துமாலைசூட்டினார் அவர்தானம்மணியருச்சனர்
இன்பாய்நிகுவாயவர்போற்சமர்த்தர்க ளிகத்திலெங்கினுமில்லையே

அல்லியிலைமீதிற்பிறந்தாயென்றுனை அதிசயித்திடசொல்கிறாய்
செல்விக்கனியெனருசிக்குமிதழுள செருப்பிலுதித்தவளெந்தனை

மாலையிடவென்றனேகமன்னர்கள் வந்துசபைதனிற்கூடினார்
ஞாலமுயவேசபையினைந்திடும் ராஜராஜர்களறியவே

அந்தரத்திலோர்மச்சயந்திரம் ஆடசெய்தனர்வேகமாய்
சுந்தரவில்லிற்கணைதொடுத்துமேற் சுற்றும்யந்திரமற்றிட

செய்வோருக்கெனையீகுவோமென தேவரிஷிமுனிவாழ்த்திட
வையமீதுளமன்னரேங்கிட வந்துன்கணவனருச்சுனர்

தனுசெடுத்துவளைத்துயந்திரந் தன்கையில்விழச்செய்தெனை
மணந்தவர்ச்சுனரோடுகாமினி மகிழ்ந்துவாழுவோமம்மணி

(வ-ம்) அம்மணி அல்லியிலையி லவதரித்ததை யொருபெருமையாச் சொல்லுகின்றனையே! பாஞ்சாலமகாராஜன்செய்த பரிசுத்தமாகிய யாகாக்கினியில்பிறந்த எந்தனைவிவாகஞ்செய்வதற்கு வந்திருந்த மகாராஜர்கள் முன்னிலையில் தனுசைவளைத்து அந்தரமார்க்கத்தி லுலாவிய மச்சயந்திரம் விழும்படியாக கணைகளேவி என்னை மணம்புரிந்த அருச்சுனராஜனுக்கு நிகரானவர்க ளெவ்வுலகத்திலுமில்லை ஆகலின் அவரே யுனக்குத்தகுந்த மணவாளனென்றறிவாயம்மா

பொது - விருத்தம்.

இன்புடன் அல்லிநெஞ்சம் இரங்கபாஞ்சாலியோதி
அன்புடன் சினமகற்ற அழகுள்ளநாககன்னி
பொன்மணிதன்னைகொஞ்ச பொற்பாவைபோலவந்து
வன்மையாக்தனதுசேதி வழுத்தினள்கோபந்தீர

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே அல்லியரசாணியின்கோபந் தணிய துரோபதைஅனேகநீதிமொழிகளுரைத்ததுமன்றி நாககன்னியுந்தன துசவிஸ்தாரங்களைப்புகன்று சமாதானம்செய்கிறவிதங்காண்க

நாககன்னி அல்லியரசாணியை
சமாதானஞ்செய்கிற - விருத்தம்.

வன்மைசேரரசரெல்லாம் வணங்கவேயுலகையாண்ட
தன்மையையுடையாளென்று சாற்றினாய்நாகராஜன்
இன்புடனீன்றுபெண்ணை இனிமையாய்வளர்க்கும்போது
அன்புடனெனைமணந்தார் அருச்சுனராஜனம்மா

(வ-ம்) கேளுமம்மா அல்லியரசாணியே நீ அல்லிக்கொடியிலேபிறந்து அரசர்கள் வணங்கும்படியா யிருந்தேனென்றுரைத்தனையே. பூலோகத்தோர்புகழும் நாகேந்திரனுடைய தவத்தாலுதித்த புத்திரியாகிய எந்தனை வெகுதந்திரமாகவந்து திருமணம்புரிந்த அருச்சுனராஜனுடைய சாமார்த்தியத்தை எவரால்சொல்லமுடியுமம்மா?

பொது - கலிவிருத்தம்.

நாககன்னிநவின்றனளிவ்விதம்
ஆகமப்புகழ்ரதிமுலப்பொருள்
லோகநாயகன் தங்கைசுபத்திரை
வேகமோடு விளம்பவந்தாளிதோ.

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே அல்லியரசாணி நாககன்னியுரைத்த மொழியை ஆலோசித்துக்கொண்டிருக்கையில் கிருஷ்ணபகவானுடைய சகோதரியாகிய சுபத்திரைவந்து அல்லியரசாணியைசமாதானஞ்செய்கிற விதங்காண்க.

சுபத்திரை அல்லியரசாணியைசமாதானஞ்செய்கிற-தரு.

இ-ம்-இந்துஸ்தானி-குல்ரோஜ்-அடதாளம்.

கண்ணிகள்.

அல்லியிலே மேலுதித்த ஆரணங்கே கேள்
சொல்லுவேயா னுன்கணவன் சேதியு மின்றுள்

ஆபன்தன்னை காணவர்க்கு அம்மான் மகளே
நேயமாயென் மீதாவலாய் நினைக்கொரு காலே.

சன்னியாசி போல்வந்தென்னை திருமணஞ் செய்து
இன்புடன் அழைத்துவந்தா ரிந்நகர்தனில்

விளங்குமவர் மேனிகண்டோர் மயங்கி விழ்வாரே
களங்கமில்லா குணமுடையோன் கனியிதழாளே

மீசைமுறுக் கழகுமவர் விழியி னழகும்
வாசமலர் துளபமாலை தோளினழகும்

சொல்லும் புகழ் முதுகில்மச்ச ரேகையழகும்
பல்லிற்பாசு விணையழகும் பார்க்க முடியாதே

முழங்காலில் முத்துமாணிக்கம் வீசுமொளியும்
செழுங்கமல நயனபார்வை ரூபசிங்காரன்

(வ-ம்) அம்மணி நமது மணவராளராகிய அருச்சுனமஹாராஜருடைய வடிவலங்கார சிங்காரத்தை இன்றைக்கெல்லாம் வர்ணித்துச்சொன்னு லும்முடியாது. அவரைமணஞ்செய்துக்கொள்வதற்குயாங்களெல்லாம் அநேகநாள் விரதமனுஷ்டித்தோம் அப்படிப்பட்ட மஹானுபாவருன் மீது ஆசையுற்றதையோசிக்கையில் உன்னுடைய பூர்வபுண்ணியவச மென்று நினைக்கின்றோம்.

அல்லியரசாணியோசித்த சொல் - விருத்தம்.

இவ்வண்ணமூவரோத இவ்சினமகன்றதாலே
கொவ்வைசேர்மொழிமாரோடு கோபிபாதமர்ந்துநீடு
ஒவ்வியே புகழ்விளங்கும் ஒப்பிலா வல்லிதானும்
செவ்விதழ்வாய்திறந்து சொல்லுவாளினிமையாக

(அல்லியரசாணி) பெண்களே யானுங்களைப்போல அழகுள்ள புருஷன்வேணுமென்று விரதமனுஷ்டித்தாலல்லவோ அருச்சுனராஜனைத் தேடவேணடும் யான் இராஜாக்களைப்போல சிரசில் நவரத்தினமகுடமணிந்து கரத்தில் செங்கோலேந்தி இராஜரீகஞ் செய்துகொண்டிருப்பதைவிடுத்து ஒரு அரசனுடையமனைவியாயிருப்பேனு நில்பார்ப்பவரென்னை பரியாசஞ்செய்யார்களா?

துரோபதை அல்லியரசாணிக்குச்சொல் - விருத்தம்.

மதித்திடுங்கழுத்திற்றாலி மைந்தனுங்கர்ப்பந்தன்னில்
விதியினாலமைந்திருக்க வீணெண்ணங்கொள்ளவேண்டாம்
பதியில்வாழரசரெல்லாம் பார்த்துனையிகழ்ந்திடாமல்
மதியுடன்யாங்களோதும் மார்க்கம்போலிருப்பாயம்மா.

(வ-ம்) அம்மணி கணவனில்லாமாது கழுத்தில்மங்கிலியமும் வயற்றில்பிள்ளையுமாயிருக்கிறாளென்று உலகோர்நகைக்காவண்ணம் அருச்சுனரைமணம்புரிந்துக்கொள்ளும்மா.



(அல்லியரசாணி) சரி! அப்படியேசெய்வோம் கதவைத்திறப்பீர்.

(துரோபதை) அப்படியானால் உன்கையிலிருக்கும் வாளாயுதத்தை முன்னெல்வழியாகயெறிந்துவிட்டு என்வார்த்தையைத்தள்ளாமல் நடப்பேனென்று பிரமாணிக்கஞ்செய்வாயாகில் நம்புவோமம்மா.

(அல்லியரசாணி) இதோவாளாயுதத்தையுமெறிந்துவிட்டேன்நீங்கள் சொன்னவார்த்தையையுந்தவறிநடக்கேனென்றுபிரமாணிக்கமுஞ்செய்தேனம்மா.

(துரோபதை) பிராணநாதரே புலிக்கூண்டைத்திறந்துவிடுவீர்.

(சகாதேவன்) அப்படியே இதோ திறந்துவிடுகிறேன்.

புலிக்கூண்டிலிருந்த அல்லியரசாணிக்கு
பல்லக்குசிங்காரித்துக்கொண்டு வருகிற - விருத்தம்.

பல்லெனதாப்பாள் தன்னை படீரெனத்திறக்கும்போது
சொல்லொணுசூர்யகாந்தி சொரூபம்போலேஜொலித்து
உல்லாசமாய்விளங்கி யுலகெலாம்புகழல்லிக்கு
பல்லக்குசிங்காரித்து பட்சமாய்கொண்டுவந்தார்

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே சகாதேவன் புலிக்கூண்டின் தாப்பாளைப் படீரெனத்திறக்கும்போது எதிரிலிருப்போர் கண்கூசும்படியாக உதயகாலசூரியன் தனது ஆயிரங்கிரணங்களோடு புறப்பட்டாற்போல பிரகாசிக்கும் அல்லியரசாணியின் வடிவலங்காரத்திற்கேற்றாப்போல நவரத்தினங்களிழைத்த முத்துச்சிவிகையை மணமிகுந்த நறுமலர்களாற் சிங்காரித்துக் கொண்டுவரவும் அதன்மீது ஆரோகணித்து குளிர்ச்சிபொருந்திய பூரணச்சந்திரனைப்போலப் புறப்படும் விதங்காண்க.

அல்லியரசாணியை பல்லக்கிலேற்றிக்கொண்டுவருகிற-தரு.

இ-ம்-புன்னாகவராளி-சாப்புதாளம்.

பல்லவி.

பல்லக்கிலமர்ந்தனளே—சிங்காரமாய்
பல்லக்கிலமர்ந்தனளே

அநுபல்லவி.

தொல்லுலகம்புக                    ழல்லியரசாணி
வல்லமையாளென்னும்          வழங்குந்துரைசாணி. (பல்லக்கி)

சரணங்கள்.

சந்திரனைப்போலும்—புகழுள
சூரியனைப்போலும்

சுந்தரமேனியாள் வந்ததேயாவரும்
சிந்தைமகிழ்ந்திட முந்திபுகழ்ந்திடும் (பல்லக்கி)

அரண்மனை தன்னிற்புக—மானந்தமா
யாவலாச்சென்றுமகி
ழிந்திரன்சேடன் விஜயனுங்கொண்டாட
வந்தபெண்களெல்லாம் வாழ்த்திமங்களம்பாட (பல்லக்கி

பொது - விருத்தம்.

பல்லக்கிலேற்றியன்பா யரண்மனைக்கழைத்துவந்து
எல்லோருமானந்தித்து இன்புடனமுதருந்தி
அல்லியைவிஜயனுக்கு அன்புடன்விவாகஞ்செய்ய
தொல்லுலகரசருக்குத் திருமுகமெழுதுகின்றார்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணியைப் பல்லக்கிலேற்றிக்கொண்டு அரண்மனைக்குவந்து அனைவரும் போஜனம் அருந்தி தாம்பூலந்தரித்துக்கொண்டபிறகு கலியாணமுகூர்த்தபந்தக் கால்நாட்டி அருச்சுனனுக்கும், அல்லியரசாணிக்கும் மங்கிலியஸ்திரீகளால் கலங்கிட்டு மனமகிழ்ந்து தேசதேசத்தரசர்களுக்குந் திருமணப் பத்திரிகை எழுதும்விதங்காண்க.

சகலதேசத்தரசர்களுக்கும் தருமர்
திருமணப்பத்திரிகை எழுதுகிற - சீட்டுக்கவி.

சீர்கொண்ட ஐம்பத்தி யாறுதேசத்தரச
சித்தசனை யொத்தவடிவாய்
சிங்கார மகுடமுடி செங்கோ லணிந்துவாழ்
சிறந்தபுகழே யிலகிடும்
பேர்கொண்ட ராஜாக்கள் வருகையை எதிர்நோக்கி
பெருமையா யெழுதுதிருபம்
பெட்பிலகு விஜயனுக் கன்புடன் அல்லியை
பேசுதசமித் திங்களில்
நேர்கொண்ட கலியாண திருமணஞ் செய்வதால்
நேர்ந்ததோர் சுபதினமதில்
நெஞ்சம் புகழ்ந்துமகி ழெல்லோரு மானந்த
நேர்மையோ டிங்குவந்து
தார்கொண்ட புவிமீது பேர்பெற்ற யிருவரும்
தழைத்துமிக வாழ்வதற்கு
தங்கள்கை யக்ஷதைத் தூவிவாழ்த் திடவேண்டுந்
தமியன்வின் ணப்பமிதுவே.

இப்படிக்கி
தங்கள் வருகையையெதிர்பார்க்கும்,
தருமபுத்திரமகாராஜன்.



(தருமர்) கணக்கப்பிள்ளை! இவ்விதமாக ஐம்பத்தியாறு திருபங்களெழுதிக்கொண்டுவருவாய்.

(கணக்கப்பிள்ளை) அரசே! இதோ எழுதிக்கொண்டுவந்தேன்.

(தருமர்) தூதர்களே இந்த திருபங்களையெடுத்துக்கொண்டுபோய் சகலதேசத்தரசர்களுக்கும் கொடுத்துவிட்டு வருவீர்கள்.

(தூதர்கள்) அப்படியே மஹாபாக்கியமையா.

தூதர்கள் இராஜாக்களுக்கு திருமணப்பத்திரிகைக்
கொடுப்பது - கவி.

வாசம்வீசுந் தேசத்தரசே
மாசற்றோலை நேசத்துடனும்.

(வ-ம்) மகாராஜாக்களே தருமபுத்திரமஹாராஜர் திருமணப்பத்திரிகைகொடுத்தனுப்பினார் பெற்றுக்கொள்வீர்கள்.

இராஜாக்கள் திருமணப்பத்திரிகையை வாசித்துப்பார்த்து
பந்துஜனகுடும்பசகிதமாய் தருமபுரிக்கு
வருகிற - விருத்தம்.

தேசத்துமன்னரெல்லாந் தேரேறிவந்தபின்பு
ஆசனமவர்க்களித்து ஐவருமுபசரித்து
பாசமாய்விவாகஞ்செய்ய பரம்வானழைப்பந்தலிட்டு
ஆசையாயிருவருக்கும் அலங்காரஞ்செய்திட்டாரே.

வ-ம் கேளுங்களையா சபையோர்களே திருமணப்பத்திரிகையை வாசித்துப்பார்த்த இராஜாராஜாக்களும், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர்முதலானயாவரும் தங்கள் தங்கள் பந்துஜனகுடும்ப சகிதமாய் தர்மாபுரியில்வந்து கலியாணமண்டபத்தில்வீற்றிருக்கும்போது பஞ்சபாண்டவர்கள் வந்தஜனங்களை உபசரித்து அல்லியரசாணியையும், அருச்சுனராஜனையும் சிங்காரித்தபிறகு நடக்கும் விதங்காண்க.

திருமணமஹோற்சவவைபவம் - தரு
இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

கலியாணவைபவக்—காட்சியையரசர்கள்
கண்டுமனமகிழ்ந்தார்

அநுபல்லவி.

அலைகடல்சூழ்புவி அரசர்களித்திட
நிலைமைவிளங்கும் விஜயானந்தமென்றிட (கலியாண

வாழைக்கமுகுபலா தென்னையாலலங்கிர்த
 வழக்கும் பந்தல் கூட்டி—வரிசையாக
கோரணைமலமேலே குத்துவிளக்கேற்றி
 குளோப்புலஸ்தர்கள் மாட்டி

வாழுமலங்கிர்த வாத்தியம்படித்து
தாழுதலில்லா தந்துமாசறைந்து
எழுவிதக்சேரி ஏற்பாடுமுடித்து
சூழும்நடனமாதர் , சொகுசுடன்கடித்து (கலியாண)

பெண்ணும்பின்னையங்கை கோர்த்துவல்லாசமாய்
 பெருமையாயரசாணி—சுற்றிவரவும்
என்னுதலில்லாத மேளவாத்தியங்களும்
 இசைக்கவே யபிமானி

கன்னியர்கூடி கருதலாலிமங்களம்
பன்னுமலங்கார பாடுஞ்சங்கீதம்
உன்னதமாகவே யுரைத்திடலுங்கும்
என்னசிங்காரமென எல்லோரும்பொங்கும் (கலியாண)

(பிராமணர்) அருச்சுனா இந்த ஓமாக்கினியில் நெய்வார்த்துக்கொண்டிருப்பாய்.

பிராமணர்சொல் - சுலோகம்.

சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப் புஜம்
பிரசன்ன வதனந் தியாயே
சர்வ விக்னோப சாந்தயே.

(வ-ம்) அருச்சுனா கணேவரைசேவித்துக்கொள்ளுவாய்.

சுலோகம்.

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விலம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

(வ-ம்) அருச்சுனா இந்த மங்கிலியத்தை அல்லியரசாணிகழுத்திலணிந்து இருவரும் அரசாணியைச்சுற்றிவாருங்கள்.

அம்மா நீ இந்த அம்மியை மிதித்து அருந்ததியைப் பார்ப்பாய்.

அல்லியர்ச்சுனர்களே பாலும்பழமும்புசித்து மனமகிழ்வீர்கள்.



அல்லியரசாணியும், அருச்சுனனும் பிராமணரை
சேவித்துக்கொள்வது-விருத்தம்

மன்னர்களெவருங்காண மணமுடிந்தானபின்பு
அன்புடன்பழமும்பாலும் அல்லியர்ச்சுனருந்தி
நன்மைசேர்வேதியர்க்கு நமஸ்காரஞ்செய்யும்போது
இன்புடன்வாழ்வீரென்று இனிமையாய்வாழ்த்தினாரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே அல்லியரசாணியும், அருச்சுனனும் பாலும்பழமும்புசித்து மனமகிழ்ந்து வேதியரைநமஸ்காரஞ்செய்து அவரால் ஆசிர்வதிக்கப்பெற்று சுசஜீவியாய்வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள்.

கலியாணச் சடங்குகள் யாவுமுடிந்தபின்
இராஜாக்கள் அவரவரிருப்பிடம்போய்ச்சேருதல்-விருத்தம்.

கலியாணமுடிந்தபின்பு களித்தமு தண்டோரெல்லாம்
சலியாமல்தேசத்திற்குச் சந்தோஷமாகச்சென்றார்
வலிமைசேர்விஜயனோடு வல்லியும்மகிழ்ந்தன்பாக
சிலதுநாளங்கிருந்து செலவியுமேகவென்றாள்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கலியாணச்சடங்குகளெல்லாம் முடிந்தபிறகு எல்லோரும் தருமராஜனிடம் விடைபெற்றுக்கொண்டு அவரவரிருப்பிடத்திற்குப் போய்ச்சேர்ந்தார்கள். அல்லியரசாணி அருச்சுனனிடத்தில் சிலதுநாள் வாழ்ந்திருந்து மதுரைக்குப் போக உத்திரவுகேட்கும் விதங்காண்க.

அல்லியரசாணி அருச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

என்னிடபிராணநாதா எங்குமேபுகழ்பெற்றோங்கும்
மன்னனேயானின்று மதுரைக்குப்போகவேண்டும்
உன்னிடவாய்திறந்து உத்திரவளிப்பீரென்று
பன்னினேன்மகிபாவென்னை பக்ஷமாயனுப்புவீரே

(வ-ம்) பிராணநாதா யாங்கள் மதுரைக்குப்போகவேணும். ஆகையின் உமது முத்தான வாய்திறந்து உத்திரவளிப்பீர்.

(அருச்சுனன்) எனது ஆசைக்கிசைந்த அழகலங்கார சிங்காரகனிரச இதழுமுதே சந்தோஷமாய்ப் போய்வருவீர்கள்.

பாண்டியர்களும், அல்லியரசாணியும்
மதுரைக்கு வருகிற - தரு.

இ-ம்-புன்னாகவராளி-சாப்புதாளம்.

பல்லவி

மதுரைநகரே—பாண்டியரோடு
மாது அல்லிவந்தாள்

1740

அநுபல்லவி.

ரதமீசேறியன்பாய் ரவிமதியொளிவீசும்
வதனசிங்காரியென் மதித்துலகோர்பேச (மதுரை

சரணங்கள்.

பாண்டியர் முன்னாக—சேனைதளம்
பண்புடன் பின்னாக
தூண்டுஞ்ஜோதிபோற் துலங்கும்மதுரையை
ஆண்டுவாழல்லியும் அன்பாய்மகிழவே (மதுரை)
பலதெருவுங் கடந்து—பண்பாகவே
பாரவனந் தொடர்ந்து
சிலைவிஜயன்தேவி சிங்காரமாகவே
நிலையோடுவீரமாய் நீடூழிவாழவே (மதுரை)

அல்லியரசாணி புத்திரனைப்பெற்று மகிழ்ந்திருப்பது.

விருத்தம்.

அன்புடன்மதுரையேக அல்லியின்கர்ப்பந்தன்னில்
வன்மையாஞ்சிசுபிறந்து வளர்ந்திருந்தானந்தித்து
இன்பமாய்வாழ்ந்திருந்தார் ஈசனருகிருபையாலே
என்மனமகிழ்ந்திப்போது எழுதினேனவாசிப்பீரே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பாண்டியர் தவப்புத்திரியாகிய அல்லியரசாணி அருச்சுனமஹாராஜனை திருமணம்புரிந்து புவந்திரனென்னும் புத்திரனைப்பெற்று மனமகிழ்ந்து வாழ்ந்திருந்த இவ்வசரித்திரத்தை ஸ்ரீகிருஷ்ணபகவான் சகாயத்தினாலும் எனது குருஸ்வாமியாகவிளங்கி என்னையாதரித்து இரட்சிக்கும் கர்த்தவ்யமாகிய கனோனுடையகிருபையினாலும் நாடகலங்காரமாகஎழுதினேன்இச்சரிதையை மனமகிழ்ந்து வாசிப்பவர்களும், செவிக்கினிமையாக கேட்பவர்களும், அஷ்டைஸ்வரியமும் புத்திரசந்தானமும்பெற்று நித்தியானந்தமாய் வாழ்ந்திருப்பார்களையா கனவான்களே.

வாழி-விருத்தம்.

திங்களைச்சடையிற்சூடுஞ் சிவனடிக்கன்பர்வாழி
பைங்கொடியல்லியோடு பார்த்தனன்சிறந்துவாழி
எங்குநிறைந்தஜோதி எந்தையாங்கிருஷ்ணர்வாழி
மங்களநாதமாக மன்னவர்மக்கும்வாழி.

# அல்லியரசாணி நாடகம்

NO2 MK

முற்றிற்று.

—(*)—